ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

# கலசம்
# KALASAM

ஆவணி– புரட்டாதி– ஐப்பசி– 2013



அறமே ஆலயமாய் இலண்டன் ஈலிங்கில்
உதித்து ஊனமான எம்முறவு ஏற்றமுற
ஐயமிட்டு ஒழுகி ஓங்கிய ஔடதமே!
கருணைக் கடலே! காக்கும் கனகதுர்க்கையே!

பெருமையுடன் 21 வது வருடத்தில்

# RUBY'S


## CATERING

**020 8799 7180**

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|






**திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா**

**கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்**

**அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா**





**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton

THISTLE HOTEL London Heathrow

Holiday Inn

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: **020 8799 7180**

mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 21 **கலசம்** ஒலி 73


KALASAM

www.saivamunnettasangam.com

FREE ISSUE



# தொண்டா? தொழுகையா?



இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யும் அருளது வாமே. திருமந்திரம்- 280

இதயம், மனம், மனசு, உள்ளம், நெஞ்சகம் - இது எல்லோருக்கும் பொது. பலரது மனம் பூஞ்சோலை. சிலரது கரிசல் காடு.

பிறக்கும் போது உள்ளத்தில் ஒன்றும் இருக்கவில்லை. அப்போதும் அது உள்ளம் எனப்பட்டது. இப்போதும் அது உள்ளம் எனப்படுகிறது! நல்லதும் அல்லதும் நிறைந்து வழிகின்றது.

உங்களது உள்ளம் பூஞ்சோலையா? கரிசல் காடா? உங்கள் உள்ளம் - அது இனிய தமிழ் மன்றம். வசந்த மணம் பரப்பும் ஒரு மலர்ச் சோலையே. அதெப்படி என் மனதுக்குத் தெரியும்?

கல்லான மனமென்றால் கலசத்தைக் கையில் எடுத்திருப்பீர்களா? சைவத்து சித்துப் பொருளைப் பற்றிச் சிந்திக்கப் பழகி விட்ட உள்ளமல்லவா உங்களுடையது!

அருளொளி வீசும் உங்கள் நந்தவனத்து நல்ல உள்ளத்துக்கு நான் வரையும் பணிவான வசனங்களிவை. 'நான்' என்ற முனைப்பில் முறுக்கேறிய நான் இல்லை. சங்கத்து ஊழியன். உங்களுள் ஒருவன். நீங்கள் என்னை வைத்த இடத்தில் இருந்து வரைகிறேன்,

அறத்தால் வருவதே இன்பம் என்று எழுதிக் கை நீட்டினோம். நிதி திரட்டி நல்ல பணிகளைச் செய்து வருகின்றோம்.

*02.07.89 சங்கக் கட்டிடத் திட்டத்தைத் தொடக்கி வைத்த நாளில் எழுதியது - " இன்று இது உங்கள் வீட்டுப் பெண். இவள் ஆளாகிவிட்டாள். ஆராத்தி எடுக்க வாரீர்! அவளின் வருங்காலத்துக்கு ஸ்ரீதனமாக, இலட்சுமிகரமாக இயலுமானதைத் தாருங்கள். நீங்கள் கொடுப்பதில் பெருமையடையுங்கள். இவள் அதைப் பெற்றுக் கொள்வதில் இன்பமடைகிறாள். வசதியுடன் வளமுடன் வாழ்ந்து, பிறருக்கும் பயனுள்ளதாகத் தனது வாழ்க்கையை அமைக்க நோக்கம் கொள்கிறாள்...."*


*15.11.1997 அன்று இருபதாம் ஆண்டு நிறைவு விழா மலரில் " செய்தவை போதாதென்ற இனிச் செய்பவை சிறக்க வேண்டுமென்று செய்யும் நமக்கு செய்ய வீடொன்று வேண்டுமென்று உணர்ந்தோம். வீடுதோறும் நாடிச் சென்று பொருள் சோத்து பாடியும் பரவியும் பல நிகழ்ச்சிகள் காட்டியும் பணம் சேர்த்தோம். பார்த்திருந்து காத்திருந்து சங்கத்தைக் காத்திடவே கட்டிடம் ஒன்று கைக் கொண்டோம். இன்னும் சில நாளில் அது இயங்கிட இசைவானதே காலம்...."*

*31.08.2002 அன்று நடைபெற்ற வெள்ளி விழா மலரில் " மனிதர் நாம் குடும்பமாக வாழ்கின்றோம். குடும்பங்கள் பல இணைந்து சொந்த பந்தங்களாக இன்ப துன்பங்களில் பங்கெடுக்கின்றன. இவ்வாறு மாந்தர் பிறருடன் கூடிவாழ்தல் கூட்டு வாழ்க்கை. வழிமுறைகள், மொழிப் பழக்கம், சமயப் பண்புகள், நம்பிக்கைகள், கட்டுப்பாடுகள் இவைகளைப் பொதுவாகக் கொண்டு ஒருவருடன் உறவு வைக்கின்றோம். தேவை ஏற்படும் போது ஒருவருக்கொருவர் உதவி செய்கின்கின்றோம். உள்ளத்தால் ஒன்றுபட்டு பொது நோக்குடன் வாழ முனைகின்றோம். இவ்வாழ்க்கையைக் கூட்டுவாழ்க்கை என்போம். சைவ முன்னேற்றச் சங்கம் கூட்டு வாழ்க்கையைக் காட்டும் ஓர் அமைப்பு. அக்கூட்டு வாழ்க்கைப் பண்பில் உருவாகி வளர்ந்து மேலும் வளர முனைந்துள்ளது எமது சங்கம்.....*


இவைகளை ஏன் மீண்டும் நினைவில் கொண்டு வருகிறேன்? சங்கம் வளர்ந்து கொண்டே வருகின்றது. சேவையின் தேவையும் விரிவடைகின்றது. தொண்டு செய்யும் நாம் தொழ என்று ஒரு சந்நிதியும் அமைத்தோம் நாயன்மார்கள் உருவச் சிலைகள் இருந்த இடத்தில் நடராஜப் பெருமானும் வந்து குடி கொண்டு ஆண்டுகளாகின்றன. சங்கத்தின் தொண்டும் ஆலயத் தொழுகையும் இணைந்து கொண்டன. ஆலயத்தின் அமைப்பை விரிவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று. அன்று பாடமாக்கியதுதான். ஆழ்ந்து பார்த்தால் அற்புதமான கூற்று. என்றும் சத்தியமான வசனம். அகத்தைக் கழுவ ஒரு நல்ல வழி. அறங்களை வளர்த்து ஆக்கமான சேவைக்கு நாட்டம் கொள்ள வைக்கும் நல்ல பழக்கம். வழிபாடு எம்மை வழிப்படுத்துகிறது. இதன் மூலம் கிடைக்கும் மன வளர்ச்சியும் பக்குவமும் மக்கள் சேவையிலும் அறமான வழிகளிலும் எம்மை உட்படுத்த வழிபாடு வழிப்படுத்துகிறது.

நாம் செய்து வந்த பணிகளைத் தொடரும் அதே வேளை எம் ஆலயத்தின் ஊடாகவும் சமுகத்துக்கு இன்னும் பல்லாண்டுகள் உழைத்திட முடியமெனத் திடமாக நம்புகிறோம். இந்த எண்ணத்தில் தொண்டும் தொழுகையும் ஒன்றாகி எமது பணி சிறக்க நீங்கள் உதவ வேண்டும். எமது ஆலயத்தின் கட்டிட நிதிக்கு கை கொடுத்து எம்மை உயர்த்திட வேண்டுமென இன்று இந்த எழுத்துக்களைக் கலசத்தின் வாயிலாக உங்கள் முன் வைக்கின்றேன்.




*'....சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்.*
*இன்ன வகையே எமக்கு எம் கோன் நல்குதியேல்*
*என்ன குறையும் இலோம் ....' - திருவாசகம்.*



*சதாசிவம் ஆனந்ததியாகர்*
*கலசம் ஆசிரியர்*

**08.10.1924** **முத்துத்தம்பி சிவராசா** **21.08.2013**





யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் பிறந்து கொழும்பு விவேகானந்த சபையின் பொதுச் செயலாளராகவும், பரீட்சைச் செயலாளராகவும், அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளராகவும், திவ்ய ஜீவன சங்கம், ஆறுமுக நாவலர் சபை போன்ற பல சைவ நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உழைத்து இலங்கையின் தலை நகரிலும், யாழ்ப்பாணத்திலும் சைவமும் தமிழும் வளரத் தொண்டாற்றி இந் நாட்டில் எமது சைவ முன்னேற்றச் சங்கத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இருந்தவரும் எங்களால் திருமுறை ஞானப் பேரொளி எனப் பட்டமளித்து கௌரவிக்கபட்டவருமான சைவப் பெரியார் அமரர் முத்துத்தம்பி சிவராசா அவர்களின் மறைவு சைவ உலகத்தின் பெரும் இழப்பு.


சைவ நெறியில் நின்று மண்ணுலக வாழ்வை நிறைவு செய்து

சிவனார் திருவடிப்பேறு பெற்றுள்ள

## முத்துத்தம்பி சிவராசா

அவர்களுக்கு எங்கள் சங்கத்தின் அஞ்சலிகள்!

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்றிடத் சிவகதி தானே —திருமந்திரம்.



# விநாயகர் தோற்றம்

மு. சிவராசா

சிவபெருமான் முழுமுதற் கடவுள். படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்பவர். எல்லா ஆன்மாக்களுக்கும் போகத்தையும், மோட்சத்தையும் அருள வல்லவர். இந்திரன், பிரம்மன் முதலாய தேவர்களுக்கும் தேவர். அவர் தேவதேவர்.

தேவர் குலமும் அசுரர் குலமும் இயல்பாகவே ஒன்றுடன் ஒன்று பகைமை கொண்டது. போர் செய்து ஒரு போது தேவர்கள் வெற்றி கொள்ள, அசுரர்கள் தோல்வி அடைவதும், இன்னொரு சமயம் அசுரர்கள் வெற்றியடைய தேவர்கள் தோற்று அதனால் துன்புறுவதும் வழக்கம். இந்த வகையில் தேவர்களின் அரசனான தேவேந்திரன் அசுரர்களுடன் போர் செய்து வென்றான். அசுரர்கள் பலர் மாண்டனர். புறமுதுகு காட்டி ஓடித்தப்பிய அசுரர்களின் அரசன் தன் குலகுருவாகிய சுக்கிராச்சாரியரின் ஆலோசனைப்படி விபுதை என்னும் அசுர கன்னியை மாகத முனிவரிடம் அனுப்பி அவர்கள் மூலம் கஜமுகாசுரன் என்பவனைத் தோற்றுவித்தான்.

கஜமுகாசுரன் சிவனை நோக்கித் தவம் செய்து அளப்பரும் வலிமையுடன் சாகா வரமும் பெற்றான். வல்லமை பெற்ற கஜமுகாசுரன் தேவர்களைத் துன்புறுத்தினான். அவர்களைத் தன் அடிமைகளாக்கி அவர்கள் நாள்தோறும் தன் முன்னே வந்து தங்கள் சிரசிலே மும்முறை குட்டியும், கைகளால் காதுகளை மாறிப்பிடித்துத் தோப்புக்கரணம் போட்டும் வணங்கிய பின், தன் கட்டளைகளை நிறைவேற்றும் படியும் பணித்தான். தேவர்களும் அவ்வாறே செய்ய வேண்டியதாயிற்று. கஜமுகாசுரன் தரும் துன்பங்களைத் தாங்க முடியாத தேவர்கள் கைலாசமலைக்குச் சென்று சிவபெருமானைப் பிரார்த்தித்து வணங்கி, தம்துயரைத் தீர்க்க வேண்டினார்கள். சிவன் அவர்களின் துன்பம் தீர்த்தற்பொருட்டு ஒரு திருக்குமாரரைத் தருவதாக அருள் புரிந்தார்.

அதன் பின் சிவபெருமான் உமாதேவியாருடன் கைலாசமலையிலுள்ள பூஞ்சோலை ஒன்றின் சித்திரசாலைக்குப் போனார். சித்திரசாலையில் ஓர் ஓவியமாக இருந்த ஓம் என்ற பிரணவ எழுத்து அவர் அருளினாலே இரண்டாகப் பிரிந்து, ஒன்று ஆண் யானையாகவும், மற்றது பெண் யானையாகவும் வடிவெடுத்து ஒன்றோடு ஒன்று சேர்ந்தது. அதுகண்ட உமாதேவியார் அந்நிகழ்ச்சியின் காரணத்தைப் பெருமானிடம் வினவினார். அவர் "மூலமாயுள்ள பிரணவம் உன் பார்வையினால் இரண்டுருக் கொண்டு சேர்கிறது. உன் திருவருட் செய்கை வேதங்களுக்கும் எட்டாதது" என்று பதில் கூறினார். அந்த அளவில் யானைகள் இரண்டும் புணர்ச்சி நீங்கின. அப்போது யானை முகமும், மூன்று கண்ணும், தொங்கும் வாயும், சிவந்த சடையும் கொண்ட விநாயகக் கடவுள் தோன்றினார். அவர் தமது தாய் தந்தையரைப் பணிய, அவர்களும் அவர் மீது கருணை செய்தனர்.

பின்னர் சிவபெருமான் புதல்வரைப் பார்த்து "தேவர்களைத் துன்புறுத்தும் கஜமுகாசுரன் வலிமையை அடக்கும்படி பணித்து, பூத சேனைகளையும் கொடுத்தார். அவ்வண்ணமே விநாயகப் பெருமான் கஜமுகாசுரனை போர்க்களத்தில் எதிர்த்தார். இருவரும் பல்வேறு ஆயுதங்களை ஒருவர் மீது ஒருவர் ஏவிப் பொருதனர். சிவனிடம் பெற்ற வரங்களின் பலத்தால் கஜமுகனை எந்த ஆயுதத்தாலும் கொல்ல முடியவில்லை. ஈற்றில் விநாயகப் பெருமான் சிவபிரானைத் தியானித்து தமது தந்தங்களில் ஒன்றை முறித்து அசுரன் மீது எறிந்தார். அது அவன் மார்பைக் கிழித்தது. இரத்தம் கடல் போல் பாய அசுரன் நிலத்தில் வீழ்ந்தான். இரத்தம் பாய்ந்து தேங்கி நின்ற இடம் திருச்செங்காடு என்றத் தலமாக விளங்குகிறது. கஜமுகாசுரன் சாவா வரம் பெற்றவனாதலால் அந்நிலையில் ஒரு பெருச்சாளி உருவெடுத்து விநாயகரை எதிர்த்தான். அப்போது அசுரனின் ஆணவம் அடங்குமாறு திருவருள் நோக்கம் செய்த விநாயகர் " நீ என்னை வாகனமாகித் தாங்குதி" என்று அதன் முதுகின் மீது ஏறி அமர்ந்தார்.

கஜமுகாசுரனால் பட்ட துன்பங்கள் நீங்கப்பெற்ற தேவர்கள் விநாயகப் பெருமானைப் போற்றித் துதித்தார்கள். அசுரன் முன்னிலையில் தாம் செய்ததுபோல சிரசில் குட்டியும், தோப்புக்கரணம் போட்டும் வழிபட்டனர். அவ்வாறு வழிபடுவோர் யாவரே எனினும் அவர்களின் துன்பங்களை நீக்கியருளுமாறு விநாயகப் பெருமானிடம் வரமும் பெற்றார்கள்.

விநாயகரின் வேறு நாமங்கள்- கணபதி, ஏகதந்தர், ஆனைமுகன், விக்கினராஜன், சுமுகன், லம்போதரன், வக்கிரதுண்டர், ஏரம்பர்.





பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர்இடர்
கடிகண பதிவர அருளினனவடிவினர்
பயில்வலி வலமுறை இறையே

-சம்பந்தர் திருமுறை

## சங்க சிதம்பரேஸ்வரர் ஆலயம்

## நடேசர் அபிஷேகத் தினங்கள்



| | | |
|---|---|---|
| 18.09.2013 | புரட்டாசி சதுர்த்தசித் திதி | மாலை |
| 18.12.2013 | மார்கழித் திருவாதிரை | காலை |
| 13.02.2014 | மாசி சதுர்த்தசித் திதி | மாலை |
| 22.04.2014 | சித்திரைத் திருவோணம் | காலை |
| 04.07.2014 | ஆனி உத்தரம் | காலை |
| 07.09.2014 | ஆவணி சதுர்த்தசித் திதி | மாலை |
| 07.10.2014 | புரட்டாசி சதுர்த்தசித் திதி | மாலை |
| 04.01.2015 | மார்கழித் திருவாதிரை | காலை |


## ஆனி உத்தர அலங்காரத் திருவிழா

| | |
|---|---|
| 25.06.2014 | முதலாம் நாள் திருவிழா |
| 04.07.2014 | பத்தாம் நாள் திருவிழா |

## சம்பத்சரா அபிஷேகத் தினம் - ஆலய கும்பாபிஷேகம் நிகழ்ந்த நாள்.

| | |
|---|---|
| 14.07.2014 | ஆனித் திருவோணம் |

கேள்வி — பதில்




***கோயிலுக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பதால், செய்கின்ற பாவங்கள் தீருமா?**

*அனைத்தும் தீருமா தீராதா என்பது நாம் செய்யும் தர்மத்தைப் பொறுத்தது. நாம் செய்யும் நல் வினைகளைப் புண்ணியம் என்றும் தீய வினைகளைப் பாவம் என்றும் அழைக்கின்றோம். எப்படி ஒரு வங்கியில் கடன் வாங்கியிருந்தால் நாம் பணத்தைச் திருப்பிச் செலுத்தினால் கடன் தீருகிறதோ, அது போல சில தீய வினைகளினால் விளைந்த பாவங்களை சில தர்ம காரியங்களால் விலக்கிக் கொள்ளலாம். சிலவற்றை அனுபவித்தேதீரவேண்டும்.

நாம் அழுக்குத் துணியைத் தூய்மைப் படுத்துவதற்காக சலவையாளரிடம் கொடுத்தால் அவர் துணியிலிருக்கும் அழுக்கைப் போக்கலாமே தவிர, துணியிலிருக்கும் கறையைப் போக்க முடியாது. துணி இருக்கும் வரை கறையும் இருக்கும். இது போன்று நமது வினைகளுக்கு ஏற்ப பலன்கள் மாறுபடும். எல்லா வினைகளும் ஒரே பலனைத் தராது. தவறு செய்பவர்கள் திருந்தினால் நாம் வரவேற்க வேண்டும். தவறு செய்தவர்களும் தங்கள் தவறை உணர்ந்து, இனியும் தவறு செய்யாமல் இருக்க கடவுள் வழி நடத்த வேண்டும் என்ற உயரிய நோக்குடன் நேர்த்திக் கடனைச் செலுத்தினால் கண்டிப்பாக அவர்களின் பாவ மூட்டைகளின் பாரம் குறையும்.

அவ்வாறு இல்லாமல், தவறு செய்தால் கடவுளுக்கு சிறிது கொடுத்து தப்பிக்கலாம் என்று தவறாகக் கடவுளைப் புரிந்து கொண்டார்களேயானால், அவர்களைக் கடவுள் காப்பாற்ற மாட்டார். அவர் அனைத்தும் அறிந்தவர். அவரிடம் நமது ஆதிக்க எண்ணங்கள் செயலிழந்து போய்விடும். எப்படி ஒரு கடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு, மருத்துவர் சிறப்புக் கவனம் செலுத்துகிறாரோ, அது போன்று தர்மத்துக்குத் தீங்கு விளைவிப்பவர்களை தன்னிடம் வரவழைக்கச் செய்து அவர்களையும் நல்வழிப்படுத்த கடவுளே அனுமதிக்கிறார். இதனாலேயே 'அவனருளாளே அவன் தாள் வணங்கி' என்கிறோம்.

தீயவர்கள் என்று நாம் எண்ணும் சிலரிடமும் சில நன்மைகள் இருக்கும். இல்லையேல் அவர்களால், ஆலயத்தில் நல்ல காரியங்களைச் செய்ய முடியாதே! ஆலயத்தில் ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டின் மூலம், எல்லா ஜீவராசிகளுக்கும் செய்யக்கூடிய தொண்டாக அவை மாறி, அதனால் கண்டிப்பாக அவர்களின் எண்ணங்களில் ஒரு மனத் தெளிவு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.



**- சம்ஸ்க்ருத பண்டிதர்**
**சண்முக சிவாச்சாரியார்**



# சைசமய வளர்ச்சியில் பெண்குலத் திலகங்களின் பங்களிப்பு

*திருமதி அன்னலட்சுமி முருகமூர்த்தி*

**கல்** தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய மூத்த தமிழும் சைவமும் பழமையானவை. சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவவமயத்திற்குச் சில சந்தர்ப்பங்களில் சோதனைகள் ஏற்பட்டதுண்டு. சைவசமயத்தின் வளர்ச்சிக்கு ஆண்பாலார் மட்டுமின்ற பெண் குலத்தவர்களும் பங்களிப்பு செய்துள்ளனர் என்றால் மிகையாகாது.

தேவாரம் பாடிய மூவருக்கும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்த காரைக்கால் அம்மையாரை எடுத்துக் கொள்வோம். புனிதவதியார் என்னும் இயற்பெயர் கொண்ட அம்மையார், பரமதத்தன் எனும் பெயருடைய ஒரு பெருவணிகனை கடிமணம் புரிந்திருந்தார். ஒரு முறை பரமதத்தன் வாணிபம் செய்யும் பொருட்டு சென்ற போது அவருக்கு இரண்டு சுவைமிக்க மாங்கனிகள் கிடைத்தன. அவற்றை அம்மையாரிடம் கொடுக்க, பசித்து வந்த ஒரு சிவனடியார் ஒருவருக்கு ஒரு கனியை அம்மையார் கொடுத்தார். மறுநாள் உணவு உண்ணும்போது கணவருக்கு மற்றைய கனியைக் கொடுத்தார். சுவையினால் ஈர்க்கப்பட்ட பரமதத்தன் மற்றைய கனியையும் தரும்படி கேட்டார்.

புனிதவதியார் உள்ளே சென்று மனம் உருகி இறைவனை வேண்டினார். இறைவனின் அருளால் அவருக்கு இன்னொரு மாங்கனி கிடைத்தது. இதை அறிந்த பரமதத்தன் அளவிலா வியப்பு அடைந்தான். புனிதவதியாரின் இறை பக்திக்கு தான் அருகதை அற்றவன் என உணர்ந்து அம்மையாரை விட்டுப் பிரிந்து வேறொரு பெண்ணை மணந்து வாழ்ந்து வந்தான்.

இதனால் மிகவும் மனமொடுங்கிய புனிதவதியார் இறைவனிடம் இறைஞ்சி பேயுருவம் பெற்றார். இறைவனே அவரை "அம்மையாரே" என அழைத்து என்ன வரம் வேண்டும் என்று வினவினார். அப்போது காரைக்கால் அம்மையார்

*இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்*
*வேண்டு கின்றார்*
*பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்*
*உன்னை என்றும்*
*மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான்*
*மகிழ்ந்துபாடி*
*அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ்*
*இருக்க என்றார்.*

(பெரிய புராணம் - சேக்கிழார்)

என வேண்டினார். இறைவனும் அப்படியே வரம் தந்தார். அம்மையார் திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இயற்றி சைவத்தின் மாண்பை மிளிரச் செய்தார்.

இனி அடுத்து, பல்லவர் ஆட்சிக் காலத்தில் சைவசமயத்திற்கு மற்றுமோர் சோதனை ஏற்பட்டது. சமண சமயப் பிரசாரம் பரப்புதல் உச்சக் கட்டத்தில் இருந்த நேரமது. அச்சமயத்தில் பாண்டிய மன்னனும் மதியிழந்து சைவத்தை விட்டுச் சமண சமயத்தைத் தழுவியிருந்தான். ஆனால் பாண்டிய அரசியான "மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கைமடமானி" (திருஞானசம்பந்தர் பாடல்) மட்டும் சைவ சமய நெறியிலிருந்து விலகவில்லை. அரசிக்கு ஆதரவாக அமைச்சர்



குலச்சிறையாரும் இருந்தார். இந்நிலையில் திருஞானசம்பந்தப் பெருந்தகை, அடியார்களுடன் மதுரைக்கு அருகில் உள்ள ஒரு தலத்தில் எழுந்தருளியிருப்பதை அறிந்த பாண்டி மாதேவி, ஆளுடைய பிள்ளையாரையும் அடியார்களையும் மதுரைக்கு அழைக்க சம்பந்தப் பெருமானும் அரசியின் வேண்டு கோளுக்கு இணங்க எழுந்தருளினார். பாண்டிய அரசன் வெப்பு நோயினால் பீடிக்கப்பட்டு வருந்திக் கொண்டிருந்தான். சமண மத ஆச்சாரியர்களால் எவ்வளவு முயற்சியெடுத்தும் அரசனிற்கு ஏற்பட்ட சூலை நோயை மாற்ற முடியவில்லை. பாண்டிய அரசனுக்கு ஏற்பட்ட நோயைக் குணப்படுத்துமாறு

ஞானசம்பந்தப் பெருமானை பாண்டிய அரசி மனமுருக வேண்டினார். ஆளுடைய பிள்ளையாரும் இறைவனை வேண்டிக் கொண்டு திருநீற்றை அரசனின் உடலில் பூசிக்கொண்டே

*"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு*
*சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு*
*தந்திர மாவது நீறு சமயத்திலுள்ளது நீறு*
*செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே"*

எனத்தொடங்கும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடி முடிக்கவும் அரசனைப் பீடித்திருந்த வெப்பு நோய் நீங்கியது. அரசன் மீண்டும் மனம் மாறி சைவ சமயத்தைப் பின்பற்றத் தொடங்கினான். பாண்டி நாட்டில் மீண்டும் சைவசமயம் தழைத்தோங்க வைத்த பெருமை பாண்டிமாதேவியையே சாரும். மீண்டும், சமணசமயத் தாக்கத்தினால் சைவ சமயத்திற்குச் சோதனை ஏற்பட்டது. ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தரும் அப்பரடிகள் என்று போற்றப்படும் திருநாவுக்கரசு நாயனாரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் ஆவர். அப்பரடிகள் சைவசமயத்திலிருந்து சமணமதத்திற்கு மாறியிருந்த காலமது. இதனால் மனமுடைந்திருந்த அப்பரடிகளின் சகோதரி திலகவதியார் தனது தம்பியை சைவசமயத்திற்கு கொண்டுவருமாறு திருவீரட்டானத்துறை சிவபெருமானை வேண்டி வழிபட்டு வந்தார். இறைவன் அவருக்கு சூலைநோயைக் கொடுத்து அப்பரடிகளை வருந்தச்செய்தார். சமணர்களினால் அப்பரடிகளின் நோயைக் குணப்படுத்த முடியவில்லை. நோயின் கொடூரம் தாங்க முடியாமல் அவர் தனது தமக்கையாரிடம் வந்தார். திலகவதியார் கோயிலுக்குச் சென்று கடவுளை வேண்டுமாறு புத்தி கூறினார். அப்பரடிகள் திருவீரட்டானத்துறை சென்று



*"கூற்றா யினவாறு விலக் ககலீர்*
*கொடுமை பலசெய் தனநா னறியேன்*
*ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்*
*பிரியா துவணங் குவன்எப் பொழுதுந்*
*தோற்றா தென்வயிற் றின்கம் படியே*
*குடரோ டுதுடக் கிமுடக் கியிட*
*ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில*
*வீரட் டானத் துறைஅம் மானே"*

எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி முடிக்க அவரை பீடித்திருந்த நோய் விட்டகன்றது. தமக்கையாரின் வழிகாட்டுதலால் மீண்டும் சைவம் தழைத் தோங்கியது. சிவநேயம்மிக்க சைவ மகளிர் வரிசையில் சேக்கிழார் பெருமான் இயற்றிய பக்திப் பரவசமூட்டும் பெரியபுராணத்தில் அறுபத்து மூன்று நாயனமார்களின் வரலாற்றிலும் சைவம் வளர்த்த பெண்திலகங்கள் தமது கணவன்மாரோடு இணைந்து பங்களிப்பு செய்துள்ளார்கள் என்பதையும் அறிகிறோம். உதாரணமாக இளையான்குடிமாற நாயனாரும், அவரின் இல்லத்தரசியும் தம் வயலிலிருந்து பெறும் வருமானத்தைப் பயன்படுத்தி பசித்து வரும் சிவனடியார்களுக்கு திருவமுது கொடுத்து பசிப்பிணியைப் போக்குவதை பழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இறைவன் அவர்களின் விருந்தோம்பலைச் சோதிக்க விரும்பினார். கொட்டும் மழையில் இரவு நேரத்தில் சிவனடியார்வேடத்தில் அவரின் இல்லத்துக்குச் சென்றார். அன்று. இளையான்குடி மாறநாயனாரின் இல்லத்தில் அமுது செய்ய அரிசி இருக்கவில்லை. என்ன செய்வது? நாயனாரின் மனைவி அன்று காலைதான் விதைத்திருந்த நெல்லை அள்ளி வரச் செய்து அதை உலர்த்தி உமி போக்கி திருவமுது சமைத்தார். தோட்டத்திலுள்ள இலையைப் பிடுங்கி சமைத்து சோற்றுடன் சிவனடியாருக்கு திருவமுது படைத்தார். அவர்களின் விருந்தோம்பலைக் கண்டு வியப்புற்றார் சிவபெருமான் உமாதேவியாருடன் காட்சி அளித்தார். இளையான்குடிமாற நாயனாரின் இல்லத்தரசியின் பங்கு மகத்தானது.

இச்சந்தர்ப்பத்தில் ஔவைப் பிராட்டியார் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய தொண்டை மறக்க முடியாது. ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற போன்ற அரிய தமிழ் நூல்களை இயற்றினார். பிள்ளையார் அகவல் பாடிக் கைலாயம் சென்றார். ஔவையாரின் கடவுள் பக்திக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டல்லவா?

இறுதியாக அண்மைக் காலத்தில் ஈழத்திரு நாட்டில் வாழ்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றி அமரத்துவமடைந்த சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியை நாம் கட்டாயம் நினைவு கூர வேண்டும். தேவாரம் பாடிய மூவர் காலத்து முன் வாழ்ந்து சமயத் தொண்டு புரிந்த காரைக்காலம்மையார், பின் வாழ்ந்த அறுபத்துமூன்று நாயன்மார்களினது இல்லத்தரசிகளின் தொண்டு இறுதியாக இந்தக் காலத்தில் வாழ்ந்து ஈழத்தமிழருக்கும் சைவ சமயத்திற்கும் தொண்டாற்றிய சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் சமயத்தொண்டு அளப்பரியது.

**"மேன்மைகொள் சைவநீதிவிளங்குக உலகமெலாம்."**

# திருத்தொண்டர் புராணம்-

## சுந்தரமூர்த்தி நாயனார் புராணம்



## பூத கணங்கள் மூலம் நெல் எடுப்பித்தது.

திருவாரூர் திருத்தலத்தில் சுந்தர மூர்த்தி நாயனார் பரவையாருடன் வாழ்ந்து வந்தார். திருவாரூக்கு அண்மையில் குண்டையூர் எனும் ஊர் உண்டு. அங்கு குண்டையூர்க் கிழார் என்று அழைக்கப்பட்ட வேளாளப் பெரியார் இருந்தார்.

நல்லொழுக்கமுள்ள இவர் சுந்தர மூர்த்தி நாயனாரைப்பற்றிக் கேள்விப்பட்டார். இறைவன், சுந்தரரை ஆட்கொண்டதையும் அவர் இப்போது ஞான நிலையில் திருவாரூரில் வாழ்ந்து வருவதையும் அறிந்தார். சுந்தரர்பால் ஈர்க்கப்பட்டார். அவரைக் காணாமலேயே அவர் மேல் பக்தி செலுத்தி வந்தார். சுந்தரரை ஞான குருவாக வரித்துக் கொண்டு அவருக்குத் தானமாக அன்றாட உணவுக்குத் தேவையானவற்றைத், தமது கமத்திலிருந்தே கொடுத்து வந்தார். இப்படி நீண்ட நாட்களாகச் செய்து வந்தார்.

குண்டையூர்க் கிழார், ஆரூரருக்கும் பரவையாருக்கும் அன்றாடத் தேவைக்கு இவ்வாறு பணி செய்து வந்தார். பரவையார் சிவனடியார்ருக்கு அன்னதானஞ் செய்து வந்தார். அதற்கு வேண்டியதை பொன்னாகச் சுந்தர மூர்த்தி நாயனார் இறைவனிடமே பெற்று வந்தார். இவ்வாறு கிழாரின் பணி தொடர்ந்து நடந்து வரும் நாளிலே குண்டையூரில் மழையின்றி, விளைச்சல் இன்றி பஞ்சம் ஏற்பட்டது. இந்தப் பெரியவரின் வீட்டு நெற் களஞ்சியமும் வெறுமை-யாயிற்று. இவர் பெருங் கவலை அடைந்தார். " நான் இன்று கொடுக்க வேண்டிய படி தவறுகிறதே. எனது மானம், வாய்மை எல்லாம் பழுதாகிவிட்டதே" என்று கலங்கி அன்று முழுதும் உணவு கொள்ளாமலேயே நித்திரையானார்.

அவர் கனவில் திருவாரூர்ப் பெருமான் " ஆரூரன் தனக்கு உன் பால் நெல் தந்தோம்" எனச் சொன்னார். உடனே கிழார் சுந்தர மூர்த்தி நாயனாரை நினைந்து வணங்கி படுக்கைவிட்டு எழுந்தார். வெளியே போய்ப் பார்த்தார். மலை போன்று நெற் குவியலைக் கண்டார். பட்டினியிருந்து கவலையுடன் துயின்றவருக்கு அதுவே தவமாகிவிட்டது. இறைவனிடம் அவர் நெல் கேட்கவில்லை. இறைவனே அழைத்துக் கொடுத்தான். அடியாருக்கு அடியாராக இருப்பவர்களுடைய பெருமையை நாம் இங்கு காணலாம்.

நெற்குவியலைக் கண்டு அதிசயித்தார். மகிழ்ந்தார். இறைவனைப் போற்றினார். நெல் மலையைப் பார்த்து மலைத்த கிழார் " இவ்வளவு நெல்லையும் நான் எவ்வாறு பரவையார் மாளிகைக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பேன்! நாயனாரிடமே விண்ணப்பிப்பேன்" எனத் தீர்மானித்து திருவாரூருக்குப் பயணமானார். தனது தேவைக்கு எடுக்கவில்லை. அங்கு திருவாரூரில் சுந்தரருக்கும், இறைவன் குண்டையூரில் நெல் இருப்பதையும் கிழார் வந்து கொண்டிருப்பதையும் அறிவித்தார். உடனே நாயனாரும் இறைவனைத் தொழுது குண்டையூரை நோக்கிப் புறப்பட்டார். எதிர் கண்ட குண்டையூர்க் கிழார் சுந்தரரை வீழ்ந்து வணங்கினார். " இன்று நான் நெல் கொடுக்க முட்டு ஏற்பட்டது. இறைவன் பெரு மலையாய் நெல் கொடுத்திருக்கிறார். தங்களிடம் சேர்ப்பிப்பது என்னால் ஆகக் கூடியது அல்ல" என்று பணிந்து கவன்று கவன்று நின்றார். நாயனார் அவரைத் தேற்றி உடனே குண்டையூருக்கு எழுந்தருளினார்.

அங்கு இருந்த நெற் குவியைலைக் கண்டு சுந்தரரும் அதிசயித்து இறைவனே இந்த நெல்லை எடுப்பதற்கு ஆள் தர வேண்டும், வேறெவராலும் முடியாது என்று உணர்ந்தார். கோளிலித் திருக்கோயிலை அடைந்து வழிபட்டு இறைவனுடைய உதவியை நாடினார். திருக்கோளிலி குண்டையூருக்கு அண்மையிலுள்ள சிறப்பான சிவத்தலமாகும். அங்கு வீற்றிருக்கும் இறைவனையும், பாகத்திலிருக்கும் அம்மையையும் புகழ்ந்து பதிகம் பாடினார்.

**நீள நினைந்தடியேன் உனை நித்தலும் கை தொழுவேன்**

**வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே**

**கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன்**

**ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே-**


என முதற்பாடலிலும், அடுத்து வரும் பாடல்களில் அம்மையையும், பரவையாரையும் குறித்துப் பாடிக் கடைக் காப்பும் பாடி முடித்தார். அப் பொழுது இறைவனுடைய அருள்வாக்கு அசரீரியாக " தொண்டனே இன்றிரவு நமது பூதப்படை இந்த நெல்லைப் பரவை மனைக்கு மட்டுமன்றித் திருவாரூர் நகர் முழுமைக்கும் நெல் மலைகளாகக் குவித்து வைக்கும்" என ஒலித்தது. சுந்தரர், திருக்கோளிலிப் பெருமானின் வாக்கைக் கேட்டு மகிழ்ந்து கிழாரிடம் விடைபெற்றுக் கொண்டு திருவாரூருக்குத் திரும்பினார். மறுநாட் காலை திருவாரூர் நகர் மக்கள் எல்லோரும் நெற் குவியல்களை எங்கும் கண்டு அதிசயித்தார்கள். பரவையாரும் மிக மகிழ்ந்து ஊரவருக்கு "எனது மாளிகையில் வந்திருக்கும் நெல் எனக்குப் போதுமானது, மற்ற மனைகளில் வந்திருக்கும் நெல்லை அவரவரே எடுத்துக் கொள்க" என்றார்.

பின் பரவையார் தனது பங்கு நெல்லைச் சேமித்து வைத்து பட்டறை கட்டிப் பாதுகாப்புப் பண்ணி அடியாருக்கு அமுதளிக்கும் பணியைத் தொடர்ந்தார்.

குண்டையூர்க்கிழாரின் ஆடம்பரமற்ற விளம்பரமற்ற அடக்கமான அதீத பக்தியினால் இத்தகு அற்புதம் நடந்ததைப் பார்க்கின்றோம். அவ்வாறே சுந்தரரை வழிபட்டு முத்தியடையந்தவர்களில் மற்றொருவர் திருமிழலைக் குறும்ப நாயனார். அப்பூதியடிகள் நாயனாரும் திருநாவுக்கரசரையே ஞான குருவாக வழிபட்டு முத்தியடைந்தமை சிவனடியார்களை வழிபட்டும் சிவனருள் பெறலாம் என்பதைத் தெளிவாகப் பெரிய புராணம் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

- இடைக்காடு சுயம்பு

# பிணங்கும் சமயங்கள் இணங்கும் சைவம்



குருவடி பணிந்து - இ.லம்போதரன்

*புறச்சமய நெறிநின்றும் இகச்சமய ம்புக்கம்*
*புகல்மிருதி வழி உழன்றும் புகலும்ஆச் சிரம*
*அறத்துறைகள் அவை அடைந்தும்*
*அருந்தவங்ககள் புரிந்தும்*
*அருங்கலைகள் பல தெரிந்தும்*
*ஆரணங்கள் படித்தும்*
*சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத*
*சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்*
*திறத்தடைவர் இதில்சரியை கிரியா யோகம்*
*செலுத்தியபின் ஞானத்தால் சிவன் அடியைச் சேர்வர்*
-சிவஞான சித்தியார் 263ம் பாடல்

இங்கு புறச்சமயங்கள் என்றது கடவுள் இல்லை என்று கூறும் உலகாயுதம், பௌத்தம், சமணம். ஆகியமதங்களாம். கடவுள் என்று ஒருவர் இல்லை; இந்த வாழ்க்கை குறுகியது; இதற்குள் இளமை போவதற்குள் அனுபவிப்பதை எல்லாம் அனுபவித்து விடவேண்டும் என்று துடிப்புடன் ஓடியோடி அனுபவிக்கத் துடிப்பவர்கள் எல்லாம் உலகாயுதர்களே.

கடவுள் என்று ஒன்று இல்லை; நாம் நல்லதைச் செய்தால் நல்லதே நடக்கும்; தீயதையச் செய்கதால் தீயதே தீமையே விளையும் என்று கடவுளை ஏற்றுக் கொள்ளாமல் கர்மாவை ஏற்றுக் கொண்டுள்ள பலர் எம்மிடையே உள்ளார்கள்.

இவ்வாறு முடிந்தவரை மற்றவர்களுக்கு தீங்கு செய்யாமல் இயலுமாயின் நன்மை செய்து வாழ முயலும் சைவர்கள் எல்லாம் பெயரளவிலே சைவர்களாக உள்ள சமணர்களும் பௌத்தர்களுமே. தமது சுய முயற்சியால் அல்லது எத்தனிப்பால் தமது உள்ளத்தை தூய்மைப்படுத்தி ஆணவத்தை அடக்கி ஆன்ம விடுதலை பெறமுடியும் என்று கூறுகின்ற சைவர்களும் உண்மையில் பௌத்தர்களே.

சகல மதங்களையும் உள்வாங்கி ஏற்றுக் கொண்டு தனது அங்கங்களாகக் கொண்டுள்ள சைவம் கடவுளை ஏற்றுக்கொள்ளாத இவர்களை எல்லாம் தனது வெளி வட்டத்தில் உள்ள புறப்புறச் சமயங்கள் என்று இனங்காணுகின்றது.
கடவுள் என்று ஒருவர் உள்ளார் என்று ஏற்றுக்கொண்டுள்ள மதங்கள் எல்லாம் இதற்கு உள்ளாக உள்ள வட்டத்தில் வருகின்றன. இவ்வாறு கடவுள் உள்ளதை உணர்ந்து ஏற்றுக்கொள்ளுதல் பல பிறவிகளுக்கூடாகவும் வரலாம்; ஓரே பிறவியிலேயே இப்படி முறைகளினூடாக வரலாம்.

**தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி** — என்று **மாணிக்கவாசகர்** இதைக் கூறுகின்றார். இங்கு கடவுளை ஏற்றுக் கொண்டு வேதங்களை ஏற்றுக்கொண்ட சுமார்த்தம், வைணவம் முதலான இந்து மதப்பிரிவுகள் அடங்குகின்றன. இந்துமத வேதங்களையோ அல்லது அவை கூறும் கர்மா மற்றும் மறுபிறப்புக் கொள்கைகளையோ ஏற்றுக் கொள்ளா விட்டாலும் தெய்வம் உள்ளது என்று ஏற்றுக்கொண்டு தத்தமக்கு என்று புறம்பான வேத நூலகளைக் கொண்டுள்ள **கிறித்தவம், இஸ்லாம், யூதமதம்** போன்ற மதங்கள் கூட இப் பிரிவில்தான் அடங்குகின்றன.

கடவுள் என்று ஒருவர் இருக்கின்றார்; ஏற்றுக்கொள்கின்றேன். ஆயினும் நான் செய்யும் நல்லதும் கெட்டதும்தான் எனது வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றது. இதிலே கடவுள் தலையிட்டுச் செய்வதற்கு ஒன்றுமில்லை. அல்லது அவரால் அவ்வாறு தலையிட்டு என்னை மீட்கவோ அல்லது தண்டிக்கவோ முடியாது என்று கடவுளை விட நாம் செய்யும் நல்வினை தீவினை ஆகிய கர்மாக்கள் பலமானவை என்று கூறும் சைவர்கள் இருக்கின்றார்கள்.

இவர்கள் சைவர் என்ற பெயரிலுள்ள மீமாம்சகர்கள். **மீமாம்சகர்கள்.** நாம் செய்யும் கர்மாக்களினால் கடவுளையே எமது கட்டுக்குள் கொண்டு வரலாம் என்று நம்புபவர்கள். இதுபோல் எமது சுய முயற்சியினால் எமது உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி, எமது ஆணவத்தை அடக்கியே ஆன்ம விடுதலை கிட்டும் என்று எமது சுய முயற்சியிலேயே தங்கி இருப்பவர்களும் மீமாம்சகர்களே. பௌத்தர்ளும் இவ்வாறு தமது முயற்சி யினால் **பஞ்சசீலங்களை** மேற்கொண்டு **அட்டங்க யோகம்** வழி ஒழுகி வர ஆன்ம விடுதலை கிடைக்கும் என்று கூறுகிறார்கள். ஆயினும் அவர்கள் கடவுள் என்று ஒன்று உள்ளதாக ஏற்றுக்கொள்வதில்லை. இவ்வாறு பல கலைகளையும் புராணங்களையும் வேதங்களையும் அறிந்து தவ நெறிகளை மேற் கொண்டு ஒழுகி இவற்றின் உச்சமாக உள்ள உபநிடதங்களின் வேதாந்த கருத்துக்களை உணர்ந்து தெளிந்து அத்துவிதம், துவிதம், விசிட்டாத்துவிதம் ஆகியவற்றுள் ஒன்றைத் தமது வேதாந்த உணர்ந்து ஒழுகும் சைவர்கள் உண்மையில் சுமார்த்தர்களே.

# நல்லருள் தந்து நிற்கும் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன்

நாயே னையுங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய்நின்னை யுள்ளவண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
தாயே மலைமகளே செங்கண் மாறிருத் தங்கைச்சியே - அபிராமி அந்தாதி-61.





# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலய அறக்கட்டளை

## SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

5 Chapel Road, Ealing, London, W13 9AE, UK Tel: 0044 208 810 0835 Fax: 0044 208 840 0485
Email: info:ammanealing.com Web: www.ammanealing.com

கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில்
அவதியுறும் சிறுவர்களைப் பராமரிப்பதற்கென பயன்படுத்தப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1 | இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - பதுளை | 8 | அம்மன் மகளீர் இல்லம் - அம்பாறை |
| 2 | இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - திருப்பழுகாமம் | 9 | யோகர்சுவாமி சைவ மகளீர் இல்லம்- மட்டக்களப்பு |
| 3 | இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - செட்டிப்பாளையம் | 10 | சிறுவர் இல்லம் - ஊர்காவற்றுறை |
| 4 | திலகவதியார் இல்லம் - மட்டக்களப்பு | 11 | இந்து வித்தியாபிருத்திச் சங்கம் - யாழ்ப்பாணம் |
| 5 | யோகர் சுவாமி சிறுவர் இல்லம் - மட்டக்களப்பு | 12 | அன்பகம் - வவுனியா |
| 6 | விபுலானந்தர் இல்லம் - மட்டக்களப்பு | 13 | ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி இல்லம் - வவுனியா |
| 7 | விபுலானந்தர் இல்லம் - அக்கரைப்பற்று | 14 | ஸ்ரீ சத்தியசாயி இல்லம் - வவுனியா |

மேற்குறிப்பிட்ட இல்லங்களில் உங்கள் பேருதவியினால் 500 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். ஏராளமான வேண்டுதல்கள் இல்லங்களில் இருந்து வந்த வண்ணம் உள்ளன. அம்பிகை அடியார்களாகிய நீங்கள் முன்வந்து இன்னும் இப்பணிக்கு உதவவேண்டுமென வினயமாக வேண்டி நிற்கின்றோம். கடந்த ஆண்டில் 'காக்கும் கரங்கள்' திட்டத்திற்கு **£86,625.00** பவுண்களும் மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகளுக்கு **£ 154,085.00** பவுண்களும் அனுப்பப்பட்டுள்ளன. ஆலயம் தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரை எமது ஆலயத்தினால் தாயகப்பணிக்கு **£1,747,396.55** பவுண்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
























ஆதரவற்ற பிள்ளைகளை என்றும் அரவணைப்போம்!
அவர்களுக்கு வாழ வழிகாட்டுவோம்!
அவர்களுக்குப் படிப்பறிவித்து, இருளகற்றுவோம்.
அவர்களுக்கு கலங்கரை விளக்காக அமைவோம்.!
அவர்களை உயர்த்தும் ஏணிப்படியாக எங்களை அர்ப்பணிப்போம்.!

**தாய்ச் சங்கம் - கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க வைர விழா.**
**இவ்வாண்டு March மாதம் 29ம், 30ம் திகதிகளில் நடைபெற்ற விழாவின் சில பதிவுகள்.**


கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க பாலவிநாயகர் ஆலயத்தில் பூசையுடன் விழா ஆரம்பமாகிறது


விழா ஊர்வலத்தின் போது சங்க மாணவர்கள்



விழா ஊர்வலத்தில் தொண்டரணி உறுப்பினர்கள்


கொழும்பு வீதி வழியே ஊர்வலம் -மாணவர் பங்கேற்பு



விழா ஊர்வலத்தில் நால்வர் சமயப் பாடசாலை மாணவர்கள்


நால்வர் மணி மண்டபத்தில் பரிசளிப்பின் போது தலைவர் கா. தில்லைநாதன்



சங்க மாதரணிப் பெண்கள்


நால்வர் மணி மண்டபத்தில் செயலாளர் திரு. பெ. பூமிநாதன் உரையாற்றுதல்



கொழும்பு வீதி வழியே ஊர்வலம்


விழாவில் கலந்து கொள்ளச் சென்ற இலண்டன் சைவ முன்னேற்றச் சங்க திரு. இராமநாதன்

# your choice is CLEAR!




Come to Bluebell for..

INVISIBLE TOOTH STRAIGHTENING
GUM DISEASE TREATMENT
COSMETIC DENTISTRY
SMILE MAKEOVERS
GENERAL DENTISTRY
ORAL SURGERY & IMPLANTS
ENDODONTICS
CHILDREN'S ORAL HEALTH
EMERGENCY APPOINTMENTS
FACIAL REJUVENATION

**Book your FREE consultation today!**

## Bluebell is an Invisalign® Platinum Elite Provider.

**If you have teeth that stick out, are crooked, have gaps or overlap then Invisalign is the best choice for you with clear, almost invisible braces.**



*Dr Suki Kanagasabai-Shakthi is one of the leading Invisalign® dentists in the UK. With her unique approach to an ethical and non-evasive path of treatment she has become an Invisalign® Platinum Elite Dentist, a title which is only held by a privileged few dentists in the UK.*




Bluebell
dental practice & clinic
*Making a Difference*

CHIGWELL
**020 8500 6789**

STRATFORD
**020 8555 1144**

**www.bluebelldp.co.uk** f YouTube


GOSHIN ISSHINRYU KARATE ASSOCIATION
GOSHIN ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE SOLE AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Instructor
Sensei E Sanjiv
3rd Dan
President
Sensei M Ramathas
4th Dan
GOSHIN ISSHINRYU KARATE ASSOCIATION - BRANCHES
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas
Gants Hill • Newbury Park • Ilford Lane • Chadwell Heath • Sutton • East Ham
New Branch in Catford - 07958 010 139 - goshinisshinryukarate@gmail.com


SHARON
Importers, Wholesalers, Distributor & Retailers
Specialist in: Srilankan and Indian Products
Fresh Fruits
Vegetables
Fish
Groceries
Off Licence
Food Products
311-313 Mitcham Road, Tooting, London SW17 9JQ
T: 020 8672 9353
F: 020 8672 6353
E: sharonsfood@aol.com

skills for care Accolades

community care at HOME

INVESTORS IN PEOPLE | Gold

# SATASH COMMUNITY CARE

Providing Specific & Unique Individualised Person Centred Care for
People with Learning Disabilities
and associated mental health needs (Autism/Aspergers)

Adult Residential Care Services

Children Residential Care Services

Domiciliary Care

Short Break / Respite

Outreach

உடல் வலிமை குறை அல்லது மன நோய் காரணமாக
உங்களுக்கோ அல்லது உங்கள் உறவினருக்கோ உதவி தேவைப்படின்
பல ஆண்டுகள் அனுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள்.
அவரவர் தேவைகளுக்கேற்ற பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்து அதற்கொப்ப
செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பல ஆண்டுகளாகப் பாராட்டப்பட்டு வருகின்றது.
மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

Contact Us

01708 856592 (Adult's services)
01708 851189 (Children's services)
0203 200 1047 (Domiciliary care services)
07966 377298 (Logan)
07957 869620 (Letchmi)
logan@satashcommunitycare.com
letchmi@satashcommunitycare.com


S I Builders & DIY Ltd
Central Heating, Plumbing, Sanitary Ware,
Bathroom Suites, Electrical goods and paints
90-96 Katherine Road, London E6 12EN
Tel: 020 8471 1677
Open 7 days a week
Web: www.siplumbingandheating.co.uk
E-mail: si.buildres@hahoo.co.uk



# இமயம் பயணக் கட்டுரை

சாவகச்சேரியூர்
டாக்டர் க. கதிர்காமநாதன்

## யமுனோத்திரி

யமுனை நதியின் கோயில் யமுனோத்திரி. யமுனை சூரியனுக்கும். சஞ்சிகைக்கும் மகளாகப் பிறந்தாள். இவளுக்கு இயமனும், மனுவும் சகோதரர்கள். தாயார் சஞ்சிகையின் மறு உருவமாகிய சாயாவிற்கு மகனாகப் பிறந்தவரே சனீஸ்வரன் ஆகும். ஆகவே யமுனை தர்மம் காத்து, உயிரை எடுக்கும் இயமனுக்கும், சங்கடத்தில் மாட்டும் சனீஸ்வரனுக்கும் சகோதரியாவாள்.

யமுனா என்றால் சமஸ்கிருதத்தில் இரட்டை என்று பொருள். கங்கை நதிக்கு இணையாக, சமாந்திரமாக ஓடுவதால் இரட்டை என்று பெயர். யமுனை நதிக்கும் கிருஷ்ண பகவானுக்கும் சம்பந்தம் உண்டு. தந்தை வாசுதேவர் கிருஷ்ணன் பிறந்தவுடன் குழந்தையை ஒரு கூடையில் சுமந்து செல்ல யமுனை நதி பிரிந்து வழி விட்டது. இதைவிட கிருஷ்ணன் கோபியரோடு விளையாடியதும், மகிழ்ந்ததும் யமுனை நதியிலும், அதன் அண்மையிலுமே. யமுனை கிருஷ்ணரின் பாதங்களைக் கழுவியதால் புனிதமடைந்ததாகக் கூறுவர். இயமன் சகோதரி யமுனையிடம் மலையளவு அன்பு கொண்டவன். அவன் ஒரு துணைவனைத் தேடும்படிக் கேட்க யமுனை, கிருஷ்ணனையே தேர்ந்தெடுத்தாள்.

யமுனை நதி இந்தியாவின் உத்தர காண்ட பிரதேசத்தில் 10,800 அடி உயரத்தில் ஆரம்பிக்கின்றது. பின்னர் ஹரியானா, உத்தர பிரதேசம் செல்லும் போது தாஜ்மகாலின் அருகாமையிலும், டெல்லி, பிருந்தாவனம், மதுராவிற்கும் செல்கிறது. இறுதியில் அல்லகாபாத்தில் இருக்கும் திரிவேணி சங்கமத்தில் கங்கை, சரஸ்வதி நதிகளுடன் சங்கமமாகிறது.

யமுனேத்திரி கோயில், யமுனை உற்பத்தியாகும் இடத்திலிருந்து நான்கு மைல் தூரத்தில் உள்ளது. யமுனோத்திரி = யமுனை+ உத்தரி (வடக்கு). யமுனை நதி இங்கு வடக்கு நோக்கிச் செல்வதால் யமுனேத்திரி எனப்படுகிறது.

இந்தியா சென்றபோது மலைச்சரிவினால் முதலில் தடைப்பட்டிருந்த இப்பிரயாணம், இரண்டாம் முறை சாத்தியமானது. ஆனி மாதம் ஒரு சனிக்கிழமை காலையில் ஆங்கிலம், தமிழ் தெரியாத ஒரு சாரதியுடன், மனைவியும், நானும் ரிஷிகேஷத்திலிருந்து இமய மலை ஏறக்கூடிய ஒரு வாகனத்தில் பிரயாணமாகிறோம். செல்லும் பாதை கங்கோத்திரி சென்ற பாதையைவிட குறுகியதாகவும், செங்குத்தாகவும் இருந்தது. கடுமையான வெய்யிற் காலம். இயற்கை வளங்கள்- நெடிய பசுமையான மரங்கள், வண்ண வண்ண பூக்கள், காய்த்துத் தொங்கும் பழவகைகள், அவற்றின் வாசம் யாவும் மனதில் ஒரு தெம்பை ஏற்படுத்தின. இத்துடன் யமுனை நதி நீல நிறத்தில் ஓடுவது அழகான காட்சியாகும். சிறு ஊர்களைத் தாண்டிச் செல்லும் போது சிறுவர்கள் அப்பிரிகொட் (apricot) பழங்களை விற்றுக் கொண்டிருந்தார்கள். இப்பழங்கள் வெய்யிலுக்கும், பிரயாண அசதிக்கும் இதமாக இருந்தன.

பின்பு எமக்கு தாகம் ஏற்பட்ட போது ஒரு கடையில் வாகனத்தை நிறுத்தினோம். கடைக்காரர் அன்புடன் வரவேற்று தண்ணீர் வாளிக்குள் இருந்த குளிர்பாணப் போத்தல்களைத் தந்தார். வாளியில் இருந்த தண்ணீர்தான் இமய மலையில் குளிர்சாதனப் பெட்டி. இக் கடையருகில் இரு பெண்கள் பஸ்ஸிற்காக காத்திருந்தனர். இவர்கள் நல்ல சிவப்பு நிறம். ஒல்லியாகவும், லாவண்யமாகவும் மதுமதி திரைப்படத்தில் நடிகை வைஜயந்திமாலா தோன்றியது போன்று இருந்தனர். இங்கு பெண்கள் இயற்கையாகவே அழகாகவும் எளிமையாகவும் இருக்கிறார்கள்.

காலையில் ஆரம்பித்த பயணம் மாலை 5.30 மணிக்கு சோனாசட்டியில் முடிவடைந்தது. இங்குதான் யமுனோத்திரி கோயிலிருந்து வருவோரும், அங்கு செல்வோரும் தங்க முடியம். 6,800 அடி உயரத்திலிருக்கும் இவ்விடத்தில் “கலிந்தி” என்ற ஹொட்டலில் தங்கினோம். இதனருகே யமுனை நதி கிருஷ்ண பகவானின் நீல நிறத்தில் ஓடுகிறது. இங்கு சிலர் குளித்து தமது ஆடைகளைத் துவைத்துக் கொண்டிருந்தார்கள்.


சோனாசட்டியில் ஒரு சுவரஸ்யமான சம்பவம் நடந்தது. யமுனேத்திரி கோயிலுக்குச் சென்று திரும்பிய ஆங்கிலம் தெரிந்த ஒருவர் கடவுளைக் கண்டதாகச் சொன்னார். குதிரை மீது செங்குத்தான, ஒற்றையடிப் பாதையில் செல்லும் போது கற்கள் தடுக்கி குதிரை சறுக்கிவிட்டதாம். பீதியடைந்து ‘கடவுளே காப்பாற்று, காப்பாற்று’ என்று மன்றாடி உயிர் பிழைத்தது கடவுளின் அருளால்தான். கடவுள்தான் தன்னைக் காப்பாற்றினார் இதனால் கடவுளைக் கண்டேன், உணர்ந்தேன், பலன் பெற்றேன் என்றார். அவர் தமது பயணத்தின் போது அடைந்த சிரமங்களைக் கேட்ட எனக்குக் கலவரமான இருந்தது.

மறுநாள் காலை 8 மணிக்கு யமுனோத்திரி கோயிலுக்குப் புறப்பட்டோம். அனுமான்சட்டி மட்டும்தான் எம்மால் செல்ல முடிந்தது. இதற்கப்பால் ஜீப் மூலம்தான் மலையடிவாரத்தை அடையலாம் என உணர்ந்தோம். சனக் கூட்ட நெரிசலால் ஜீப் நிற்கும் இடத்தை நெருங்கவே முடியவில்லை. கடவுளின் அருள்தான் போலும், ஆங்கிலம் தெரிந்த தம்பதிகள் எமை அன்புடன் அழைத்து தமது ஜீப்பில் வரும்படிக் கேட்டார்கள். எமக்கேற்பட்ட நிம்மதியும், மகிழ்ச்சியும் விவரிக்க முடியாது. மனித நேயம் இமயத்திலும் இருக்கின்றது!

அனுமான்சட்டி கடல் மட்டத்திலிருந்து 8000 அடி உயரத்தில் உள்ளது. மலையடிவாரத்திலிருந்து ஏறக்குறைய 10 மைல்கள் குதிரையில் ஏறித்தான்

கோயிலை அடைய முடியும். வேறு ஒருவித வாகனத்திலும் பயணிக்க முடியாது. சிலர் 'தண்டி'யிலும் (நாற்காலி போன்ற மர ஆசனத்தில் இருத்தி நான்கு பேர் சுமந்து கொண்டு போதல்) இன்னும் சிலர் ஓர் ஆணின் முதுகில் உள்ள கூடை போன்ற இருக்கையில் அமர்ந்தும்





செல்வர்.

குதிரை என்பது மட்டகுதிரையைக் குறிக்கும். இது குதிரைக்கும் கோவேறு கழுதைக்கும் இடைப்பட்ட தோற்றம். எலும்பும், தோலுமாகப் பரிதாமமாக இருக்கின்றன. ஒரு கற்பாறையின் மேல் எங்களை நிற்கப்பண்ணி குதிரையை அருகில் கொண்டு வந்து எமது வலது காலைத் தூக்கி குதிரைமேல் ஏற்றினார்கள். கற்கள் மீது நடக்கும் போது குதிரை சறுக்கிச் சறுக்கிச் சென்றது. மேலே இருந்து திரும்பி வரும் குதிரைகளுக்கு இடம் கொடுக்க ஆங்காங்கே சற்று விசாலமான இடங்கள் இருக்கின்றன. மர ஆசனம் ஒரு புறம் உறுத்த, மனப் பயத்துடன் ஒரு மைல் போன பின் மற்றவர்களும் போகிறார்கள்தானே என எண்ணி மனதைத் திடப்படுத்திக் கொண்டேன்.

யமுனோத்திரி கோயிலுக்கு அருகாமையில் ஓடிய யமுனை நதியில் கை வைத்தவுடன் பனிக்கட்டி போல் குளிர்ந்தது. ஆதலால் நீரை எடுத்துத் தலையில் தெளித்துக் கொண்டு அருகில் இருந்த 'சுடுநீர்க் குண்டத்திற்குச்' சென்றோம். சூரியனின் மகளான யமுனையின் கோயில் அருகில் ஆவி பறக்க சுடுநீர் சிறு வீழ்ச்சியாக விழுகிறது. இதைப் பெரிய தொட்டி போன்ற ஒன்றில் தேக்கி வைத்திருக்கிறார்கள். இதில் இறங்கிக் குளிக்கலாம். ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி சிறு கேணி போன்ற தொட்டிகள் உள்ளன. இந்தச் சுடு நீர் எமது அலுப்பை மட்டுமல்ல மனப் பயத்தையும் போக்கியது.


யமுனோத்திரி ஒரு சிறு கோயில்தான். யமுனா மாதா கையில் கமலமும், கமண்டலமும் கொண்டு



கீழ்க்கைகளை தொடை மீது வைத்த கோலத்தில் வீற்றிருக்கிறாள். அருகில் கங்கா மாதா. ஒரே மக்கள் கூட்டம். பூக்கள், பழங்களை எடுத்துக் கொண்டு போயும் ஆறுதலாகத் தரிசிக்க முடியவில்லை. எனினும் நான்கு முறை வலம் வந்தோம். அருகில் இருந்த ஆஞ்சனேயரையும் வணங்கினோம்.

கோயிலிலிருந்து இறங்கி வருவது மிகமிகச் சிரமமான காரியம். அங்குமிங்குமாகச் சரிந்ததில் விழுந்துவிட்டேன். கடவுளைக் கண்டேன்! வேறு குதிரையில் ஏறி ஒருவாறு அடிவாரத்திற்கு வந்தோம். மீண்டும் சோனாசட்டியில் தங்கினோம். காலை முதல் பட்டினியாக இருந்த எமக்கு சாதம், இமய வெண்டைக்காய், பருப்புக் கறி, ஊறுகாய், அப்பளம் என்பன அமிர்தமாக இருந்தன. சாப்பிடும் போது ஒரு டாக்டரைச் சந்தித்தோம். அவர் ஸ்டதஸ்கோப்பை பாம்பு மாதிரி கழுத்தில் சுற்றிக் கொண்டு அங்குமிங்கும் திரிந்து பரமசிவனைப் போல் சேவை செய்து கொண்டிருந்தார். மருத்துவ வசதி இந்த இடத்தில் மட்டும்தான் கிடைக்கிறது.

அடுத்த நாள் காலை பெரிய விறகடுப்பில் ரொட்டி தயாரித்துத் தந்தார்கள். என்னே ருசி! ஊரில் இருந்த



போது அனுபவித்த பழையவை நினைவுக்கு வந்தன.

இமயம் பயணத்திலேயே யமுனோத்திரிதான் கடினமானதும் பயமானதும். எனினும் வயதானவர்கள், குழந்தைகள், சிறார்கள், நோயாளர்கள் என யாவரும் படையெடுத்து வருகின்றார்கள். இது இறைவனின் அருளே.

**இமயம் பின்னுரை:**

இப்பயணக் கட்டுரைத் தொடரில் கங்கோத்திரி (நதி) பசுபதிநாத் (சிவன்) கேதாரிநாத் (சிவன்) பத்திரிநாத் (விஷ்ணு) யமுனோத்திரி (நதி) ஆகிய புனித ஆலயங்கள் இடம்பெற்றன. யமுனோத்திரி, கங்கோத்திரி, கோதாரிநாத், பசுபதிநாத் ஆகிய இந்திய இமயப் பிரயாணத்தை 'சார்காம்' – 'chardam' என அழைப்பர். இவற்றுள் யமுனோத்திரியில் தொடங்கி பத்திரிநாத்தில் நிறைவடைவதே முறையாகும்.. இந்த வரிசையில் செல்வது காலநிலை, மண் சரிவு, போன்ற பல காரணங்களால் சிரமமாக இருந்தது.

சிவனின் சிரசிலிருந்து கங்கையும், விஷ்ணுவின் பாதத்திலிருந்து யமுனையும் வருவதாக ஐதீகம். அவன் அருள் இல்லாமல் இமயத்தை அடைய முடியாது. நாம் மொழி தெரியாமல், வழி தெரியாமல் பல இடங்களில் திண்டாடிய போதெல்லாம் உதவி

கிடைத்தமை கடவுள் கை கொடுத்ததையே காட்டுகிறது. இமய மலைப் பயணத்தில் பத்திரிநாத்தான் சுலபமானது. கோயில் வாசல் வரை பயணம் சற்று வசதியாக அமைகிறது. இதைவிட யாத்திரையின்போது ஐந்து நதிகளின் சங்கமத்தையும் கண்டு, தரிசித்துச் செல்லலாம். கங்கோத்திரியும் இது போன்றே சுலபமாக அமையலாம். ஆனால் சங்கமங்களின் காட்சிகள் பத்திரிநாத் போன்று இல்லை. எனவே இமயம் முழுவதையும் பார்க்க- தரிசிக்க முடியாதவர்கள் பத்திரிநாத் ஆலயத்திற்கு மட்டுமாவது பயணிக்கலாம்.


**"இமயத்தைக் காணாதவர்கள் பாரதத்தின் ஜீவத் துடிப்பை அறிந்து விட்டதாகக் கூற முடியாது. இமாலயப் பயண அனுபவங்கள் சத்தியமானவை. அதனால் அவை நித்தியமானவை."- பரணிதரன்.**



**நன்றி**

சாவகச்சேரியூர் டாக்டர் க. கதிர்காமநாதன் அவர்கள் தான் பெற்ற இன்பத்தை மற்றவர்களும் அனுபவித்து மகிழ வேண்டும் என்ற நோக்கிலும், இப்புனித யாத்திரையை இன்னும் பலர் மேற்கொள்ள வேண்டும் என்ற பரந்த எண்ணத்திலும் இமயம் பயணக் கட்டுரைத் தொடரை எழுதினார்கள். அவருக்கே உரிய அழகுத் தமிழில் இமயத்து இறை உணர்வை எங்களுடன் பகிர்ந்து கொண்டமைக்கு கலசம் வாசகர்கள் சார்பில் நன்றி தெரிவிக்கின்றோம்.
- ஆசிரியர்

# ஆலயங்களின் வகைகள்





மலைகளின் மேல் அமைந்த கோயில் - பெருங் கோயில்

உயர்ந்த மேடைகள் மீது கட்டப்பட்ட கோயில் - மாடக் கோயில்

ரதங்கள் போன்ற அமைப்பில் கட்டப்பட்ட கோயில் - கரக் கோயில்


மரங்களால் உருவாக்கப்பட்ட கோயில் - ஞாழற் கோயில்

குடிசையைப் போன்ற கோயில் - குடிசைக் கோயில்

தூங்குகின்ற யானையைப் போன்ற வடிவத்தில் உள்ள கோயில் - தூங்கானை மாடக் கோயில்

ஆலயங்களில் உள்ள இறைவனின் திருமேனிகள் - இறை வடிவங்கள் ஐந்து வகையாகக் கருதப்படுகின்றன. எங்கு இறைவன் தன்னை அன்புடன் வழிபட்டவர்களை ஆட்கொண்டு அருள் பாலித்தாரோ, எங்கு தேவர்களும், ரிஷிகளும், சித்தர்களும் இறைவனின் சிலைகளைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டார்களோ அங்கு அச் சிலைகளின் உறைவிடமாக ஆகம முறைப்படி ஆலயங்கள் கட்டப்பட்டன.

1. சுயம்பு – தானாகவே தோன்றிய திருவுருவங்கள்
2. தைவீகம் - பிரம்மா, இந்திரன் போன்ற தேவர்களால் ஸ்தாபிக்கப்பட்டவை
3. ஆர்ஷம் - சித்தர்களாலும், ரிஷிகளாலும் ஏற்படுத்தப்பட்டவை
4. மானுஷம் - மன்னர்களாலும், அடியார்களாலும் பிரதிஷ்டை செய்யப்பட்வை
5. ஆசுரம் - அசுரர்களால் அமைக்கப்பட்டவை.




**கலசம்**

ஆசிரியர்: சதாசிவம் ஆனந்ததியாகர்
நிர்வாகக் குழு: வ. சிவனருட்செல்வர், க. ஜெகதீஸ்வரன், கவிஞர் பாலரவி, சி. அற்புதானந்தன், வ. இ. இராமநாதன், சிவ தம்பு


தொடர்பு முகவரி: SMS 2 Salisbury Road London E12 0AB Tel/Fax: 0208 514 4732
www.saivamunnettasangam.com



**இவ்விதழ் கலசம் வெளியீட்டிற்கு அனுசரனை தந்த ஈலிங் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் அடியார்களுக்கும், நிர்வாகத்தினருக்கும், சிவாச்சாரியார்களுக்கும் எமது நன்றி. அறம் வளர்த்த நாயகி, அன்னை வழியே அருமையான சமுகப் பணிகளை மேற்கொள்ளும் ஆலயமாக விளங்கும் உங்களை சைவ உலகம் பாராட்டுகின்றது.**

# மாணவர்களுக்கு




## சுவாமி விவேகானந்தர் ஓர் அறிமுகம்


***சென்ற இதழில்: 12.01.1863ம் ஆண்டு வீரேசுவரன் என்ற பெயரில் கல்கத்தாவில் பிறந்தார். சிறு குறும்புக்கார விவேகானந்தர் வறியவர்களுக்கு தன் கையில் கிடைத்ததையெல்லாம் கொடுக்கும் கருணையுடையவர். நண்பர்களுடன் விளையாடும் போது நீண்ட நேரம் தியானம் செய்வார். 17 வயதில் கடவுளைப் பற்றிய அவருடைய பல கேள்விகளுக்கு பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரை நாடிப் போனார். சிறுவனாக இருக்கும் போதே கடவுளைக் காண வேண்டுமென்ற ஆவல் அதிகரித்தது.***

***ஸ்ரீராமகிருஷ்ணரிடம் "ஐயா நீங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீகளா? என்று கேட்டார்.***

***விரைந்து வந்தது ஸ்ரீராமகிருஷ்ணரின் பதில்:***

### ஸ்ரீராமகிருஷ்ணரின் பதில்

ஒருநாள் நரேந்தர் தட்சிணேசுவரத்தில் ஸ்ரீராம கிருஷ்ணரைத் தரிசித்தபோது தான் இத்தனை நாட்களாகக்கேட்கவிரும்பிய கேள்வியை-"ஐயா, நீங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா"? எனக் கேட்க "ஆம், நான் தெளிவாகக் கடவுளைக் கண்டிருக்கிறேன். அவருடன் பேசியுமிருக்கிறேன்" இது ஸ்ரீராமகிருண்ணரிடமிருந்து தெளிவாக வந்த பதில். இந்த பதிலை நரேந்திரர் நம்பினார். ஆனாலும் அதை அவரால் சோதித்துப் பார்க்காமல் ஒப்பமுடியவில்லை.




பணத்தையோ, உலோகப் பொருட்களையோ தம்மால் தொடமுடியாது என்று ஸ்ரீராமகிருஷணர் கூறியதை சோதித்துப் பார்க்க விரும்பி, அவர் இல்லாத போது அவருடைய அறைக்கு சென்று அவரது படுக்கையின் கீழ் ஒரு ருபா நாணயம் ஒன்றை வைத்தார். ஸ்ரீராம கிருஷ்ணர் சிறிது நேரத்தின் படுக்கையில் வந்து அமர்ந்தவுடன் துள்ளி எழுந்தார். "என் படுக்கையில் எதாவது உள்ளதா"? என்று சீடர்களைப் பார்த்துக் கேட்டார். எல்லோரும் தேடினார்கள். அந்த ஒரு ருபாயைத் தவிர வேறெதுவும் இருக்க வில்லை. ஒரு மூலையில் நின்று கவனித்துக் கொண்டிருந்த நரேந்திரர் தன்னுடைய செய்கையையிட்டு கவலை கொண்டார். ஆனால் ஸ்ரீராமகிருஷணரோ "ஆமாம்! குருவை என்னேரமும் கவனிக்க வேண்டும் எனக் கூறி மகிழ்ந்தார்.

### பிரார்த்தனை

குருவிற்கும் மாணாக்கனுக்கும் குரு சிஷ்ய உறவாகிய பணிவு, அன்பு இருந்தால்தான் அங்கே குருவால் அறிவு புகட்ட முடியும். இந்த பரஸ்பர அன்பு நரேந்திரரிடமும் ஸ்ரீராம கிருஷ்ணரிடமும் நிறைய இருந்தது.

நரேந்திரர் ஸ்ரீராமகிருஷ்ணரை அடிக்கடி சந்தித்து உபதேசங்களைப் பெறுவது வழக்கம். ஒருநாள் நரேந்திரரது தந்தையாகிய விசுவநாதர் காலமானதையடுத்து அவரது குடும்பம் வறுமையில் வாட, பி.ஏ சித்தியடைந்திருந்தும் நரேந்திரரால் வேலை தேடி உழைத்து அவரது குடும்பத்தைக் காப்பாற்ற முடியவில்லை. அவர் தனது குருவாகிய ஸ்ரீராம கிருஷ்ணரிடம் முறையிட, அவர் " இன்று செவ்வாய்க்கிழமை நீ காளி கோயிலுக்குப் போய் அன்னையிடம் உனது வேண்டுகோளை வை" எனக் கூறி அவரை அனுப்பினார். கோயிலுக்குச் சென்று அன்னையாகிய காளியிடம் தன் தேவைகளைச் அவரால் சொல்ல முடியவில்லை. அவரால் தனக்கு ஞானமும். கல்வியும், பக்தியும் வைராக்கியமும், பகுத்தறிவையும் தா என்று மட்டுமே கேட்க முடிந்தது. இதை அவர் தனது குருவிடம் கூற, குரு அவருக்கு ஆசி கூறி, வறுமை நீங்கி பொருள் கிடைக்க ஆசீர்வதித்தார். நரேந்திரரின் கவலை நீங்கியது. அன்றிரவு நரேந்திரருக்கு அன்னையைப் பற்றிய பாடலொன்றைக் கற்பித்தார். அன்றிரவு முழுவதும் அதே பாடலை நரேந்திரர் பாடிக் கொண்டிருந்தர்.

### வராக நகர மடம்



ஆன்மீக வாழ்வில் முன்னேறிக் கொண்டிருந்த காலத்தில் நரேந்திரரின் குருவிற்கு தொண்டையில் வலியேற்பட்டு, சிகிச்சைக்காக அவரை காசிப்பூர் என்னும் இடத்திலுள்ள தோட்ட வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவருக்கு நரேந்திரர் அவர்களினது தலைமையில் சீடர்கள் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு சேவை

செய்வதிலும் பணிவிடை செய்வதிலும் ஈடுபட்டனர். சீடர்கள் ஓய்வு நேரங்களில் தியானம் பழக, நரேந்திரர் தியானத்தின் உயர்ந்த நிலையை அடைய தனக்கு அருளுமாறு குருவைப் பிரார்த்தித்த வண்ணமிருப்பார்.

அதற்கு அவர், "இதோ பார், உன்னால் ஆகவேண்டிய பணிகள் பல உள்ளன. அவற்றைச் செய்து முடித்த பின்னரே நீ அத்தகைய நிலையை அடைவாய்" என்று கூறினார்.


ஸ்ரீராமகிருஷ்ணரின் உடல் நிலை மோசமாக, ஒருநாள் அவர் நரேந்திரரைக் அழைத்து

"என்னுடைய எல்லா ஆன்மீக சக்திகளையும் உனக்கு கொடுத்துவிட்டேன். இந்த ஆற்றலால் மக்களின் ஆன்மீக வாழ்க்கைக்கு உதவி புரிவாய். ஏழை எளியோரின் உயர்வுக்காக தொண்டு செய்வாய்" என்று கூறினார். இந்தச் சொற்கள் நரேந்திரருக்கு விளங்கவில்லை.

"நான் சாதாரணமானவன். நானாவது உலகிற்கு போதிப்பதாவது" என் எண்ணினார். 1886 ஆகஸ்ட் 16ஆம் நாள் ஸ்ரீராமகிருஷ்ணர் சமாதியடைந்தார். சீடர்கள் மிகவும் கவலையடைந்தாலும் ஸ்ரீராமகிருஷ்ணர் அவர்களுக்குத் தாயும் தந்தையும் போல் இருந்தார் அல்லவா! பார்வையில் அவர் இல்லாவிட்டலும் தங்கள் உள்ளத்தில் அவர் இருப்பதை சீடர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்தனர்.

இளம் சீடர்கள் வராக நகரப்பகுதியில் கங்கைக் கரையில் ஒரு பாழடைந்த வீட்டில் வசித்து வந்தனர். அதுவே ராமகிருஷ்ண இயக்கத்தின் முதல் மடமாயிற்று. உண்ண உணவும் உடுக்க உடையும் போதுமான அளவு இல்லாவிட்டாலும் அவர்களின் மனம் எப்போதும் இறை சிந்தனையில் மூழ்கியிருந்தது.

**இந்தியப் பயணங்கள்**



துறவறத்தை ஏற்ற துறவிகளுக்குப் புதிய பெயர் வழங்குவது வழக்கம். இபபோது நரேந்திரர் சுவாமி விவேகானந்தரானார். நாம் அவரை சுருக்கமாக சுவாமிஜி என அழைப்போம்.

காவி உடை, கமண்டலம், ஒரிரு புத்தகங்கள், நீண்ட கைத்தடி இவற்றுடன் நகரங்கள், கிராமங்கள் வழியாக இந்தியாவின் பல பகுதிகளுக்கும் நடந்தார். கிடைத்த உணவை மட்டும் உண்டார். மரங்களின் கீழே தூங்கினார். ஏழைகளின் குடிசைகளிலும், அரசர்களுடைய விருந்தாளியாகவும் தங்கி இந்திய மக்களின் வாழ்க்கை முறையை அறிந்து கொண்டார்.

ஒரு முறை காசியில் துர்க்கா தேவியின் கோயிலுள் வானரங்கள் அவரை "காச்மூச்" என கத்திக்கொண்டு துரத்த அவர் ஓடினார். அப்போது ஒரு சன்னியாசி "ஓடாதே எதிர்த்து நில்" என்று கூற சுவாமிஜியும் எதிர்த்து நின்று குரங்குகளைத் துரத்த அவை ஓட்டம் பிடித்தன. பல வருடங்களின்பின் அமெரிக்காவில் இந்த நிகழ்ச்சியைக் கூறி "ஓடாதே, எதிர்த்து நில், பிரச்சனைகள் தீர்ந்து விடும்" என்று போதித்தார். சுவாமிஜி காடு மலையென இமயமலை, மேற்கு இந்தியாவின் பாலைவனங்கள், பம்பாய், பூனா, பெங்களூர், மைசூர், கொச்சி, திருவனந்தபுரம் வழியாக குமரிமுனையை அடைந்தார்.

**புதிய திட்டம்**

அவர் வாழ்ந்த காலத்தில் இந்தியா ஆங்கிலேயர் வசம் இருந்தது. ஏழைகள், தாழ்ந்தவர்களின் நிலையோ மிகவும் மோசமாக இருந்தது. உணவு, உடை, படிக்க வசதியற்ற மக்கள் ஏராளம். மக்கள் தன்னம்பிக்கையில்லாமல் பரிதாபகரமான நிலையில் இருந்தார்கள். கன்னியா குமரியிலுள்ள



குமரியன்னையின் கோயிலுக்குச் சென்று தரிசித்து பின் கடற்கரை வந்தார்.

அங்கிருந்த இரு பாறைகளைப் பார்த்தார். அதற்கப்பால் கடல் பரந்து விரிந்து காட்சியளித்தது. அந்தப் பாறையில் அமர்ந்து சுவாமிஜி தியானம் செய்ய விரும்பினார்.

அது ஒரு ஏகாந்தமான இடம். ஆறு வருடங்களாகப் பார்த்த பாரத நாட்டின் நிலைமையை முன்னேற்றுவதற்கான வழிவகைகளைப்பற்றி சிந்திக்க ஓர் இடமாக அந்தக் கடலின் நடுவிலுள்ள பாறை அவருக்குத் தோன்றிற்று. கையில் கூலி கொடுத்துப்போக பணமில்லை. அவர் ஒரு துறவி. உடுத்த உடையுடன் நீரில் இறங்கி நீந்தி பாறையின் மேல் அமர்ந்து தியானத்தில் மூழ்கினார்.


பாரத நாட்டின் பண்டைய மகிமை, தற்கால நிலைமை, எதிர்காலத்தில் தனது மகிமை பொங்கிய நிலையை அடைவதற்கு வழி - இவைகள் எல்லாம் அவர் மனத்தில் தோன்றி மறைந்தன.

"ஆம். மக்கள் தூக்கத்தில் இருக்கிறார்கள். அவர்களை எழுப்ப வேண்டும். அதற்காக மேலை நாட்டில்

இந்தியாவின் ஆன்மீகக் கருததுக்களை பரப்ப வேண்டும் இதுவே என் புதிய திட்டம்" சிந்தித்தவாறு பாறையிலிருந்து திரும்பினார்.

**மேலை நாட்டுப் பயணம்**

சுவாமிஜி சென்னை திரும்பி வந்தபோது அவரால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் கூட்டத்தினரிடம் பாரமக்களிடம் தன்னம்பிக்கை வளர்க்கும்படி கேட்டுக்கொண்டார். சுவாமிஜி தான் அமெரிக்காவின் சிக்காகோ நகரில் நடக்கவிருக்கும் "சர்வமத மகா நாட்டில்" கலந்துகொள்ள இருப்பதாகவும் கூறினார். அங்கு பாரதநாட்டின் பண்பாட்டுப் பெருமைகளை உலகமறியச் செய்யப் போவதாகவும் சொன்னார். இளைஞர்கள் அதற்குரிய பணத்தைச் சேகரிக்கத் தொடங்கினர். இதை அறிந்த சுவாமிஜி தனது குருவின் அனுமதி கிடைத்தால் மட்டுமே போவதாகக் கூறி சேகரித்த பணத்தை ஏழை எளியவர்களுக்கு உபயோகிக்குமாறு கூறிவிட்டார்.



பின்பு ஒருநாள், குருநாதர் அனுமதியை அவருடைய கனவில் தோன்றி கடலில் அக்கரைக்கு போவதாகக்கூறி சுவாமிஜியைப் பின் தொடருமாறு கூறி மறைந்தார். இதனையடுத்து குருவின் தெய்வீகத் துணைவியாகிய அன்னை சாரதாதேவியிடம் கடிதமூலம் ஆசி வேண்டி அதற்கான அனுமதியும் பெற்றார். பின்பு 1892 மே மாதம் 31ஆம் திகதியன்று அமெரிக்கா பயணமானார்.

**நீலத்திரைக் கடலுக்கப்பால்**

அவர் பயணம் செய்த கப்பல் சிங்கப்பூர், ஹொங்கொங், சீனா, ஜப்பான் வழியாக சென்றபடியால் அவர் கப்பல் தங்கிய இடமெல்லாம் இறங்கி அந்தந்த மக்களின் வாழ்க்கை முறையை அறிந்து கொண்டார். அறிவதும் ஒரு பாடம்தானே! ஜப்பானைப் பார்த்து இந்திய இளைஞர்கள் அறியவேண்டிய விடயங்கள் அதிகமெனக் கருதினார். கடைசியாக கப்பல் கனடாவின் வான்கூவர் துறைமுகத்தை அடைந்தது. அங்கிருந்து நேரே புகையிரதம் மூலம் சிக்காக்கோ நகரை அடைந்தார். அங்கு, இரண்டு மாதங்களுக்குப் பின்பு நடைபெறவிருந்த சர்வ மத மகாசபை அலுவலகத்திற்கு சென்றார். சபைக் கூட்டத்தில் பேசுவதற்காக தாம் வந்திருப்பதாகவும் கூறி தனது பெயரை பேச்சாளர் பட்டியலில் சேர்க்குமாறும் வேண்டினார். பட்டியல் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் புதிதாக எவரையும் சேர்க்க முடியாது எனக்கூறிப் பெயரைப் பதிய பேரவையின் செயலாளர் மறுத்துவிட்டார். சிக்காக்கோ செலவு மிகுந்த நகரமானபடியால் ஊருக்குத் திரும்பிவிடலாமா எனவும் சுவாமிஜி யோசித்தார், பின்பு விலைவாசி குறைந்த நகரான் போஸ்டன் நகருக்கு திரும்பி அங்கு சில அன்பர்களுடன் தங்கி பின்பு மீண்டும் சிக்காக்கோ திரும்பினார். திரும்பும்போது போஸ்டனிலுள்ள பேராசிரியராகிய ரைட் என்பவரிடம் ஒரு பேரவையில் பேச பரிவுரைக் கடிதம் ஒன்றும் வாங்கியிருந்தார். ஆனால் அந்தக் கடிதம் வரும் வழியில் எங்கோ தொலைந்து போய்விட்டது. குளிரும் பசியும் அவரை வாட்ட ஒரு இரவு ரயில் பெட்டியில் இரவைக் கழித்தார். சுவாமிஜியின் பெயர் அமெரிக்கா முழுவதும் பரவப்போவதை யாரால் தடுக்கமுடியும்? விதியின் விளையாட்டுத்தான் எப்படிப்பட்டது?

**சிக்காக்கோ**

கையில் பணமில்லை. குளிர் வாட்டுகிறது. பசியின் கொடுமை தாளமுடியவில்லை. ஆகவே, இந்திய சன்னியாசிகள் போல அவர் வீடு வீடாக பிச்சை கேட்டுச் சென்றார். எவரும் எதுவும் கொடுக்காமல் சுவாமிஜியை விரட்டவும் செய்தனர். பின் கனவான்கள் இருக்கும் தெருவோரம் சென்று உட்கார்ந்துவிட்டார், அப்பொழுது அவர் எதிர்பாராத விடயமொன்று நிகழ்ந்தது. இவர் இருந்த எதிர் முனையிலிருந்து ஒரு வீட்டின் கதவு திறந்து ஒரு பெண் அவரை நோக்கி நடந்து வந்தார். "நீங்கள் சர்வமத மகாசபைக் கூட்டத்திற்கா வந்திருக்கிறீர்கள்" என்று அன்புடன் விசாரித்தார் சுவாமிஜி "ஆம்" என்றார்.அந்தப் பெண் அவரைத் தங்களுடன் தங்குமாறு கேட்டுக்கொண்டார். திக்குத் தெரியாத காட்டில் ஒரு வழித்துணை கிடைத்துதுபோல் இருந்தது சுவாமிஜிக்கு.




அந்தப்பெண்மணியின் பெயர் மிசஸ் ஹேல். பின்னாளில் அவருடைய கணவரான ஜார்ஜ் ஹேல் என்பவரும் சுவாமிஜிக்கு நண்பரானார். அவர்களின் பிள்ளைகளும் சுவாமிஜியைத் தங்களின் மூத்த சகோதரராகக் கருதினர். அவருக்கு பேராசிரியர் கொடுத்திருந்த கடிதத்தில் 'நமது ஒட்டு மொத்த பேராசிரியர்களின் அறிவைவிடப் பேரறிவு வாய்ந்தவர் சுவாமி விவேகானந்தர் எனக்குறிப்பிட்டிருந்தார். மறுநாள் மிசஸ் ஹேல் சுவாமியைத் தனது வண்டியில் பேரவை அலுவலகத்திற்குக் அழைத்துச் சென்று சர்வமத சபையில் பேச அனுமதியும் பெற்றுக் கொடுத்தார்.

அப்படி அமெரிக்க மக்களே வியக்கும் வண்ணம் சுவாமி விவேகானந்தர் என்ன தான் சொற்பொழிவாற்றினார்?

**அதை அடுத்த இதழில் பார்ப்போம் (தொடரும்)**

# நட்சத்திரமும் ராசியும் - மாணவர்களுக்கு ஒரு விளக்கம்

**Nakshatram - Star of the Day**
**Rasi - Sign of the Star**




The moon revolves around the earth in roughly 27 days. During this period, the moon traces a path around the sky. The ancients split this path of the moon into 27 units and gave each unit the name of a star, star group or constellation. These 27 units are known as nakshatrams. People also refer to the nakshatra as a star. This is not quite precise since a nakshatra can be much more than a star. This same path has also been divided into 12 units, each called a Rasi or Raasi or Rashi. 27 divided by 12 = 2.25. Thus each rasi covers two and a quarter nakshatras.

The moon's location at any instant has to be in one of the 27 nakshatras and in one of the 12 rasis corresponding to your nakshatra. The nakshatra in which moon was located when you were born is your janma nakshatra generally referred to as your birth star. Likewise, the rasi in which moon was located when you were born is known as your janma rasi or your birth rasi. To find out your rasi and your nakshatram, use our Rasi and Nakshatra Calculator.

The 27 nakshatrams are as follows:

1 Asvini அசுவினி
2 Barani or Apa Barani பரணி
3 Krithigai or Krittika கிருத்திகை
4 Rohini ரோகிணி
5 Mrigaseersham or Mrigasira மிருகசீரிஷம்
6 Thiruvaadhirai or Aarudra திருவாதிரை
7 Punarpoosam or Punarvasu புனர்பூசம்
8 Poosam or Pushya பூசம்
9 Aayilyam or Aslesha ஆயில்யம்
10 Magam or Magha மகம்
11 Pooram or Poorva Palguni பூரம்
12 Uttaram or Uttara Palguni உத்திரம்
13 Hastham or Hastha ஹஸ்தம்
14 Chithirai or Chitra சித்திரை
15 Svaathi சுவாதி
16 Visaakam or Visaka விசாகம்
17 Anusham or Anuradha அனுஷம்
18 Kettai or Jyesta கேட்டை
19 Moolam or Moola மூலம்
20 Pooraadam or Poorvashada பூராடம்
21 Uttaraadam or Uttarashada உத்திராடம்
22 Thiruvonam or Sravana திருவோணம்
23 Avittam or Sravishta or Dhanista அவிட்டம்
24 Sadhayam or Sathabishak சதயம்
25 Poorataadhi or Poorva Broshtapadha பூரட்டாதி
25 Uttarataadhi or Uttara Broshtapadha உத்திரட்டாதி
27 Revath ரேவதி

**Janma Nakshatra (Birth Star)**

Each one of us is born under one of 27 nakshatras. This is also known as one's janma nakshatra or birth nakshatra. Some also refer to this as the birth star even though that terminology is not quite precise since a nakshtra can be much more than just one star.

**27 Nakshatras in a Great Circle**

Imagine a great circle in space and the 27 nakshatras laid out equally on this circle. Since a circle covers 360 degrees, these 27 nakshatrams cover 360 degrees in space. So the "space" occupied by one nakshatram is 360 divided by 27 which is equal to 13 degrees and 20 minutes.

**12 Raasis in the Same Great Circle**

Now instead of dividing these 360 degrees by 27 divide them by 12. If you do that, you get 12 raasis.
12 Raasis = 27 Nakshatras!
1 Raasi = 2 and 1/4 Nakshatras

The space occupied by the 12 rashis is the same space occupied by the 27 nakshatras. Thus each one of us has a janma rasi just like we have a janma nakshatra.

You can think of the 12 rasis as another way of grouping the 27 nakshatras. See diagram below. Since 12 rasis = 27 nakshatras, one raasi = two and a quarter nakshatras (since 27 divided by 12 = 2 and 1/4). In other words, the 27 nakshatras are grouped under 12 rasis at two and a quarter nakshtras per raasi.

As you can see, a nakshatra can occupy a part of one rasi and a part of the next rasi (as laid out in the table below). This is the case for 9 of the 27 nakshatras. These 9 are: Kritika, Mrigasira, Punarvasu, Uttara Phalguni, Chitra, Visaka, Uttarashada, Dhanishta and Poorvabhadra are partly in one rasi and partly in another.

But if each nakshatra is divided into 4 equal quarters, a quarter will never occupy more than one rasi. This higher precision division of each nakshatra into quarters has been done.

Nakshatra Paadham = 4 Quarters of each nakshatra

The space occupied by each naksatra (in the great circle) is divided into four equal quarters.

Each quarter of each nakshatra will never span two rasis; each quarter will be part of one and only one rasi. Each such nakshatra quarter is referred to as a Nakshatra Paadham or Nakshatra Pada.


Since there are 27 nakshatras, there are 108 nakshatra quarters (27 x 4 = 108) in total with each quarter spanning 3 degrees and 20 minutes of the great circle.

When you hear people make statements such as "My nakshatra is Punarvasu 2nd padham" or "My birth star is Vishaka 4th quarter" and so on, they are referring to this finer division of each nakshatra into quarters.


Nakshatra calculator below will also calculate the nakshatra pada for you. Finding out your Rasi from your Nakshatram If you know your janma nakshatra, you can find out your janma rasi from your nakshatram.

Rasi - Nakshatra Table Use the following table to find out your janma rasi from your janma nakshatra.

| RASI | NAKSHATRA |
|---|---|
| Mesha மேஷம் | - Aswini (Asvini) - Apa Bharani (Barani)- first quarter of Krittika (Karthigai) |
| Vrishabha ரிஷபம் | - last three quarters of Krittika (Karthigai) - Rohini - first half of Mrigasira (Mrigaseersham) |
| Mithuna மிதுனம் | - Second half of Mrigasira (Mrigaseersham) - Ardra (Thiruvadhirai)<br>- first three quarters of Punarvasu (Punarpoosam) |
| Kataka கடகம் | - last quarter of Punarvasu (Punarpoosam) - Pushyami (Poosam) - Aslesha (Ayilyam) |
| Simha சிம்மம் | - Makha (Magham) - Poorva Phalguni (Pooram) - first quarter of Uttara Phalguni (Uttaram) |
| Kanya கன்னி | - last three quarters of Uttara Phalguni (Uttaram) - Hasta (Hastham) - first half of Chitra (Chittirai) |
| Thula துலாம் | - Second half of Chitra (Chittirai) - Swati (Swathi) - first three quarters of Visakha (Visakham) |
| Vrischika விருச்சிகம் | - last quarter of Visakha (Visakham) - Anuradha (Anusham) - Jyeshta (Kettai) |
| Dhanus தனுசு | - Moola (Moolam) - Poorvashada (Pooradam) - first quarter of Uttarashada (Uttiradam) |
| Makara மகரம் | - last three quarters of Uttarashada (Uttiradam) - Sravana (Thiruvonam) - first half of Dhanishta (Avittam) |
| Kumbha கும்பம் | - Second half of Dhanishta (Avittam) - Satabhishak (Sadhayam) - first three quarters of Poorvabhadra (Pooratadhi) |
| Meena மீனம் | - last quarter of Poorvabhadra (Pooratadhi) - Uttarabhadra (Uttiratadhi) - Revati (Revathi |



# தீப ஆரத்தி எடுப்பது எதற்காக?



நம் வழிபாட்டு முறைகளில் பலவும் காரணம் புரியாத சடங்குகளாகவும் சம்பிரதாயங்களாகவும் ஆகி விடுகின்றன. அவற்றை அப்படியே நாமும் பின்பற்றுகிறோமே ஒழிய அவற்றில் புதைந்துள்ள ஆழ்ந்த பொருளை நாம் உணரத் தவறி விடுகிறோம். உதாரணத்திற்கு கோயில்களில் இறைவனுக்கு தீப ஆரத்தி எடுப்பதை எடுத்துக் கொள்வோம். தீப ஆரத்தி எடுப்பதை நாம் நாள் தோறும் பார்க்கிறோம் என்றாலும் அது எதற்காக என்று ஆரத்தி எடுப்பதன் பின்னால் உள்ள தத்துவம் என்ன என்றும் நம்மில் பெரும்பாலானோர் அறிவதில்லை. அதன் உண்மைப் பொருளை இப்போது பார்ப்போம்.

பூஜையில் இறைவனுக்குச் செய்யப்படும் பதினாறு வகை உபசாரங்களில் தீப ஆரத்தியும் ஒன்று. அதை வடமொழியில் ஷோடச உபசாரா என்று சொல்வார்கள். பூஜை காலத்தில் தீப ஆரத்தி எடுப்பதற்கு முன்பு இறைவன் விக்கிரகத்தின் முன் திரை போட்டு இருப்பார்கள். அந்தத் திரை மறைப்பதால் நம்மால் இறைவனைக் காண முடியாது.' நான்'என்னும் அறியாமைத் திரை நம்முள் இருக்கும் வரை அதைத் தாண்டி உள்ள எல்லாம் வல்ல இறைவனை நம்மால் அறிந்து கொள்ள முடியாது என்பதை அது குறிக்கிறது. அந்தத் திரை விலகினால் மட்டுமே இறைவனைக் காண முடியும். அப்போதும் கூட இறைவன் மிகத் தெளிவாகத் தெரிவது இல்லை. இறைவனை மிகத் தெளிவாக அறிய ஞானம் என்ற விளக்கு வேண்டும். அந்த ஞான விளக்கொளி இருந்தால் தான் இறைவனை முழுமையாகத் தரிசிக்கும் அனுபவம் வாய்க்கும். அந்த ஞான ஒளி தான் தீப ஆரத்தி. நான் என்னும் ஆணவத் திரை விலகிய பின்னர் ஞானத்தின் துணையுடன் இறைவனைக் காண முடியும் என்பதை தீப ஆரத்தி விளக்குகிறது.

திரை விலகுதல் ,தீப ஆரத்தி காட்டுதல் ,இருள் நீங்குதல், இறைவனைக் காணல் எல்லாம் ஏக காலத்தில நிகழவது போல ஆணவம் விலகி ,ஞானம் பெற்று ,அறியாமை நீங்கி ,இறைவனை உணர்தல் எல்லாம் ஏக காலத்தில் மனிதன் மனதில் நிகழ வேண்டும் என்பதை தீப ஆரத்தி குறிப்பால் உணர்த்துகிறது.

உள்ளத்தில் ஞான விளக்கேற்றுவது குறித்து பத்தாம் திருமுறையில் திருமூலர் மிக அழகாகக் கூறுவார்.

விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்கு உடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்காவர் தாமே!

இதன் பொருள்: உங்களுக்குள் இருக்கும் பொருளை அறியுங்கள். அந்த ஞான விளக்கின் முன்னே உங்கள் வேதனைகள் மாறும். அந்த ஞான விளக்கை விளங்கிக் கொள்ளும் ஞானம் உடையவர்கள் தாங்களே ஞானவிளக்காக விளங்குவார்கள்.



(ஞான விளக்கின் ஒளியில் அனைத்தையும் காணும் போது அறி யாமையால் நாம் உணர்கின்ற துன்பங்கள் தானாக மாறி விடும் என்றும் ஞானம் பெற்ற வர்கள் தாமாக மற்றவர்களுக்கு ஞான விளக்காக இருந்து வழிகாட்டுவார்கள் என்றும் திருமூலர் விளக்குகிறார்.)

கற்பூர தீப ஆரத்தியில் இன்னொரு மெய்ஞான உண்மை வலியுறுத்தப் படுகிறது. கற்பூரம் ஏற்றப்படும் போது அது எரிந்து ஒளி கொடுத்து பின் கடைசியில் இருந்த சுவடே இல்லாமல் முடிந்து விடுகிறது. கற்பூரம் நான் ,எனது என்ற எண்ணங்களால் ஏற்படும் வாசனைகளைக் குறிக்கிறது. இறைவனில் இருந்து தனிமைப்படுத்திக் கொண்டு வாழும் தன்மையைக் குறிக்கிறது. ஆனால் எல்லாம் இறைவன் என்ற ஞானம் பற்றிக் கொள்ளும்போது மனிதனின் வாசனை களும் , அறியாமையும் கொஞ்சம் கொஞ்சமாய் அழிய மற்றவர்களுக்கு ஒளி தரும் வாழ்க்கையை மனிதன் வாழ ஆரம்பிக்கிறான். அவன் காலம் முடிந்து விடும் போது அவன் வாசனைகளும் முடிந்து போகின்றன. ஒளிமயமான ,உபயோகமான வாழ்க்கை வாழ்ந்து முடித்து இருந்த சுவடில்லாமல் அவன் இறைவனுடன் ஐக்கியமாகி விடுகிறான். இது கற்பூர தீப ஆரத்தி மூலமாக உணர்த்தப்படும் இன்னொரு மாபெரும் தத்துவம்.

தீப ஆரத்தியின் முடிவில் தீபத்தின் மேல் நம் கைகளை வைத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு தலையையும் தொட்டுக் கொள்கிறோம். இந்த ஞான ஒளி என் அகக் கண்களைத் திறக்கட்டும். என் எண்ணங்களும் , நோக்கங்களும் ,அறிவும் மேன்மையானதாக இருக்கட்டும்.' என்ற பாவனையில் செய்யப்படும் செயலே அது.

எந்திரத்தனமாகக் கோயிலுக்குச் சென்று தீப ஆரத்தியைக் கண்டு இறைவனை வணங்கி அங்கிருந்து எந்த பாதிப்பும் இல்லாமல் கிளம்பி விடாமல் மேற்கண்ட தத்துவக் கண்ணோட்டத்தோடு தீப ஆரத்தியைக் கண்டு வணங்குங்கள். அதுவே உண்மையான பயனுள்ள வழிபாட்டு முறை. அப்படி உயர்ந்த பாவனையுடன் வழிபட ஆரம்பிக்கும் போது மிக மேன் மையான ஆன்மிக அனுபவத்தை உணர்வீகள். உண்மையான வழிபாட்டின் பலனை அடைவீகள்!

சரி அப்படியானால் மனிதர்களுக்கும் ஆரத்தி எடுக்கிறார்களே அது எதற்காக என்ற கேள்வி ஒருவர்

மனதில் எழுவது இயற்கை. அதற்கான பதிலையும் பார்ப்போம்.



புதிதாய் திருமணம் முடிந்து வீட்டுக்கு வரும் தம்பதியர், குழந்தை பெற்றுக் கொண்டு வீடு திரும்பும் தாய் தொலை தூரங்களுக்குச் சென்று வெற்றிகரமாக ஒரு செயலை முடித்து விட்டு வருபவர் முதலானோருக்கு ஆரத்தி எடுக்கும் வழக்கம் நம் நாட்டில் இருக்கிறது.

அவர்களுக்கு ஆரத்தி எடுப்பது இறைவனுக்கு ஆரத்தி எடுக்கும் முறையில் இருப்பதில்லை. அவர்களுக்கு ஒரு



தாம்பாளத் தட்டில் தண்ணீருடன் மஞ்சள் மற்றும் சுண்ணாம்பு கலந்து தண்ணீரை சிவப்பாக்கிக் கொள்கிறார்கள். பின் எண்ணெய் தோய்த்த திரியை விளிம்பில் வைத்து தீபமாக்கி ஆரத்தி எடுக்கிறார்கள்.

ஒவ்வொரு மனிதனைச் சுற்றிலும் ஆரா (aura) என்ற சூட்சுமப் பகுதி இருக்கிறது. மனிதனுக்கு ஏற்படும்




திருஷ்டி மற்றும் அவனைச் சேரும் தீய கிருமிகள் ஆகியவை அந்த சூட்சும பகுதியில் முதலில் பதிந்து பின்னரே அவனுள் புகுகின்றன. திருமணம், குழந்தை பெறுதல், வெற்றி யடைதல் ஆகியவற்றால் பலருடைய திருஷ்டி மணமக்கள் தாய்-சேய், வெற்றியாளர் மீது அதிகம் விழ வாய்ப்பு அதிகம் உள்ளது.

மஞ்சள் மற்றும் சுண்ணாம்பு இரண்டிற்கும் விஷக் கிருமிகளை அழிக்கும் சக்தி இருப்பதாக நம் முன்னோர் கண்டிருந்தார்கள் எனவே தான் திருஷ்டி கழிக்கும் சக்தி உள்ள கிருமி நாசினிகளான மஞ் சளையும் சுண்ணாம்பையும் தண்ணீரில் கலந்து திருஷ்டி கழித்து அந்தத் தண் ணீரை வெளியேயே கொட்டி விடுகிறார் கள். வீட்டினுள் நுழையும் முன்பே ஆரா சரீரத்தில் சேர்ந்துள்ள திருஷ்டி மற்றும் கிருமிகளை அகற்றி தூய்மைப்படுத்திய பின்னரே சம்பந்தப் பட்டவர்களை விட்டுக்குள் அழைத்துக் கொண்டு போகும் வழக்கம் உள்ளது.

எனவே அது போல் ஆரத்தி எடுக்கும் போது பொருள் அறிந்து சரியான பாவனையுடன் செய்வது முக்கியம்.

அப்போது தான்பலனும் முழுமையாக இருக்கும்



## சித்தாந்தச் சிந்தனைகள்.

கலப்பினால் ஒன்றாயும், பொருள் தன்மையால் வேறாகவும், உயிருக்கு உயிராகும் தன்மையால் உடனாயும் நிற்கும் நிலையே சைவ சித்தாந் தத்தில் அத்துவிதம் எனப்படும். இம்மூன்றிற்கும் உவமைகளாக உடலும் உயிரும் போல ஒன்றாகவும், கண்ணும் சூரிய ஒளியும் போல வேறாகவும், அறிவும் ஒளியும் போல உடனாயும் இறைவன் உள்ளான் என்று சித்தாந்தம் தெளிவு படுத்துகிறது.

"....பொன் மணி போல் அபேதம்
பிறப்பு இலதாய்; இருள்வெளி போல் பேதமும்:
சொற் பொருள் போல்
பேதாபேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்தினால் விளைவதாய் உடன் உயிர், கண்
அருக்கண்
அறிவொளிபோல் பிறிவுஅரும் அத்துவிதம் ஆகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன் இங்கு தெரிக்கல் உற்றாம்"

- சிவப்பிரகாசம்

சிவபெருமான் உயிர்களுடன் கலந்து நிற்பதாகிய அத்துவித நிலையை எதற்காக மேற்கொள்ள வேண்டும்?

இதற்கு விடையாக, இறைவன் உயிர்களுக்கு இரண்டு விதமாக உதவுகின்றான். அவை காணும் உபகாரம், காட்டும் உபகாரம் எனக் கூறப்படும். உயிர்கள் அறிவுடையனவே எனினும் அவற்றின் அறிவு சிற்றறிவாகும். சிவ பெருமான் அவற்றோடு சேர்ந்து இருந்து இயக்க வில்லையானால் அவற்றிற்கு செயற்பாடு இல்லை. பொருளைக் காண்பது ஒருவனின் கண் என்கிறோம், ஆனால் ஆழ்ந்து சிந்திக்கும் போது அவனுடைய கண்கள் காண்பதில்லை எனப் புலப்படும். உயிரே பொருளைக் காண்கிறது. காணும் தன்மையுடைய கண்களுடன் கலந்து நின்று உயிர் கண்களைக் காணுமாறு செய்வதுடன் தானும் காண்கிறது. சிவ பெருமானின் சிற்சக்தி உயிர்களின் சிற்சக்தியுடன் கலந்து நின்று தானும் கண்டு உயிர்களுக்கும் காட்டியருளுகிறது.

சிவபெருமான் உயிர்களின் உடனாய் நின்று காண்பதைக் காணும் உபகாரம் என்றும் வேறாய் நின்று காட்டுவதைக் காட்டும் உபகாரம் என்றும் குறிப்பிடுவர்.

"காண்பார் யார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே"

- திருநாவுக்கரசர் திருமுறை

# எய்ப்பும் வைப்பும்

வடமராட்சியூர் முருகவேள் பரமநாதன்


மனித வாழ்க்கையைப்பற்றிப் பெரிதாகப் பேசிக்கொள்கின்றோம். மரியாதை இல்லாமலும் வாழ்ந்து கொள்கின்றோம். ஓரறிவுப் பிராணிகளான தேனீ, எறும்பு, என்பன தீவிரமாக உழைத்து எதிர்காலத்துக்காகவும் மழைக் காலத்துக்காகவும் சேமிக்கின்றன. நம் முன்னோர்கூட முதுமைக் காலத்துக்காகத் தம்மை தயார் செய்திருந்தனர். உழைப்பில் ஒறுப்பனவு, அவர்களின் நாளாந்த வாழ்க் கைக்கேற்ப வரவு செலவு என்பன அவர்களின் குறிக்கோள்கள்.

" ஆன முதலில் அதிகம் செலவானால்
மானமழிந்து மதிகெட்டுப் போனதிசை
எல்லார்க்கும் கள்வனாய் ஏழ்பிறப்பும்
தீயனாய் நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

என்பது நீதிநூல் சொல்லும் அறிவுரை. எங்கள் தாயார், அவரின் தாய் எல்லாரும் மாரிகாலம் வரப்போகிறதென்று விறகுகளைக்கூட அசைகட்டி அடுக்கி வைத்திருப்பார்கள். இதைத்தாண்டி மரண காலத்துக்கென்று பணம் சேகரிப்பார்கள். பெரும்பாலும் தங்க நகைகள் செய்வித்துக் கழுத்திலும் போட்டிருப்பர்கள். இது பெண்மையை அலங்கரிப்பதோடு சேமநிதியாகவும் இருக்கும். சாவிறுதிக்கெனப் பிள்ளைகளிடமும்



சொல்லிவைப்பார்கள். முதுமை, வயோதிபம் வந்தால் வருமானமும் இல்லை. உழைப்பும் இல்லை, பிள்ளைகள் எள்ளி நகையாடாமல் இருக்க செய்யும் சேமிப்பு இது. இதை வள்ளுவர் வாக்கிற் சொன்னால் " எய்ப்பில் வைப்பு" எனலாம். (சேம நிதி – பாதுகாப்பு நிதி) இப்போது வங்கிகளிலும், காப்புறுதி நிறுவனங்களிலும் இச்சேமிப்பு நிகழ்கிறது. வெளிநாடுகளில் ஒருவர் மரணித்தால், பல்லாயிரம் பவுண்கள் செலவாகும். நம் தாய் நாட்டில் இப்படியான பொருட்தேவை குறைவு. எனவே அந்த நாட்களில் ஒரு பணம் (6சதம்) வருமானமென்றால்



அரைச் சதம் மிச்சம் பிடிப்பார்கள் நம் மூதாதையர். இந்தச் சேமிப்பு மூப்பு வரும்போது உதவும். இதை மிகவும் கூர்மையாகச் சிந்தித்தால், இது இம்மைக்கும் மறுமைக்கும் மிக இன்றியமையாதது. ஆம், மனிதன் இதை ஆழமாக அவதானிக்க வேண்டுமன்றோ!

எனவே வள்ளுவப் பெருந்தகை இதற்கு இரண்டு உபாயங்கள் சொன்னார்கள்.

" அற்கா இயல்பிற்றுச் செல்வம் அது பெற்றால்
அல்குப் ஆங்கே செயல்" – (குறள் 333)

செல்வம் அற்கா இயல்பிற்று: (நிலையாத) தங்காத இயல்புடையது. அதைப் பெற்றால் என்ன செய்ய வேண்டும்? அல்குப் ஆங்கே செயல்: அந்தச் செல்வம் நிலைத்து நிற்க நிலையான காரியம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் செல்வம் செல்வேன் செல்வேன் என்று போய்விடும். தர்மம் செய்வதற்கு தவணை தேவையில்லை. தர்மத்தை நினைத்தவுடன் செய்ய வேண்டும்.



இதற்கு இலகுவான வழி பசியைப் போக்குதல் என்கிறார் வள்ளுவர்

" அற்றார் அழிபசி தீர்த்தல் அஃ தொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"
(குறள் 226)

ஒன்றுமில்லாத வறியவர்களின் அறிவை அழிக்கின்ற பசிப்பிணியை நீக்குங்கள். வயிற்றுக்குச் சோறிட வேண்டுமென்றான் பாரதி. ஆக, நமக்குக் கிடைத்த கைப் பொருளை – ஏழைகளின் வயிற்றிற் சேமிப் போமாக. இது எம்மோடு கூடவரும். மறு பிறப்பிலே நாம் பசியால் வருந்திக் கை நீட்டினால் வந்து சேரும். இது எவர்க்கும் முடிந்த காரியம். நாம் உண்ணும் போது, " அம்மா பசிக்கிறது" என எமது வீட்டுக் கதவைத் தட்டினால், உண்பதில் ஒரு பகுதியை அந்தக் குரலுக்கு ஈய வேண்டும்.

" *யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒருபச்சிலை*
*யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை*
*யாவர்க்குமாம்உண்ணும்போதுஒருகைப்பிடி*
*யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே*" -
(திருமந்திரம் 352)

உணவை உண்பதற்கு முன்னம் இறைவனைப் பச்சிலையிட்டு வணங்குதல் எல்லார்க்கும் முடிகிற காரியம். அப்படியே பசுவுக்கும் ஒரு வாயளவு புல் அளித்தல் எல்லோர்க்கும் முடிகிற காரியம். அதைப் போலவே நாம் சாப்பிடுவதற்கு முன்பு சிறிது உணவைப் பிறர்க்கு கொடுத்துச் சாப்பிடுதல் யாவர்க்கும் இயலக்கூடிய காரியம். அவ்வண்ணமே பிறரோடு இனிமையாகப் பேசுதல், யாவருக்கும் முடிந்த சேவை என மேலே சொல்லியவாறு நாம் ஒவ்வொருவரும் செய்வோமாக.

ஆலயங்களில் ஆயிரம் குடம் பாலை அபிடேகம் செய்ய அது சாக்கடையிலே பாய்கிறது. எம் மண்ணிற் பச்சைப் பாலர்கள், கர்ப்பிணிகள் என்பும் தோலுமாய் வாடி வதங்குகிறார்கள். இங்கே அன்னதானம் வழங்குகிறார்கள் பணக்காரர்களுக்கு. ஏழை மக்களை மறந்து விடுகிறார்கள். நினைவு மலர் வெளியிடும் பணத்தை சிவபூமியில் வாழும் சிறார்களுக்கு வழங்கலாமே! இந்த வாழ்வியலுக்கு மாற்றாக மறுமையான வாழ்வும் ஒன்று உண்டு. அது நம் உடம்பில் தங்கியிருக்கும் உயிர்க்கான வாழ்க்கை. (இம்மை - இப்பிறப்பு மறுமை – மறுபிறப்பு) சுந்தரமூர்த்தி நாயனார். இதைச்

*தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்*
*சார்கி னும்தொண்டர் தருகிலாப்*
*பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை*
*புகலூர் பாடுமின் புலவீர்காள்*
*இம்மை யேதரும் சோறுங் கூறையும்*
*ஏத்தலாம் இடர் கெடலுமாம்*
*அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு*
*யாதும் ஐயுறவு இல்லையே"*

புலவர்களே! தம்மையே விரும்பிப் புகழ்ந்து பேசினாலும், சார்ந்திருந்து இச்சை பேசினாலும் இந்நிலை கொண்ட அடியார்கள், ஒன்றுமே கொடாத உலோபிகளைப் பாடாதீர். பரம்பொருளையே பாடுங்கள். அவ்வண்ணம் நீங்கள் பாடினால் சிவன் இம்மையிலே உண்ண உணவும், உடுக்க உடை-யும் கொடுப்பதோடு, மறுமையில் சிவலோக நிலைமையும் தருவான். எனவே துன்பங்கள்- பிணிக-ளிலிருந்து விடுபட அவன் புகழையே பாடுங்கள். (இச்சை – விருப்பம் கூறை – உடை)

மனித வாழ்க்கைக்கு இருவித அமைப்புகள் உண்டு. இவ்வுலக வாழ்க்கை ஒன்று மறு உலக வாழ்க்கை மற்றொன்று. இந்த உயிர் அழிவற்றது. உடம்பு நிலையற்றது. உனவே உயிர்க்கு உறுதியான காரியங்களை மேற்கொள்ள வேண்டும். அதுவே ஆத்ம விடுதலை. இனிப் பிறவாமையும் ஆண்டவனோடு இரண்டறக் கலத்தலும் ஒவ்வொரு ஆன்மாவும் வீடு பேறடைய வேண்டும். இந்த விடுதலைக்காக நாம் உழைக்க வேண்டும். வெறும் சடங்குகளால் இது கைவராது. திருவாசகத்தை ஆய-ிரம்தரம் ஓதினும் பயனில்லை. மனம், வாக்கு, காயம் சுத்தமாய் இருத்தல் அவசியம். எனவே இவற்றை எண்ணி ஆன்மீக நெறியில் எம்மை வழி நடத்தி உயிர்க்கு உறுதி தேடல் இம் மனித வாழ்வின் நோக்கமாகும். எல்லோரும் முதிர்ந்து இளைத்துப் போவோம். அந்த இளைப்பை நீக்க நாம் ஆவன செய்ய வேண்டும். மரணம் சொல்லாமலே வரும். மணிவாசகப் பெருந்தகை வயோதிபத்தின் தள்ளாமையைக் கண்டு, அதற்குச் சேம நிதியாக இந்த எய்ப்பையும் வைப்பையும் கண்டு நல்ல வேலி போட்டார்கள்.

*அப்பனே எனக்கு அமுதனே*
*ஆனந்தனே அகம் நெக அள்ளுவதேன்*
*ஒப்பனே உனக்கு உரிய அன்பரில்*
*உரியனாய் உனைப் பருக நின்றதோர்*
*துப்பனே சுடர் முடியனே துணை*
*யாளனே தொழும்பாளர் எய்ப்பினிடம்*
*வைப்பனே எனை வைப்பதோ சொலாய்*
*நைய வையகத்து எங்கள் மன்னனே*

(திருச்சதகம் 98)

தொழும்பாளர் – தொண்டர்கள்; எய்ப்பில் வைப்பு - இளைப்பு வந்தவிடத்துப் பயன் படும் வைப்பு நிதி போன்றவன் இறைவன்.

எனவே எய்ப்பில் வைப்பாகத் திகழ்பவன் அந்தச் சிவபெருமானே. உலகியலோடு இணைந்த எய்ப்பில் வைப்புப் பற்றி முன்னரே கூறி விளக்கினோம். தனது தள்ளாமையைத் தளர்ச்சியை உணர்ந்த மணிமொழியார் இந்த அவல நிலையை வெளிப்படுத்தி எம்மையும் ஆற்றுப் படுத்துகிறார்.

*தனித்துணை நீ நிற்க யான் தருக்கித்*
*தலையால் நடந்த*
*வினைத் துணையேனை விடுதி கண்டாய்*
*வினையேனுடைய*
*மனத்துணையே என்றன் வாழ்முதலே*
*எனக்கு எய்ப்பில் வைப்பே*
*தினைத்துணையேனும் பொறேன் துயர்*
*ஆக்கையின் திண்வலையே*

(நீத்தல் விண்ணப்பம் 39)

தீவினையேனுடைய உள்ளத்துக்கு உறுதி கொடுக்கும் துணையானவனே! என் வாழ்விற்கு முழுமுதலான பொருளே! எனக்கு மூப்பு - இளைப்பு இளைத்த காலத்திற் பயன்படு சேமநிதி போன்றவனே! ஒப்பற்ற துணைவனாக, நீ நிலையாய் இருக்கும் காலத்தே தற்போது (நான் என்ற) உணர்ச்சியுற்று முறைமாறாக ஒழுகின இரு வினை-யேனைக் கைவிடாதே. துயரத்தைத் தரும் உடம்பென்னும் திண்ணிய வலையிற் கிடப்பதைத் தினையளவு நேரங்கூடப் பொறுக்க மாட்டேன். இந்த உடம்பைத் திண்வலை என்கிறோம். அறுக்கவே முடியாத நைலோன்வலை என்பதை எப்பதேனும் எண்ணிப் பார்த்தது உண்டா?. பிறவியென்னும் வலையை அறுக்க வந்த பிறவியே மானுடம். இவ்வளவு அனுபூதிச் செல்வரன ஆளுடைய அடிகள் இந்தத் தளர்வு நிலையை எண்ணி எண்ணிக் கரைகின்றார் இப்படி:

*ஒப்புனக்கில்லா ஒருவனே அடியேன்*
*உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே*
*மெய்ப்பதம் அறியா வீறிலியேற்கு*
*விழுமிய தளித்ததோர் அன்பே*
*செப்புதற்கரிய செழுஞ்சுடர் மூர்த்தி*
*செல்வமே சிவபெருமானே*
*எய்ப்பிடத்துன்னைச் சிக்கெனப்பிடித்தேன்*
*எங்கெழுந் தருளுவதினியே* (பிடித்த பத்து)

எய்ப்பிடத்த - இளைப்பு வந்தபோழ்து இந்தத் தளர்ந்த நிலைக்கு ஊன்றுகோல் இறைவன்தானே! பூடகமாகச் சொன்னபோதும் - வழிக்குத் துணையான ஆதிப் பரம்பொருளை இறுக்கிப் பிடித்தேன். இனி நீ என்னை உதறித் தள்ள முடியாதென்ற உண்மையையும் தன் திருவாக்கான திருவாசகத்தில் எடுத்துக் கூறிப் படிப்போரையும் வழிப்படுத்தும் பாவம் *மிக மிக உச்சமானது. உசிதமானது.*
*இந்த நிலைப்பாடு எல்லார்க்கும் பொது. நம்மாழ்வார் அருளிப்போந்த திருவாய்மொழியில் ஓர் பாசுரம் இது:*
-

*எய்தமதா ரெய்த்தா ரெய்தார் என்று*
*இல்லத்தாரும் புறத்தாரும்*
*மொய்த்து ஆங்கலறி முயங்கத்தாம்*
*போகும் போது உன்மத்தர் போல்*
*பித்தே யேறி யனுராகம்*
*பொழியும் போதெம் பெம்மானோ*
*பொத்தே சென்று. அங் குளம் கூடக்*
*கூற்றாயாகில் நல்லுறைப்பே* (திருவாய்மொழி 8-8-7)

இனசனம் அயலார்கூட, இவர் தயர்ந்தார் தளந்தாரென்று அலறிக் குளறினாலும், என் உயிர் பிரியும்போதும் கண்ணனை எண்ணுக என்கிறார் சடகோபர். பெரியாழ்வார் ஒருபடி மேலே எய்ப்பு வந்து உயிர் பிரியும் வேளை உனை நினைக்க மாட்டேன். அப்போதைக்காக இப்போதே சொன்னேன் என எம்மை எல்லாம் நூதனத்துக்குள் ஆழ்த்துகிறார்.

*துப்புடை யாரை யடைவ தெல்லாம்*
*சோர் விடத் துத்துணை யாரென்றே*
*ஒப்பிலே னாகிலும் நின்னை யடைந்தேன்*
*ஆனைக்கு நீயருள் செய்தமையால்*
*எய்ப்பனை வந்து நலியும் போதங்*
*கேதும் நானுன்னை நினைக்க மாட்டேன்*
*அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்*
*அரங்கத்தரவணைப் பள்ளியனே*
(பெரியாழ்வார் திருமொழி 4-10-1)

ஒவ்வொருவரும் புண்ணிய பாவங்களை அனுபவித்தே தீர வேண்டும். பாவம் செய்யும்போது கேட்டதில்லை, சொல்வதில்லை. பயப்படுவதில்லை. நரகத்தை எண்ணும்போதுதான் பயமாக இருக்கிறது. பகவானின் திருநாமங்களைச் சொன்னாலென்ன? அவனை நினைத்தால் என்ன? முடியுமா? உடல் நன்னறாக இருக்கும் போதே அவனை நினையுங்கள். உங்களைக் காப்பாற்றுவான். எனவே ஆனைக்கு அருள் செய்ததுபோல தன்னை யும் பாதுகாப்பான் எனப் பெரியாழ்வார் கூறுவது நமக்கும் சாலப்பொருந்துமன்றோ!

பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் என்பவர் பாடிய அஷ்டப்பிரபந்தம் திவ்வியபாடல்கள். அவரும் ஒரு புதிய உத்தியைப் பாவித்து நோய் வந்து வாதப்பித்த சிலேத்துமம் என்னைப் பிடித்து வாட்டும்போது என்னால் ஏதும் செயற்படமுடியாது. ஆகவே உரை வந்து கூறும் பத்ததிலேயே இன்றே உன் அடைக்கலமென்று தன்னைப் பகவானிடம் ஒப்புக் கொடுக்கிறார். அது நமக்கும் பொருந்துகிறது. வாசகர்கள் சிந்திக்கட்டும்:-

*கொண்ட மருந்தும் கடைவாய்*
*வழியுகக் கோழை வந்து*
*கண்டம் அருந்துயர் ஆம்போது உன்*
*பாதம் கருதறியேன்*
*வண்டு அமரும் துளவோனே தென்*
*சோலை மலைக் கரசே*
*அண்டம் அருந்தும் பிரானே*
*இன்றேயுன் அடைக்கலமே!* (அழகர் அந்தாதி 78)

## தமிழ் நாட்டிலுள்ள பிள்ளையார்பட்டி பிள்ளையாரின் பெருமைபற்றி கவியரசு கண்ணதாசன் இயற்றிய கவிதை

அற்புதக் கீர்த்தி வேண்டின்

ஆனந்த வாழ்க்கை வேண்டின்

நற்பொருள் குவிதல் வேண்டின்


நலமெலாம் பெருக வேண்டின்

கற்பக மூர்த்தி தெய்வக்

களஞ்சியத் திருக்கை சென்று

பொற்பதம் பணிந்து பாரீர்

பொய்யிலைக் கண்ட உண்மை!



# உங்களுக்கு மன அமைதி வேண்டுமா?

ஸ்வாமி சிவானந்தர்.

*சென்ற இதழ் தொடர்ச்சி*

**பகைமை - எடுத்தாரை சுடும் நெருப்பு**

உங்களைத் திட்டுபவர் அல்லது துன்புறுத்துபவர் மீது உங்கள் இதயத்தில் எந்தவிதமான பகைமை உணர்ச்சியையும் கொண்ணாதீர்கள். வெளிப்படையாக கோபத்தைக் காட்டுவதைவிட இது மிகவும் மோசமானது. இது மானசீகப் புற்று நோய். பகைமையை வளர்க்காதீர்கள். மறவுங்கள், மன்னியுங்கள். இது ஏதோ ஒரு வெறும் லட்சியவாதப் பழமொழி அல்ல. உங்கள் அமைதியைப் பாதுகாக்க ஒரே வழி இதுதான். உள்ளே பகைமையை வளர்ப்பது என்பது ஒருவனுக்கு மிகுந்த கெடுதியைச் செய்யும். உங்களுக்குத் தூக்கம் போய்விடும். உங்கள் ரத்தத்தை நீங்கள் நஞ்சாக்குகின்றீர்கள். ரத்தக் கொதிப்பும் படபடப்பும் உங்களிடம் அதிகரிக்கும். பழிச்சொல்லோ, அவதூறோ உங்களுக்குக் கடந்த காலத்தில் எப்பொழுதோ செய்யப்பட்டது. அது முடிந்துபோன விஷயம். சிந்திய பால் அது. அதையே மீண்டும் மீண்டும் நினைத்து அந்த அவதூறு அல்லது பழிச்சொல்லின் துன்பத்தை ஏன் நீங்கள் நீடிக்கிறீர்கள்? பகைமை மற்றும் வெறுப்பு எனும் ஆறுகின்ற காயத்தை நீங்கள் குத்திக் குத்தி மீண்டும் ஏன் புண்ணாக்குகிறீர்கள்? இது மிகவும் முட்டாள்தனம் இல்லையா? இந்தச் சிறிய விஷயங்களில் நேரத்தையும், வாழ்க்கையையும் வீணடிப்பது என்பது தகாத ஒன்று. ஏனெனில் மனித வாழ்வு மிகவும் சுருங்கியது. இன்றிருப்பார் நாளை இல்லை. இந்தத் தீய வழக்கத்தை விடுங்கள். உங்களுக்கு விருப்பமான வேலை ஒன்றில் பூரணமாக மனதை லயிக்கச் செய்வதே நீங்கள் செய்ய வேண்டிய சிறந்த காரியமாகும்.

உங்களுக்குப் பிடித்தமான வேலை அல்லது பொழுதுபோக்கில் நீங்கள் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்களானால் உங்களுக்கு மிகுந்த மன அமைதி கிட்டும். அப்பொழுது ஒன்றைப் பெற்றோம். ஒன்றைச் செய்தோம் என்ற மனத்திருப்தி உங்களுக்குக் கிட்டும். மனிதன் வெறும் உணவால் மட்டுமே வாழ முடியாது பணத்தைக் காட்டிலும் மன அமைதியே பெரிது என நீங்கள் எண்ணினால், அதிக வருமானத்துடன் கூடிய ஆனால் நீங்கள் விரும்பாத ஒரு வேலையை விட குறைவான வருமானத்துடன்கூடிய மன அமைதி தரும் ஒரு வேலையை நீங்கள் மனமுவந்து ஏற்பீர்கள்.

**புகழ் மனிதனுக்குத் தேவையா?**

உலகப் புகழ், உலகப் பெருமையை விரும்பாதீர்கள். மன, மற்றும் பௌதீக அமைதியின்மைக்கு இதுதான் முக்கிய காரணமாகும். பிறர் உங்களை மதிக்க வேண்டும் என ஏன் நீங்கள் விரும்புகிறீர்கள்? அந்த மற்றவர் பெரும்பாலும் முட்டாள் ஜனங்களே. இந்த உலகில் பெரும் வெற்றி அடைந்த மகாபுருஷர்கள் பிறரின் அங்கீகரிப்பை, சமூக மரியாதையை எதிர்பார்த்தவர்களல்ல என்பதை நினைவில் வையுங்கள். மற்றவர்களது மதிப்பிற்காக நாம் ஏன் இவ்வளவு தூரம் அலட்டிக்கொள்ள வேண்டும், அதற்குப் பதிலாக கடவுளது ஆசிர்வாதத்திற்காக, ஞானம் மிக்க மகான்களது ஆசிகளுக்காக நாட்டம் கொள்ளுங்கள் இதுவே செய்யத் தகுந்தது, முயல வேண்டியது.

**பொதுமக்கள் கருத்துக்கு எவ்வளவு மதிப்பு?**

பொதுமக்களின் கருத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்காதீர்கள். பெரும்பாலும் பொது மக்களின் கருத்து தவறாக உள்ளது. ஒழுக்க நியதிகள், நன்னெறிகள், மறை நூல் வாக்கியங்கள், அறிஞர்கள் மற்றும் மகான்களது கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். நீங்கள் வாழ்வில் தவறவே மாட்டீர்கள்.

**நம் விதிதான் நமக்கு**

பொறாமை அடிக்கடி அமைதியைக் குலைக்கிறது. நீங்கள் எவர் மீதாவது பொறாமைப்படுகிறீர்களா? பொறாமை ஒரு வியாதி. உங்களது அலுவலகத்தில் ஒருவர் உங்கள் பதவி உயர்வைத் தடுத்தார் என்பதாலோ அல்லது உங்கள் வியாபாரத்தில் ஒருவர் போட்டியிட்டுக் குலைத்தார் என்று நீங்களாகக் கற்பனை செய்வது தவறு. திரும்பத் திரும்ப எண்ணுங்கள்: உங்களது முன்னேற்றத்தை எவரும் ஆக்கவோ அழிக்கவோ முடியாது. உங்கள் தொழிலும் உங்களது வாழ்க்கையும் உங்கள் முன் வினையால் உருவாக்கப்படுகிறது. தீதும் நன்றும் பிறர் தர வாரா! நீங்கள் முன்னேற வேண்டும் என்று விதி இருந்தால் உலகம் முழுவதும் ஒன்று திரண்டாலும் அதைத் தடுத்து நிறுத்த முடியாது. அதற்கு மாறாக நடக்க வேண்டுமெனில் அப்பொழுதும் உலகம் முழுவதாலும் ஒன்றும் செய்ய இயலாது. ஒவ்வொரு மனிதனும் அவனது விதியினாலேயே ஆளப்படுகிறான். ஒருவரை சார்ந்திருப்பது போலத் தென்பட்டாலும் ஒருவரது வாழ்விலிருந்து அடுத்தவருடையது வேறுபட்டது ஆகும். இதை நினைவு கொள்ளுங்கள். இந்தக் கருத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். ஒருபொழுதும் பிறர் மீது பொறாமை கொள்ளாதீர்கள் அல்லது உங்கள் துன்பத்திற்கு பிறரைப் பழிக்காதீர்கள்.

**சூழ்நிலைக்கேற்ப நாம் மாற வேண்டும்**

உங்கள் அமைதியைக் குலைக்கும் உங்களது ஒரு சூழ்நிலை உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். சூழ்நிலையை மாற்றுவதற்கு பதிலாக நீங்கள் உங்களையே இப்பொழுதை விட நல்ல நிலைமைக்கு மாற்றி அமையுங்கள். இப்படி நீங்கள் செய்தால் வருடக்கணக்காக உங்களுக்குக் கெட்டதாகத் தென்பட்ட உங்களது சூழ்நிலை அதிசயிக்கத்தக்க விதத்தில் நல்ல விதத்தில் மாறத் தொடங்குவதைக் காண்பீர்கள். நீங்கள் மென்மேலும் தூய்மை அடையும்பொழுது சூழ்நிலையும் மென்மேலும் ஒத்த விதத்தில் வளர்ச்சி அடையும். எப்படி? என்று கேட்காதீர்கள். முயன்று பாருங்கள். அனுபவத்தில் தெரியும் நண்பரே.

**பொறுமை தரும் பலம்**

எது நடந்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ளுங்கள். எதைக் குணப்படுத்த முடியாதோ அதைப் பொறுத்தேயாக வேண்டும். மகிழ்ச்சியுடன் பொறுத்துக் கொள்ளுங்கள். காலை முதல் நடு இரவு வரை நூற்றுக்கணக்கான வசதிக் குறைவுகள், தொல்லைகள் மற்றும் துன்பங்களுடன் வாழக் கற்றுக்கொள்ளுங்கள். பொறுமை, உள்பலம், மற்றும் இச்சாசக்தி உங்களிடம் அதிகரிக்கும். பிரதிகூலமானதை அனுகூலமானதாக நீங்கள் மாற்றி அமைப்பீர்கள். ஒருவரது அடிப்படைத் தேவைகளுக்குக் கூட மற்றவரை அண்டி இருப்பதுதான் ஒருவரது அமைதியை இழப்பதற்கான முக்கியமான காரணமாகும். 'பராதீனம் ப்ராணசங்கடம்' பிறரை அண்டி இருப்பது என்பது துன்பம் தருவதுதான். சுதந்திரம் ஆனந்தம் அளிக்கும். எனவே தன் காலில் நிற்க முயலுங்கள். முடிந்த மட்டும் முயலுங்கள்.

மனப்பூர்வமாக முயன்றால் பல்வேறு துறைகளில் உங்களால் தன் காலில் நிற்க முடியும் என்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள். உங்கள் கடமைகளை உடைகளை நீங்களே துவைத்துக் கொள்ளுங்கள். உங்கள் அறையை நீங்களே சுத்தம் செய்து கொள்ளுங்கள். உங்கள் உணவை நீங்களே சமைத்துக் கொள்ளுங்கள். உங்கள் கடிதங்களை நீங்களே டைப் அடித்துக்கொள்ளுங்கள். இவற்றை நீங்கள் தினமும் செய்துதான் ஆகவேண்டும் என்பதில்லை. தீராது என்ற நிலையில் இருந்த சிறிய திறமைகள் உங்களுக்குப் பெரும் உதவியாயமையும்.

# கோயில்கள் சோழவேந்தர்கள் தமிழருக்கீந்த சொத்துக்கள்.

வீரகேசரி பத்திரிகையில் 07.09.1997 அன்று தேவமணி ர.்.பேல் எழுதியது.



முதலாம் ராஜராஜனின் (985-1014) அற்புத ஓவியம். தஞ்சைப் பெரிய கோயில்

தென்னாட்டை ஆண்ட அரச மரபுகளில் சோழரே உன்னதமானவர்கள். இந்த நிலப்பகுதியை 430 ஆண்டுகள் (850-1280) தொடர்ச்சியாக ஆண்டு தமிழருக்கும் தமிழ் மண்ணுக்கும் புகழ் சேர்த்தவர்கள் இவர்கள். வேறு எந்த அரச மரபும் இத்தனை நீண்ட ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆண்டதில்லை. சிறந்த நிர்வாக ஆட்சித்திறன் கொண்டிருந்த இவர்களின் எண்ணமெல்லாம் மக்களின் நலனிலேயே இருந்தது. சோழரின் நில அளவை முறைகள் ஒழுங்கும் தெளிவும் கொண்டு தவறில்லாமல் இருந்தன. மிகவும் தேர்ச்சி பெற்ற இவர்களின் அதிகாரிகள் எல்லா நிலைக-ளிலும் சிறப்புடன் பணியாற்றி அரசு இயந்திரம் செவ்வனே இயங்கச் செய்தார்கள்.

இந்த அரச மரபினர் சங்க காலத்தை (கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை) சேர்ந்திருந்தாலும் கூட இந்தக் காலகட்டத்தின் முடிவில் தென்னாட்டுக் களத்திலிருந்தே காணாமல் போய் ஒன்பதாம் நூற்றாண்டில் விஜயாலய சோழன் தலையெடுத்த பின்னரே வரலாற்று வெளிச்சத்திற்கு வந்திருக்கிறார்கள்.

சில வேளை சங்கம் வளர்த்த இ ந்த அரச மரபினர் குறுநில மன்னர்களாக உறையூர், பழையாறு போன்ற பழைய தலை நகரங்களிலே தொடர்ந்து வாழ்ந்திருக்கக்கூடும். பல்லவரின் ஆட்சி முடிவுற்றபோது முத்தரையர் என்ற சிற்றரசர்கள் நியமம் என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு காவேரிப்படுகை ஊர்களை ஆண்டார்கள். நியமம் கல்வெட்டுகளிலிருந்து கோ இளங்கோ என்ற முத்தரையர் மிகவும் புகழ்பெற்றவர் என்று தெரிகிறது. இவரை உறையூரிலிருந்து வந்த விஜயாலய சோழன் வெற்றி கொண்டு கி.பி. 850ல் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு சோழர் அரசை நிறுவினார்.

இவர்கள் முற்கால, நடுக்கால பிற்காலச் சோழர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். இவர்களில் நடுக்காலச் சோழர்களே தமிழ்நாட்டின் தலைவிதியையே மாற்றியமைத்த வல்லவர்கள். அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த ஐந்து நடுக்கால




பேரரசர்கள் ஆற்றல் மிக்க மாவீரர்களாக, மாமேதைகளாகத் திகழ்ந்தது உலக வரலாற்றிலேயே ஒரு விந்தையான நிகழ்ச்சிதான். ஐவருமே வீரச் செயல்களிலும் போர் புரிவதிலும், கோயில்கள் எழுப்புவதிலும், கவின் கலைகளை வளர்ப்பதிலும் தங்களில் ஒருவரை ஒருவர் மிஞ்சவே முயன்றனர்.

மனித குலத்திற்கு, குறிப்பாக தமிழினத்திற்கு எல்லா நன்மைகளும் விளைய வேண்டும் என்ற நல்லெண்ணத் தில் இறைவனே இந்தப் பேரரசையும் அரச மரபையும் தோற்றுவித்தாரோ என்று எண்ணும் அளவிற்கு சிறப்புப் பெற்றிருந்தார்கள் இந்த மன்னர்கள்.

முதலாம் ராஜராஜனின் பெருமை மிக்க மகன் முதலாம் ராஜேந்திரன் தன் தந்தையின் வழியாகக் கிடைத்த பரந்த சோழப் பேரரசை சிதற விடாமல் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டது, மட்டுமன்றி வடக்கு நோக்கிப் படையெடுத்துச் சென்று கங்கை வரை இருந்த நாடுகளையெல்லாம் அடிமைப் படுத்தினார்.

ராஜராஜன் கனவாகக் கண்டதையெல்லாம் ராஜேந்திர சோழ தேவர் நனவாக்கிப் பெருமை கொண்டார். தெற்கில் ஈழம் முதல் வடக்கே கங்கை வரையும், கிழக்கில் கடல் கடந்த நாடுகளான கடாரம், சைலேந்திர பேரரசின் ஸ்ரீவிஜயம் (சுமத்ரா) ஆகியவற்றிலும் வெற்றிக் கொடியை நாட்டிய முதல்



தமிழ் மன்னர் இவரே.

ஈழத்து பொலன்னறுவையில் தன் தாயின் பெயரில் வல்லவன் மாதேவி ஈஸ்வரம் என்ற ஒரு சிவன் கோயிலையும், பழையாறையில் தன் சிற்றன்னை பஞ்சவன் மாதேவியின் நினைவிற்கு ஒரு பள்ளிப்படை கோயிலையும் எழுப்பியது இவருடைய சிறப்புகள்.


முதலாம் ராஜேந்திரனின் மூன்று மகன்களுமே மாநிலமே போற்றும் மாமன்னர்களாகத் திகழ்ந்தார்கள். முதலாம் ராஜேந்திரன் (1018-1054) வடபுல தலைநகர்களான கல்யாணபுரத்தையும் (கல்யாணி) கொல்லபுரத்தையம் (கோல்ஹாப்பூர்) அடிப்படுத்தி புகழ் கொண்டவர். ஒரு வடநாட்டுப் படையெடுப்பில் இந்தப் பேரரசர் யானையின் மீது இருந்து போர் புரிந்த போது சாளுக்கியரின் வஞ்சனையால் கொலையுண்டார். இந்த மன்னர் இறந்து பட்டதைக் கேள்வியுற்ற இவரது தம்பி இரண்டாம் ராஜேந்திர தேவன் (1052-1064) மின்னலெனப் போர்க்களத்தில் புகுந்து சாளுக்கிய படைகளை நிர்மூலமாக்கி, அவர்களின் தளபதி



ஈழத்து பொலன்னறுவை வல்லவன் மாதேவி ஈஸ்வரம்- சிவன் கோயில்


ஜெயசிம்மனையும் வீழ்த்தினார். போர்க்களமாகிய கொப்பம் என்ற இடத்திலேயே உடலில் போர்க்காயங்களோடு தன்னைச் சோழப் போரரசின் பேரரசனாக முடிசூட்டிக் கொண்டார். அந்த நிகழ்ச்சியை குறிப்பிடும் ஜெயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி கொப்பையூர் பெருங்களத்திலே முடி கவித்தவன் என்கிறது. இவரைக் கல்வெட்டுகள் திருமகள் மருவிய செங்கோல் வேந்தன் என்று பாடுகின்றன.

தோல்வியே அறியாத இந்த ஐந்து மாமன்னர்களின் வீரம் உள்ளாட்சியிலும் மத்திய ஆட்சியிலும் அவர்கள் ஏற்படுத்திய அரசு இயந்திரத்தின் செயற்பாடுகள், அரசு வருவாயின் நிர்வாகம், இவையாவும் அவர்கள் எமக்களித்து விட்டுப் போன சிறப்பான பரம்பரைச் சொத்துக்கள். ஆயினும் இந்தப் பேரரசர்களை நினைவுபடுத்துபவை அவர்கள் எமது பரம்பரைக்காக நிர்மானித்த அழியாக் கருவூலங்களான கோயில்கள், சிற்பங்கள்,



ஓவியங்கள் ஆகியவை ஆகும்.

தென்னாட்டு வரலாற்றின் பொற்காலமான சோழர் ஆதிக்கம் மக்களுக்கு நன்மையையே செய்யும் ஆதிக்கம் முதலாம் ராஜராஜன் ஆட்சிக்காலத்தில் தொடங்கியது. சோழரின் நேர்வழி வாரிசுகள் இறந்த பின்னர் முதலாம் ராஜேந்திரனின் மகள் வயிற்றுப்



தஞ்சைப் பெரிய கோயில்- பிரகதீஸ்வரப் பெருமான்

பேரனான முதலாம் குலோத்துங்கனின் கைகளுக்கு சோழப் பேரரசின் ஆதிக்கம் வந்தது.


முதலாம் குலோத்துங்கன், அவனுக்குப் பின்னால் வந்த விக்கிரம சோழன் முன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் ராஜேந்திரன் ஆகிய எல்லோருமே ஒருவரை ஒருவர் விஞ்சும் வண்ணம் வீரம் நிறைந்த பேரரசர்களாய் இருந்தார்கள்.

இந்த வரிசையில் வந்த மூன்றாம் ராஜேந்திரன் சோழர் பேரரசைப் பாதுகாக்க எவ்வளவோ முயன்றும் இறைவனின் எண்ணம் வேறு விதமாக இருந்தது. சடையவர்மன் சுந்தர பாண்டியனால், இந்த மன்னன் போர்க்களத்தில் கொல்லப்பட்டதுடன் சோழர் மரபின் கடைசி அடையாளம் இந்த மண்ணிலிருந்து மறைந்து போனது.

முதலாம் குலோத்துங்கனும் விக்கிரம சோழனும் பல கோவில்களை எழுப்பினார்கள். குலோத்துங்கனால் நிருமாணிக்கப்பட்ட தேர்க்கோயில் சோழரின் கட்டிடக் கலையில் ஒரு புதிய பாணியைத் தோற்றுவித்தது. இந்தப் பாணியையே பிற்காலத்தில் கலிங்கம், விஜயநகரம் ஆகிய நாடுகள் பின்பற்றின.

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் (1070-1120) திருக்காமக் கோட்டம் என்று அம்மனுக்குத் தனியே

திருமுன் அமைக்கும் முறை வழக்கத்திற்கு வந்து தமிழ்நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டது. இவர்



ஈழத்து பொலன்னறுவை வல்லவன் மாதேவி ஈஸ்வரம்- சிவன் கோயில

காலத்தில்தான் உயர்ந்த மதில்கள் கொண்டதாய்

மூன்று அல்லது ஐந்து திருச்சுற்றுகளுடன் கூடிய பிரம்மாண்டமான கோவில்கள் உருவாகின. சிதம்பரம், திருவாரூர், திருவானைக்கா, திருவரங்கம் போன்ற பெரிய கோவில்கள் எழுப்பப்பட்டு அவற்றின் வாயிற்கோபுரங்கள் கருவறை விமானத்தைவிட உயரமாக அமைக்கப்பட்டன. கோவில்களில் நூற்றுக்கால் மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள் கட்டும் பாணியும் அப்போதுதான் தோன்றியது.

இரண்டாம் குலோத்துங்கன் தன் ஆட்சிக் காலம் முழுவதையும் தில்லை நடராஜர், திருவாரூர் தியாகராஜர், ஆகியோரின் கோவில்களோடு வேறு சில புகழ் பெற்ற சிவத் திருத்தலங்களையும் சிறப்புடையனவாக ஆக்குவதிலேயே செலவிட்டான்.

இரண்டாம் ராஜேந்திரன் தஞ்சையின் ராஜராஜேஸ்வரம் பாணியைப் பின்பற்றி தாராசுரத்தில் ராஜராஜேஸ்வரம் என்று ஒரு சிற்பக் கூடத்தையே கோவிலாக எழுப்பினார். இப்போது அது ஐராட்டேசுவரர் கோவில் என்று பெயர் கொண்டிருக்கிறது. மூன்றாம் குலோத்துங்கனும் அதே பாணியில் திருபுவனத்தில் ஒரு அழகிய கோவிலைக் கட்டினார்.

பிற்காலச் சோழர்கள் எழுப்பிய கோவில்களில் இவை இரண்டுமே மிகவும் சிறப்பானவை.

போர் புரியும் வழிமுறைகளில் எப்படி எல்லாச் சோழர்களும் பேராற்றலும் திறமையும் பெற்றிருந்தார்களோ அப்படியே கலைகளை வளர்ப்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தார்கள். கட்டிடம், சிற்பம் (கல், உலோகம்), இசை, நாடகம், நாட்டியம் என்று எல்லாக் கவின் கலைகளையும் பேணிக்காத்தார்கள்.

முதலாம் ராஜராஜன் காலத்தில் 52 கோயில்களும், முதலாம் ராஜேந்திரன் காலத்தில் 25 கோயில்களும் கட்டப்பட்டன. இவையெல்லாம் உலக சாதனைகளாகக் கருதப்படுகின்றன.

தமிழ் நாட்டில் இன்னும் வழிபாட்டில் இருக்கும் சிறப்பு மிக்க கோவில்கள் எல்லாம் சோழருடன் தொடர்பு கொண்டவையாகவே இருக்கும். திருப்பதி வேங்கடமுடையான் கோயிலும் கூட திருப்பணிகள் செய்து அக்கோயிலின் நிர்வாக முறையையே மாற்றியமைத்தவர் முதலாம் ராஜராஜன்தான். சோழ மன்னர்கள் காலத்தில் எழுதப்பட்ட அவர் தம் வரலாற்றைக் கூறும் கல்வெட்டுகள் தமிழ்நாடு முழுவதும் ஏராளமாகக் காணப்படுகின்றன. இவை அந்த மன்னர்களின் சாதனைகளை எடுத்துக் கூறும் மெய்க்கீர்த்திகளுடனேயே தொடங்கும். தமிழ்நாடு முழுவதும் பரந்து நிற்கும் கோயில்கள் சோழ அரச மரபினர் நமக்கு விட்டுச் சென்ற விலை மதிக்க முடியாத சொத்துக்கள் ஆகும்.


அவற்றில்தான் எமது கலைகளும் பண்பாடுகளும் வரலாறும் கோவில் கொண்டு இத்தனை நூற்றாண்டு காலமாக எமக்குப் பெருமை தந்து, உள்ளத் தூண்டுதல்களாக இருக்கின்றன என்றால் கூட அது மிகையில்லை.

# உயிர் வகைகள்

எண்ணற்ற உயிர்கள் உலகினிலே உள்ளன. அவை நால் வகைத் தோற்றமுடைய, எழு வகைப் பிறப்புடைய, எண்பத்து நான்கு நூறாயிரம் உயிர் வகைகள் என்பது சித்தாந்தக் கொள்கை. வித்திலிருந்து பிறந்து மேல் நோக்கி வளர்வனவற்றை உற்பீசம் என்பர். முட்டையில் தோன்றுவனவற்றை அண்டசம் என்பர். கருப்பையில் தோன்றுவனவற்றை சராயுசம் எனக் குறிப்பிடுவர். வியர்வை முதலான அழுக்குகளில் இருந்து தோன்றும் உயிர்கள் சுவேதசம் எனப்படும். இவை நான்கும் நால்வகைத் தோற்றங்கள்.

எழுவகைப் பிறப்புக்கள் என்பன: ஊர்வன, நீர் வாழ்வன, விலங்கினம், மானிடம், தாவர வகை, பறவை வகை, தேவர்கள் என்பன. இத் தொகையையும், வகையையும் சற்று மாறுபட்டுக் கூறும் மரபும் உண்டு. ஆயினும் பிறப்பு வேறுபாடுகள் எண்பத்து நான்கு நூறாயிரம் என்றே கொள்ளப்படும். இவ்வாறு தோன்றி வாழும் உயிர்க்குலம் எண்ணிறந்தன என்பது சைவக் கொள்கை.

மானுடப் பிறவி பெறுதற்கு அரியது அதனாலேயே அப்பரடிகள் " வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்று பாடினார். ஏனெனில் இப் பிறவியல்தான் இறைவனைத் தலையால் வணங்கி, நாவால் புகழ்ந்து போற்றி, நெஞ்சால் நினைந்து, கையாரக் கும்பிட்டு அவன் திருவருளால் உய்வு பெறலாம்.





# கேள்வி பதில்

**கேள்வி:** பிற மதங்களில் ஒரே விதமான மதத் தலைவரும், ஒரே பொது நூலும் இருக்க, எமது சமயத்தில் மட்டும் இத்தனை விதமான சமயத் தலைவர்கள் ஏன்? ஒவ்வொருவருடைய அணுகு முறையும் ஏன் வேறாக இருக்கிறது? இத்தனை விதமான வேதாந்த நூல்களுக்கு அவசியம் என்ன?

**பதில்:** நாம் கல்வி கற்கும் முறையில் ஆரம்ப பள்ளிப் படிப்புடன் நிற்கும் நிலை இருக்கிறது. அடுத்தபடியாக உயர் நிலைப் பள்ளிப்படிப்புடன் நிறுத்திக் கொள்ளும் நிலை இருக்கிறது. அதற்கு மேல் கல்லூரிப் பட்டப் படிப்பு இருக்கிறது. அதையும் விடச் சிறப்பாக படிக்க விரும்புகிறவர்களுக்கு உயர் பட்டப் படிப்பு படிக்கிறார்கள். சிலர் மேலே போய் ஆராய்ச்சி செய்கிறார்கள்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்ற பாடப் புத்தகங்கள் இருக்கின்றன. அவற்றைச் சொல்லிக் கொடுக்க தகுந்த ஆசிரியர்களும் இருக்கிறார்கள். உயர் நிலைப் பள்ளி மாணவன் உயர் பட்டப் படிப்புக்குரிய புத்தகங்களை எடுத்துப் படித்தால் அவனுக்கு ஏதும் புரியாது. அந்த வகுப்பில் போய் உட்கார்ந்து கவனித்தாலும் மூளை குழம்பிப் போய்விடும். அதுமட்டுமல்ல, ஆராய்ச்சிப் படிப்பைப் போதிக்கும் ஆசிரியரை, சாதாரண ஆரம்பப் பள்ளிக்குக் கொண்டு வந்து கற்றுக்கொடுக்கச் சொல்லுங்கள். அவர் திக்கு முக்காடிப்போவார்! ஒவ்வொரு நிலையாகப் படித்துத்தான் நாம் உயர் பட்டப் படிப்பின் நிலையை அடைய முடியும். அந்தந்த நிலைக்குரிய பாடங்களையும் ஆசிரியரையும் தேர்ந்தெடுத்தால்தான் நாம் பலன் பெற முடியும்.

நமது இந்து சமயம் இதைப் போன்றது. இதில் ஆரம்பப் பள்ளி முதல் பட்டப் படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு வரை உண்டு. அந்தந்த நிலையில் கொள்கைகளை விளக்கக் கூடிய ஆச்சார்ய புருஷர்கள் நம்மிடையே வாழ்கிறார்கள். மற்ற மதங்களைப் போலன்றி நமது சமயம், சந்தேகங்களைக் கேட்கவும், தெளிவு பெறவும், சுதந்திரமும் வசதிகளும் அளிக்கிறது. நாமாகவே நம்மைப் படிப்படியாக உணர்ந்து, படிப்படியாக உயர்ந்து உயர் நிலையை அடையலாம். இதை ஒரே பிறவியில் அடைய முடியாதவர்கள், தொடர்ச்சியாக அடுத்த பிறவியில் அடையலாம் என்று எமது சமயம் அனுமதி கொடுக்கிறது.

இதைவிட சுதந்திரமானதும், எல்லோருக்கும் ஏற்றதும் அவரவர் தகுதிக்கேற்ப தேர்ந்தெடுத்துக் கொள்ளக் கூடிய வசதியைக் கொடுப்பதுமான இன்னொரு சமயத்தை நாம் வேறு எங்கே பார்க்க முடியும்?

*சுவாமி சின்மயானந்தர், Knowledge of Self என்ற நூலிருந்து.*

**கேள்வி:** மலைப்பகுதிகளில் சித்தர்கள் இன்றும் இருக்கிறார்கள் என்பது உண்மையா?


**பதில்:** ஆம். உண்மைதான். சித்தர்கள் எனப்படுபவர்கள் நமக்கும் இறைவனுக்கும் இடைப்பட்டவர்கள். அவர்கள் எவ்வளவு ஆண்டுகள் வேண்டுமானாலும், எந்த உருவத்திலும், உருவம் இல்லாமலும் இந்த உலகத்தில் எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். பொதுவாக அவர்கள் காடுகள், மலைகள் போன்ற மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில், தனிமையில் இருந்து இறைவனைத் தியானம் செய்து கொண்டிருப்பார்கள்.

சில நேரங்களில் மக்கள் நடமாடும் இடங்களிலும் , அவர்கள் சாதாரண மனிதர்கள் போல வாழ்ந்து கொண்டிருப்பார்கள். 'சித்த' எனில் முடிந்த, தெளிந்த எனப் பொருள்படுகிறது. வாழ்க்கையில் அனைத்து கர்ம பலன்களையும் முடித்துக் கொண்டு எல்லாம் வல்ல இறைவனைப் பற்றிய அறிவில் தெளிந்து விளங்குவதால், சித்தர்கள் என அழைக்கப் படுகிறார்கள்.

நமது மதத்தில் மட்டும் அல்லாமல், மற்ற மதங்களிலும் இது போன்ற சித்தர்களின் ஆற்றல் போற்றப்படுகின்றது. கால அளவுகளோ, தேசங்களின் எல்லைக் கோடுகளோ அவர்களைக் கட்டுப்படுத்தாது.

*சமஸ்கிருத பண்டிதர் சண்முக சிவாச்சாரியார்.*

# கடவுள் டாக்டர்



திராத நோய்களையும் தீர்த்து வைக்கும் கோயில் எது? என்று பெரியவர்களிடம் கேட்டால் 'வைத்தீஸ்வரன் கோயில்' என்றே பதில் வரும். ஆமாம் சிவபெருமான் ஒரு டாக்டராக இருக்கும் ஊர் வைத்தீஸ்வரன் கோயில். அன்னையின் பெயர் தையல் நாயகி. அவரும் மருத்துவச்சி. இந்தக் கோயிலில் தரப்படுவதும் 'மருந்து' எனப்படும் மண் உருண்டைதான். அதைப் பயபக்தியுடன் உண்பவர்களுக்கு எல்லாவித நோயும் தீர:கிறது என்பது நம்பிக்கை. கடுகு அளவில் இருந்தாலும் மருந்து எனப்படும் 'திருச்சாத்துருண்டையை' கோயிலிலேயே விற்பனை செய்து வருகிறார்கள்.

தருமை ஆதினத்திற்குச் சொந்தமான வைத்தீஸ்வரன் கோயிலில் மொத்தம் 8 தீர்த்தங்கள் உள்ளன. அம்பாள் சன்னதியின் எதிரே அழகுடன் இருக்கும் பெரிய குளத்திற்கு 'சித்தாமிருத தீர்த்தம்' என்று பெயர். அதிலே நீராடிவிட்டு வைத்தியநாதனை வழிபட்டால் அவரே எல்லா நோய்களுக்கும் வைத்தியம் பார்த்து குணமடையச் செய்வார் என்று பக்தர்கள் நம்புகிறார்கள்.


ராமபிரான் இந்த ஊரில்தான் ஜடாயுவின் வேண்டுகோளின்படி சிதையடுக்கி ஜடாயுவைத் தகனம் செய்ததாக புராணங்கள் செல்கின்றன. அந்த ஜடாயு குண்டத்திலுள்ள விபூதி நோய் தீர்க்க வல்லது என்று சொல்கிறார்கள்.

முருகப் பெருமான் இங்கே குழந்தையாக கவனிக்கப்படுகிறார். அவரது பெயரே செல்வ முத்துக்குமரன்.

தஞ்சை மாவட்ட நவக்கிரகத் தலங்களில் இந்தக் கோயிலும் ஒன்று. இது செவ்வாய் எனப்படும் அங்காரகனுக்கான கோயில். மூலவரும் உற்சவரும் அவருக்குண்டு. ஒவ்வொரு செவ்வாயன்றும் ஆட்டுக்கடா வாகனத்தில் அங்காரகன் எழுந்தருளுவார். செவ்வாய்த் தோஷம் உள்ளவர்களுக்கான பரிகாரத் தலம் இது.

வைத்தியநாதஸ்வாமி லிங்க உருவத்தில் இங்கே தரிசனம் தருகிறார். பிணிகளைத் தீர்க்கும் ஆலயம் என்பதால் தல விருட்சம் என்னவாக இருக்கும்- சொல்லுங்கள்? ஆமாம். வேப்ப மரம்தான் இங்கே தலமரம். கோயிலில் தினமும் ஆறுகாலப் பூஜை நடைபெறுகிறது. பங்குனி மாதத்தில் பெரு விழா. கார்த்திகை அன்று கோயிலில் கூட்டம் நிரம்பி வழிகிறது. திருப்பதி, பழனியைப் போல முடியிறக்குவதும் இங்கே விசேஷம். தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலான குடும்பங்களில் குழந்தை பிறந்தால் முதல் மொட்டையடிப்பது இங்கேதான்.

திருக்குளத்திலே நீராடி வேப்பமர நிழலிலே காற்றாடி மிகப் பெரிய வைத்தீஸ்வரன் கோயிலைச் சுற்றி வந்து விபூதியை நெற்றி நிறையப் பூசி காலார நடந்தாலே உடம்பிலுள்ள வியாதிகள் எல்லாம் பஞ்சாய்ப் பறந்துவிட்ட ஒரு நிறைவும் திருப்தியும் உள்ளுக்குள் உங்களுக்கு உண்டாகும்.



வைத்தியநாதன்

**கயிலாயம்**

பார்வதி தேவி தன் அருகில் அமர்ந்திருந்த ஈசனை அன்புடன் பார்த்தாள். சிவன் மெல்லத் தலை திருப்பினார். "என்ன தேவி உன் பார்வையில் கருணையும் பரிவும் சுரக்கிறதே. யாருக்கோ ஏதோ நல்லது செய்ய வேண்டுமென்று முடிவெடுத்து விட்டாய். கருணை மனுவைத் தூக்கிக் கொண்டு என்னைப் பார்க்க காதலுடன் வந்து விட்டாய். சரிதானே?" சீண்டினார் சிவன்.

"ஊடல் எல்லாம் இருக்கட்டும் பூலோகத்தில் மக்கள்

எல்லாம் மடிந்து கொண்டிருக்கிறார்கள். ஏராளமான வியாதிகள். நோய், நொடியில் மக்கள் அவஸ்தைப் படுகிறார்கள். எல்லோரையும் ஒரே நேரத்தில் ஏன் இப்படிச் சோதிக்கிறீர்கள்?"

"திருவிளையாடல்!"

"போதும் நாதா. அல்லல்படும் மனிதர்களைக் குணப்படுத்துங்கள்"

"நீயும் வருகிறாயா?"

"தாராளமாக பிரபோ"

சிவன் எழுந்தார். உலகில் உள்ள 4448 வியாதிகளையும் தீர்க்கத் திருவுள்ளம் கொண்டார்.

பார்வதி தேவி தைலப் பாத்திரத்தை ஒரு கையிலெடுத்துக் கொண்டு தையல் நாயகியாகக் கிளம்பினாள். மறுகையில் சஞ்சீவி என்னும் உயிர் காப்பாற்றும் மூலிகைகளும், வில்வமரத்தின் அடிமண்ணையும் ஏந்திக் கொண்டு நடந்தாள். மருத்துவனும், மருத்துவச்சியுமாக பூலோகம் வந்தார்கள்.

**காமதேனு**

அந்த இடத்தில் அழகான குளம் ஒன்று இருந்தது. அதன் கரையில் அதைவிட அழகிய லிங்கம் ஒன்று இருந்தது. அங்கே ஒரு நாள் தரிசிக்க வந்த தெய்விகப் பசுவான காமதேனு அந்நத் தலம் சக்தி வாய்த தலம் என்பதைப் புரிந்து கொண்டது. தன் மடிக் காம்பின் வழியாகச் சுரந்த பாலை சிவலிங்கத்தின் மேல் அபிஷேகம் செய்தது. செய்து கொண்டேயிருந்தது. பால் வழிந்தோடி அந்தக் குளத்தை நிறைத்தது. பக்திப் பெருக்கால் அந்தப் பக்கம் வந்த சித்தர்கள் பால் பெருக்கெடுத்து ஓடுவதைக் கண்டார்கள். அகமகிழ்ந்தர்ாகள். அந்தச் சித்தர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். தேவலோகத்திலிருந்து அமுதத்தைக் கொண்டு வந்தவர்கள். கொண்டு வந்த அத்தனை அமுதத்தையும் சிவனின் திருமுடியில் அபிஷேகம் செய்தனர். அமிர்தமும் வழிந்தோடி அந்தக் குளத்தில் சேர்ந்தது. அந்தக் குளம்தான் இப்போது இருக்கும் சித்தாமிர்தக் குளம் (சித்தர் + அமிர்தம்.)

**புள்ளிருக்கு வேளூர்**

அத்தனை சிறப்புமிக்க குளத்தையும் சிவனையும் ஜடாயு வந்து வழிபட்டது. ரிக் வேதமும் வந்து நமஸ்கரித்தது. முருகன் வந்தான். கதிரவன் வழிபட்டான். ஜடாயு-புள், ரிக் வேதம்-ரிக், முருகவேள், கதிரவன்- ஊர் ஆகியோர் வழிபட்டதால் அந்த ஊருக்கு அன்ற முதல் புள்ளிருக்கு வேளூர் என்ற பெயர் ஏற்பட்டது.

புள்ளிருக்கு வேளூர் புனிதத் தலமாக மாறிற்று. முப்பத்து முக்கோடித் தேவர்களும் அதன் பெருமையைக் கேட்டு ஓடோடி வந்தார்கள். அந்த மருத்துவனும், மருத்துவச்சியும் அங்கேதான் வந்துகொண்டிருந்தர்ர்கள்.

**குழந்தை**

புள்ளிருக்கு வேளூர் என்ற வைத்தீஸ்வரன் கோயிலுக்குள் மருத்துவராக வைத்தியநாதரும், மருத்துவச்சியாக தையல் நாயகியும் உள்ளே நுழைந்தார்கள்.

குடும்பம் என்றால் தாயும் தந்தையும் மட்டும்தானா? குழந்தைகளும் அல்லவா? அதனால் முருகன் இங்கே செல்வ முத்துக்குமரராக அமர்ந்தார். முருகன் புறப்பாடு நடந்தால் நடை பாவாடை போட்டு முன்னே தம்பிரான் சுவாமிகள் செல்ல விருதுகளுடன் குழந்தையை அழைத்துச் செல்வது போல கொண்டு போகிறார்கள்.

ஒவ்வொரு ராத்திரியும் பாலமுருகனுக்கு என்ன நைவேத்தியம் தெரியுமா? பால் சாதம்! பிள்ளைத் தமிழ் பாடி, தாலாட்டுப் பாடி முருகனைப் பள்ளி கொள்ளச் செய்த பின்னரே சுவாமி, அம்பாளுக்கு அர்த்த ஜாம பூஜை நடைபெறும். குழந்தையை உறங்கச் செய்த பின்னர்தானே பெற்றோர் உறங்குவர்! ஆனால் இந்தப் பெற்றோர் உறங்குவதேயில்லை. நாள்தோறும் நாடி வரும் பக்ததர்களின் பிணிகளைத் தீர்த்துக் கொண்டே இருக்கிறார்கள்.

தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலை கைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே யாற்ற நாள் போக்கினேனே!.

*நன்றி- குமுதம் பக்தி இதழ்*

# எங்கள் சமயம் ஏற்றமுற என்ன வழி...?

கல்முனை
'அக்கரை
மாணிக்கம்'
பாப்படையல்

காப்பு

சைவம் வளர சமரசமாம் பூமலர
வையத்தில் அன்பு மணம் பரவ– உய்வளிக்கும்
சைவப் பெரியாரும் சான்றோரும் வாழ்கவென
செய்கவிதை சொல்வேன் சிறிது.

நூல்

முதுமை செறி நிலப்பரப்பின்
முடித்தலமாய் இமயமலை முகிழ்ந் காலை
எது ஒலியாய் எழுந்ததுவோ
எழுத்துருவாய் மலர்ந்ததுவோ, இளமையோடும்
அது தமிழாய்ப் பிறந்தவளே..!
அரன் மகளாய் வளர்ந்தவளே..! கவிதானஞான
மதுக் கலசம் நுகர் வண்டாய்
மனுக் குலத்தில் எனக்கு வழி வாய்த்ததம்மா..!

தொடர்

அன்பொன்றே தெய்வீகம், அதன் பேரே சிவம் என்றார்
என்றென்றும் மாறுபடா இன்பம், அதன் சக்தி என்றார்
சீவனெனும் செம்பொருளைச் சிவம் என்றார் செம்மனத்தார்
சாவாமல் அச்சமயச் சாந்தியொளி காண்பதற்கு
பாடுகின்றேன் பாடுகின்றேன் பக்குவத்தைக் காணவில்லை
தேடுகின்றேன் தேடுகின்றேன் தெளிவென்றும் தேறவில்லை
கோயில் சிறிதெனினும் கோபுரங்கள் வானைமுட்டும்
நாயினும் கீழான நமக்குள் பிரிவினைகள்
வாயில் செயலில் மனதில் நிறைந்திருக்க
சைவம் வளர்த்தால் சந்தர்ப்பம் வாய்த்திடுமோ
பஞ்சாங்கம் பலவாய்ப் பகுத்தறிவும் மாறுபட்டு
ஐயர்கள் தங்களுக்குள் ஆவேசம் கொண்டு நின்றால்
தெய்வம் தலங்களில் திருவருள் பாலித்திடுமா..?

தீண்டாமைக் கேற்றபடி தெய்வத்தையே வகுத்து
ஆண்டவனுக்கென்று பல ஆலயங்கள் கட்டி வைத்தோம்
தேரோட்டம் தீர்த்தம் திருவிழா என்று பல
பேரிட்டுச் சைவப் பெருமை உயர்த்துகின்றோம்
மோதகம் புற்கை கடலை அவல் பாகுச்
சாதம் பகிர்கையிலே சண்டையிட்டுத் தம்பங்கை
வாங்க முனைந்து வரிசையின் முன் நிற்கின்றோம்.

நாங்கள் பழஞ் சைவர்கள் நம்முன் குரவர்களும்
சித்தர்களும் ஞானிகளும் செந்நாப் புலவர்களும்
எத்தனை எத்தனையோ எம்முன் விளக்குகின்றார்
அத்தனை பேர்க்கும் அகத்தால் கரிபூசி
முத்துப் பல் காட்டி முறுவலித்தால் நம்முடைய
சைவம் வளர்ந்திடுமா.. சாதனைதான் வென்றிடுமா..?

அனல் வாதம் ஆடியும் புனல் வாதம் வென்றும்
மனம் உருக ஆண் பனையை மாற்றிக் கனிவித்தும்
நீற்றறையுள் ஈசன் நிழலை அனுபவித்தும்
ஆற்றிலிட்ட பொன்னை அயந்குளத்திலே எடுத்தும்
வெப்பு நோய் தீர்த்தும் விஷம் தீண்டி மாண்டவரை
செப்பமாய் மீட்டும் நரியைப் பரியாக்கி
வைகைப் பெருக்கை வருவித்தும் மாற்றுவித்தும்
கைப்பிரம் பாற்பட்ட அடி கண்ணுதலான் பெற்றுமன்றும்
சைவம் வளர்தவர் நாம் சன் மதங்கள் கண்டவர் நாம்
விஞ்ஞான விந்தை அளந்தளித்த
மெய் ஞானி மாணிக்க வாசகரைப் பெற்றவர் நாம்

சைவம் உலகில் வளர சமரசமாம்
மெய்யன்புத் தென்றல் விரவல் அவசியமே
தெய்வத் தமிழும் திருமுறையும் அன்பொலியும்
கைவரப் பெற்றால் கடமை நிறை வெய்தும்.

இக்கவிதை
ரசித்திருந்த
எல்லோருக்கும்
நன்றி.

# திருக்குறள்

### ஏழாம் அதிகாரம்: அன்புடமை, குறள் 71



**அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**

**புன்கணீர் பூசல் தரும்**

*மனதில் உள்ள அன்பை எவ்வளவு முயன்று நாம் மறைத்து வைத்தாலும் அவ்வன்பு எமது கண்களில் இருந்து வெளிவரும் கண்ணீரின் மூலம் உண்மை நிலையைக் காட்டிக் கொடுத்துவிடும்.*

**Chapter 7, verse 71 On Love or affection.**

**Translation:**

*Is there any fastening that can shut in love ? Tears of the affectionate will publish the love that is within.*

### Explanation:

*Is there bar that can even love restrain? Is there any fastening that can shut in love ? The tiny tear shall make the lover's secret plain. Tears of the affectionate will publish the love that is within.*
*The tiny tear shall make the lover's secret plain. Affection cannot be confined by shutter; uncontrollable tears will roll down spontaneously; When one sees the sufferings and sorrows of the loved ones.*

*However much the one who loves may try, it is not possible for him/her to hide affection towards the loved ones.*

*The appropriateness of this chapter after the chapter on family life, wife and children, is obvious. Only the love– compassion with which a householder reaches out of his own self to his near and dear ones, can in due course go farther afield and cover all living creatures.*

# திருமுறை

### திருவலஞ்சுழி




*என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே*
*யிருங்கடல் வையத்து*
*முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை*
*முழுமணித் தரளங்கள்*
*மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி*
*வாணனை வாயாரப்*
*பண்ணி யாதரித் தேத்தியும் பாடியும்*
*வழிபடு மதனாலே.*


நெஞ்சமே! நீ இந்த உலகத்தில் திருவலஞ்சுழியில் உள்ள சிவபெருமானை மனத்தால் ஏத்தியும் வாயால் போற்றியும் பாட என்ன புண்ணியம் செய்துள்ளாயோ! பல் வகைப் புண்ணியத்துள்ளும் உன்னை வழிபடும் பேறு எவ்வாறு என் மனதிற்குக் கிடைத்தது? அது எனது நல்வினைப் பயனாகத்தான் இருக்கும்.

முழுமையான மணிகளும், முத்துக்களும் நிறைந்து உள்ள நிலையான காவிரி ஆறு சூழ்ந்திருக்கும் திருவலஞ்சுழி இறைவனைப் பாடியும், போற்றியும், அன்பு செய்தும் வழிபடும் வாய்ப்பு கிடைத்துள்ளது. கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் நாம் செய்த எத்தனையோ நல்வினைப் பயன்களுக்குள்ளே நெஞ்சே நீ எத்தகு புண்ணியத்தைச் செய்துள்ளாய்?


By worshipping the Lord who dwells in Tiruvalañcuḻi surrounded by Kāviri where big precious stones of pearls are deposited, uttering many times his names to the complete satisfaction of your mouth, cherishing him with love, and singing his fame.
in the world girt by the great ocean.
What great act of virtue you performed among the good acts done in your previous births! my mind! Whether Sampanthar performed acts of virtue or not is not the doubt.

What was the special act of virtue to be performed to worship Sivaṉ in the temple called Thiru -valan-chuli is the doubt; that doubt is cleared by the words uttering many times the name of god and singing his fame is the act done by tongue, cherishing him with love is the act of the mind and worshipping is the act of the body.

# கண்ணனும் தாத்தாவும்



-முத்து



இந்த வருடம் இலண்டனில் வழக்கத்துக்கு மாறாக ஆடி மாதத்தில்தான் கோடைகாலம் ஆரம்பித்து தொடர்ந்து மூன்று வாரங்கள் சூரியனின் கதிர் வீச்சை மக்கள் ஆனந்தமாக ரசித்து மகிழ்ந்தனர். நேற்றிரவு மழைக்கால அறிகுறி ஏதும் தோன்றாத போதும் இருந்தாற் போல் கடும் மழை கொட்டத் தொடங்கியது. அது மட்டுமின்றி வானமே இடிந்து விழுவது போலப் பயங்கர இடி முழக்கம். ஒரு கோடி சூரிய வெளிச்சம் போல பளிச்பளிச் என்று மின்னல் வேறு. இந்த ஆரவாரத்தில் திடுக்கிட்டு நித்திரையிலிருந்து விழித்த கண்ணன் மிகவும் பயந்துவிட்டதால் தாத்தாவின் கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டான். கோடையில் சூரியன் அதிகாலையில் உதிப்பதால் தாத்தாவும் ஆறு மணிக்கு முன்பே எழுந்து விட்டார். அப்போதுதான் கண்ணனும் தன் கட்டிலில் படுத்திருப்பதை அதிசயமாகப் பார்த்தார். கண்ணனும் விழித்துக் கொண்டான்.

**தாத்தா:** கண்ணா! நீ எப்போது என் கட்டிலுக்கு வந்தாய்?

**கண்ணன்:** தாத்தா! இரவு பயங்கரமான இடி முழக்கம் மின்னலுடன் மழை கொட்டியது. நான் பயந்து போய் உங்கள் கட்டிலுக்கு ஓடி வந்துவிட்டேன்.

**தாத்தா:** இடி முழக்கத்துக்கு யாரும் பயப்பிடுவார்களா? நீ பெரிய வீரன் என்றல்லவா நினைத்தேன்.

**கண்ணன்:** நான் முன்பு இப்படியான சத்தத்தைக் கேட்டதே இல்லை தாத்தா. உங்களுக்குப் பயமே வரவில்லையா?

**தாத்தா:** இந்தக் கிழவன் இப்படி எத்தனையோ பார்த்து விட்டேன். எனக்கு எதற்குப் பயம்? இப்படியான இடி முழக்கம், மின்னல், கடும் மழையால் ஏற்படும் அழிவு, கடல் பொங்கி வருதல், நில நடுக்கம் எல்லாம் மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தியான கடவுள் இருப்பதை மக்களுக்குப் புரிய வைக்கிறது.

**கண்ணன்:** அப்போ மனிதர்களால் இதனைத் தடுக்க முடியாது, என்ன தாத்தா?

**தாத்தா:** ஆமாம் கண்ணா! இயற்கையாக நடப்பதை மனிதர்களால் தடுக்க முடியாது. விஞ்ஞானிகள் நடக்க இருப்பதை முன் கூட்டியே அனுமானிக்கலாம், ஆனால் தடுக்க இயலாது. கடவுள் ஒருவரே நடக்க இருப்பதை அறிவார். அவர் அருளால் மட்டுமே தடுக்க முடியும்

**கண்ணன்:** இதற்கு என்ன செய்யலாம் தாத்தா?

**தாத்தா:** நாட்டில் அதர்மம் கூடும் போதுதான் அழிவுகள் ஏற்படும் எனப் பெரியோர்கள் சொல்கிறார்கள். இதற்காகத்தான் கோயில்களில் நித்திய பூஜைகள், யாகங்கள், கோடி அர்ச்சனைகள், தேர்த் திருவிழா போன்றவைகளை ஆகம முறைப்படி செய்கிறார்கள்.

**கண்ணன்:** ஆலயங்களில் நடைபெறும் திரு விழாக்கள் எல்லாம் மக்களின் நன்மைக்காகவா தாத்தா?

**தாத்தா:** ஆமாம் கண்ணா! அப்படித்தான் சமய சாத்திரங்கள் சொல்கின்றன. சரி, நான் கீழே போய் காலைக் கடன் முடித்துச் சாமி கும்பிடப் போகிறேன்.


**கண்ணன்:** நானும் சாமி கும்பிட வந்து விடுகிறேன் தாத்தா.

**தாத்தா:** சரியடா கண்ணா.

(சிறிது நேரத்தில் கண்ணனும் தாத்தாவுடன் சேர்ந்து சாமி கும்பிட வந்து விடுகிறான். தாத்தா மலர்கள் சாத்தி, தீபம் காட்டி, தேவாரம் பாடி வணங்குகிறார்.)

**கண்ணன்:** தாத்தா நானும் ஒரு தேவாரம் பாடப் போகிறேன்.

**தாத்தா:** நல்லது பாடு கண்ணா.



**கண்ணன்:**

**காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி**

**ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது**

**வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது**

**நாதன் நாமம் நமச்சிவாயவே.**

(கண்ணன் இராகத்துடன் தேவாரத்தைப் பாடியதைப் பார்த்து தாத்தாவுக்கு சந்தோஷம். அவனது தலையைத் தடவி திருநீறு பூசி விடுகிறார்.

**தாத்தா:** மிக நன்றாகப் பாடுகிறாய் கண்ணா! இந்தத் தேவாரம் யார் பாடியது தெரியுமோ?

**கண்ணன்:** திருஞானசம்பந்தர் பாடிய நமச்சிவாயப் பதிகத்தில் ஒன்று. நால்வர் பள்ளியில் தேவார வகுப்பில் ஆசிரியர் இதனைச் சொல்லித்தந்தார்.

**தாத்தா:** நல்லது. இந்தப் பாடலின் கருத்தை நான் உனக்கு விளங்கும் படியாகச் சுருக்கமாகச் சொல்கிறேன் கேள்.

**கண்ணன்:** தேவாரத்தின் பொருள் தெரிந்தால்தான் பாடும் போது பக்தி வரும் தாத்தா.

**தாத்தா:** கெட்டிக்காரன்! அதற்காகத்தான் நான் அதன் கருத்தைச் சொல்லப் போகிறேன். கவனமாகக் கேள்.

**கண்ணன்:** சரி தாத்தா, கவனமாகக் கேட்டு மறக்காமல் மனதில் வைத்திருப்பேன்.

**தாத்தா:** இந்து சமயத் தத்துவங்களைக் கூறும் வேதங்கள் நான்கு உள்ளன. அவற்றின் மெய்ப் பொருளாக விளங்குவது இறைவனின் திருநாமமாகிய "நமசிவாய" என்பதாகும். இந்த நமசிவாய என்னும் மந்திரத்தை அன்புடன் மனம் உருகிக் கண்ணீர் வர பாராயணம் (ஜெபம்) செய்பவர்கள் நன்னிலை அடைவார்கள் என்பது இந்தத் தேவாரத்தின் கருத்தாகும்.

**கண்ணன்:** நன்னிலை அடைவார்கள் என்றால் என்ன தாத்தா?

**தாத்தா:** கடவுளின் திருநாமத்தை இடைவிடாது சொல்லித் தியானம் செய்யும் பக்தர்களைக் கடவுள் அவர்களுக்குத் துன்பம் வராது காத்துக் கொள்வார். கடைசியில் அவர்களுக்கு முத்தி அருள்வார். அப்படித்தான் நாயன்மார்கள், முனிவர்கள், ஞானிகள் முத்தியடைந்தார்கள்.

**கண்ணன்:** பக்தியிருந்தால்தான் முத்தியடையலாம், என்ன தாத்தா? மக்களைப் பக்தியுடையவர்களாக எப்படி மாற்றலாம்?

**தாத்தா:** நான் முன்பு உனக்குச் சொன்னது போலப் பிள்ளைகளுக்குப் பெற்றோர்களும், பாடசாலைகளும் சமயத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பெரியவர்கள் தாமாகவே சமயப் பெரியவர்களின் வரலாறுகள், சமய அறிவை வளர்க்கும் புத்தகங்களைப் படிக்க வேண்டும். சமயச் சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும். அத்துடன் தேவாரப் பாராயணம் செய்ய வேண்டும். இவை மக்களின் மனதில் பக்தியை வளர்க்கும்.

**கண்ணன்:** நாயன்மார்களுக்கெல்லாம் எப்படி அவ்வளவு பக்தி வந்தது? எப்படி அவர்கள் பெரிய அற்புதங்களை நடத்தினர்? சொல்லுங்கோ தாத்தா.

**தாத்தா:** ஆண்டவனே தன் பெருங் கருணையினால் உலக மக்களுக்காக அவர்களைத் தோற்றுவித்தார்.

**கண்ணன்:** அதனால்த்தான் மாணிக்கவாசகர் தனது திருவாசகத்தில் "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்று பாடினாரோ? தாத்தா.

**தாத்தா:** ஆமாம் கண்ணா! கடவுளை வணங்கவும் அவன் அருள் வேண்டும். ஞானசம்பந்தருக்கு ஞானப்பால் கொடுத்துத் தன்னைப் பாடவைத்தார். அப்பருக்கு சூலை நோய் கொடுத்து வருந்தச் செய்து தன் அடியாராக்கினார். சுந்தரரிடம் கிழவனாகப் போய்ச் சண்டை போட்டுப் பின் காட்சி கொடுத்துப் பாடவும் அடியெடுத்துக் கொடுத்தார். மாணிக்கவாசகரைக் குருவடிவாகக் குருந்த மரத்தடியில் காத்திருந்து ஆட்கொண்டார். ஆண்டவன் அருளை அளவிட்டுக் கூற முடியாது. நீ சமயத்தைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டியது நிறையவே உண்டு, கண்ணா!

**கண்ணன்:** நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் சொல்லித் தாங்கோ. நானும் பெரியவனாகியதும் முடிந்தளவு படித்துத் தெரிந்து கொள்கிறேன்.

**தாத்தா:** முன்பெல்லாம் தமிழில் பக்திப்படங்கள் வெளி வந்தன. புராணக் கதைகள், அடியார்களின் வரலாறுகள், ஆண்டவனின் அற்புதங்கள் போன்றவை திரைப்படமாக்கப்பட்டன. அதில் வரும் பாடல்களும் மனதை உருக வைப்பன. இவை சிறுவர்களின் மனதிலும், பெரியவர்களின் மனதிலும் இலகுவாக பக்தியை வளர்த்தன.

**கண்ணன்:** என்ன படங்கள் நீங்கள் பார்த்தீர்கள்?

**தாத்தா:** ஒளவையார், கந்தன் கருணை, திருவி

ளையாடல், தசாவதாரம் இப்படிப் பல.

**கண்ணன்:** எங்கே உங்களுக்குப் பிடித்த பாடல் ஒன்று சொல்லுங்கோ.

**தாத்தா:** எல்லாப் பாடல்களுமே எனக்குப் பிடித்தவை. அதில் மிகவும் பிடித்த பாடல் கவிஞர் கண்ணதாசன் இயற்றிய

"கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்
கந்தனே உனை மறவேன்
நிற்பதும் நடப்பதும் நின்னருளாலே
நினைவதும் நிகழ்வதும் நின் செயலாலே
கற்பதெல்லாம் உந்தன் கனி மொழியாலே
காண்பதெல்லாம் உந்தன் கண் விழியாலே

இதன் கருத்து முருகக் கடவுளே எம்முள் இருந்து எம்மை இயக்குகிறார். அதனால் அவர் கல்லாக இருந்தாலும், கற்பனையாக இருந்தாலும் நான் அவரை ஒரு நாளும் மறக்க மாட்டேன் என்பதாகும். உனக்கு விளங்கியதா கண்ணா?

**கண்ணன்:** ஆமாம் தாத்தா! நாம் நிற்பது நடப்பது பார்ப்பது படிப்பது எல்லாம் முருகனின் அருள் என்று சொல்லப்படுகிறது.

**தாத்தா:** சிறுவனாயிருக்கும் போதே இதை அறிந்து கொண்டால் வளரும் போது வாழ்க்கை எல்லா விதத்திலும் இலகுவாக இன்பமாக அமையும் கண்ணா.

**கண்ணன்:** இன்றிலிருந்து எனக்குப் பாடசாலை ஆறு கிழமைக்கு விடுமுறைதானே. நாங்கள் ஒவ்வொரு படமாகப் பார்க்கலாம். தமிழ் கடைகளில் பழைய படங்கள் நிச்சயமாக இருக்கும்.

**தாத்தா:** அது நல்ல யோசனைதான். நாங்கள் இப்போ கோயிலுக்குப் போவோம். வரும்போது தமிழ்க் கடையில் பக்திப் படங்கள் இருக்கிறதா என்று பார்ப்போம்.

**கண்ணன்:** சரி இருங்கோ தாத்தா உங்களுக்கும் எனக்கும் குடிக்க பால் கொண்டு வருகிறேன்.

**சந்தேகம் தெளிவோம்:**

**திருமுறை மற்றும் தர்ம நூல்கள் இலை, பூ, பழம் வைத்துப் பூஜித்தால் இறைவன் மகிழ்வான் என்கின்றன. ஆனால் நாம் பொன்னும் வெள்ளியும் அளித்து வழிபடுகின்றோமே ... இது குறித்து உங்கள் கருத்து என்ன?**


தங்கக் காசுகளால் அர்ச்சித்தும் வழிபடலாம். நம்மிடம் உள்ள செல்வம் அவர் அளித்தது. அவற்றை அவருக்கு அளித்து மகிழலாம்.

பொன்னும், பொருளும் இல்லாதவர்கள் பூ, இலை, பழம் போன்றவற்றை அளித்தால் போதும். பொன் வைக்க வேண்டிய இடத்தில் பூ வைக்கலாம். இறைவன் ஏழை பங்காளன். ஏழைகளையும் அரவனக்கும் வகையில், பூ இலை போன்றவற்றை அளித்தால் போதும்- அருள் நிச்சயம்! கடவுள் பணிவிடைக்குப் பொருளாதாரம் அளவு கோலாக இருக்கக் கூடாது. ஏழைகளும் இறைவனை வழிபட்டு அருள் பெற வேண்டும். இந்த நோக்கில் இரண்டும் சரியே!

கடவுளுக்கு அர்ப்பணிக்கப்படும் அனைத்தும் நம்மிடம் வந்துவிடும். இலை மற்றும் பூக்களை நாம் பிரசாதமாக எடுத்துக் கொள்வோம். தங்கத்தை அளித்தாலும் அது, அவனது அருளாக நம்மை வந்து சேரும். அவருக்கப் போய்ச் சேர்வது பக்தி மட்டுமே. எந்தப் பொருளிலும் நமக்கு உரிமை இல்லை. எல்லாம் அவர் தந்தது. அப்படியிருக்க நாம் ஒன்றும் அவருக்கு அளிக்க இயலாது. ஆனால், பக்தி என்பது நம்மில் விளைவதால், அதை நம்முடையது எனலாம். அந்த பக்தியை இறைவனுக்குக் கொடுக்கும் போது அதன் அடையாளமாக ஒரு பொருள் இருக்கும். அந்தப் பொருள் பொன்னாகவும் இருக்கலாம், பூவாகவும் இருக்கலாம். ஒருவன் தன் உயிர் நண்பனது திருமணத்ததுக்குச் சென்றான். அங்கு பலரும் தங்களது வாழ்த்துக்களுடன் உயர்ந்த பரிசுப் பொருட்களையும் அளித்தார்கள். இவன் வாழ்த்தோடு முடித்துக் கொண்டு விருந்துண்டு வீடு திரும்பினான். மணமகனுக்கு மன வருத்தம்.' உயிருக்குயிராக தான் நேசித்த நண்பன், வெறுங்கையோடு வாழ்த்திவிட்டுப் போகிறானே. நண்பன் போல் வேஷம் போடும் அவனை நான் புரிந்து கொள்ளவில்லையே;' என்று அவன் மனம் எண்ணியதாம்.

கண்ணுக்குப் புலப்படாத நட்பை வெளிப்படுத்த அடையாளமாக ஏதேனும் ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுவது உண்டு. அதுபோல பக்திக்கு அடையாளம் பொன்னும் பூவும். மனம் முதிர்ச்சி அடைந்து விட்டால், அடையாளப் பொருட்களை அகற்றிவிட்டு, அது பக்தியில் மூழ்கிவிடும். அதுவரை இந்த அடையாளங்கள் இருக்கவே செய்யும். ஆகையால் பொன்னும் அளிக்கலாம் பூவும் அளிக்கலாம்.

**- பிரம்மஸ்ரீ சேஷாத்திரிசாத சாஸ்திரிகள்**






I, Miss Abbirhami Ratnarajah, express my sincere thanks to my yoga guru, Yogi Ram Sunthar, as with his blessings, I have had the great opportunity of making a sacred journey to Mount Kailash, Tibet, in August 2011.

Mount Kailash is part of the Himalayan mountain range and is 6714m (22,028 ft) above sea level. It is a place of holy significance to Hindus, as well as, Buddhists, Jains and followers of the indigenous Tibetan religion of Bön. People do not set foot onto the actual mountain, but walk around it, as it is said to be a natural Sivalingam. I went along with my parents and twenty-five people from our yoga group and the leader of the group, Yogi Ram Sunthar who said that I am probably the youngest person to successfully complete the journey around the mountain, which is fifty-two km in circumference. I was seventeen when I completed the Kailash Yatrai (Traditionally, people under the age of sixteen, should not travel to Mount Kailash).

In order to prepare for this treacherous journey, we had to prepare ourselves physically to endure the conditions of being at a high altitude. As I attended swimming and dance classes, this was enough exercise and preparation to endure the conditions of going into high mountainous areas.

My journey to Kailash started on 11th August 2011, when I stayed at my Grandmother's house. Just before leaving to go to the airport on 13th August 2011, I watched a programme about a temple showing a special poosai and I was wondering where this type of poosai happens. To my surprise, when I arrived in Nepal, the very next day, we went to Pasupathinathar Temple and I saw the same poosai happening before my eyes! I was so shocked and amazed that I had a chance to see this in real life, after randomly seeing it on the television.

Eco-Trek is a one of the leading trekking companies in Nepal and had planned out the journey. Helpers from the company helped us in many ways for example, by providing us with food three times a day, giving us water, carrying our bags and helping us in any way possible. There was also a large truck with all of our belongings and sleeping bags which followed behind the seven 4x4 Toyota cars with all twenty-five of us in them. After obtaining Chinese visa, we went to Tibet (now controlled by China). Eco-Trek looked after us from there on, until the end of the trip.

Our journey to Mount Kailash was as follows:


Day 1: Journey from Kathmandu, Nepal to the Friendship Bridge (Nepal – Tibet Border)

We were appointed with a driver and were grouped into groups of four. We were driven to Zhangmu and then to Nyalam (3750 M above sea level). We stayed overnight in a guesthouse.

Day 02: 'Rest day' in Nyalam (3750m) – a day to acclimatise.

Day 03: Drive to Saga (4450m). We stayed in Saga for a night to acclimatise.

Day 04: Drive to Paryang (4600m). Although I had altitude sickness and felt very weak, without my parents' help, I would not have been able to recover quick enough to continue on with the journey. As my mother is a medical doctor, her knowledge helped not only me, but helped the other group members as well. Two members in our group fell off of their horses and one group member had difficulty in breathing, due to low partial pressure of oxygen in the air, but despite this they carried on to finish the journey, as it was a sacred journey to all of us.




Day 05: Drive from Paryang to Lake Manasarovar –means 'charming the mind' in Thamizl (4558m). The circumference of Lake Manasarovar is 90km; its depth is 90m and has a total area of 320 square km. We stayed overnight in a clay guesthouse by the lake. It had no heating or lights, with no bathing facilities but only had an open-air toilet. Fortunately, we were provided with water from Lake Manasarovar, which was heated and we had a shower in a make-shift tent.

Day 06: Drive to Tarchen (Base Camp for the Holy Mount Kailash Pilgrimage).

Day 07: 28.08.2011 - First day of the Parikramam (going around Mount Kaillash): Trek to Dehara Puk (5000m). It is an 18km trail and takes almost seven hours to reach Dehara Puk. We stayed in a guesthouse right in front of the south face of Mount Kailash, which was a breath-taking view. It was the only ice-capped mountain top among the other surrounding mountains.

Day 08: 29.08.2011 - Hardest day of the Parikramam: We walked through the Dolma-La pass (18600ft), between two valleys. Whilst walking, we walked over a glacier. We arrived in Zuthul Puk in the late afternoon, where we stayed overnight. During my stay at that place, I had the chance of seeing the Milky Way, as the sky was so clear at night.

Day 09: 30.08.2011 - Last day of Parikramam: It was a 3-hour journey to Trangser Trangmer, where we were picked up by the drivers. That night was not an ordinary one, because after we carried out a yagam by Lake Manasarovar ,and as soon as we got into our tents, there was a thunderstorm: with heavy rain and lightning. When we got up the next morning, it was as if the thunderstorm never happened.



Day 10: Drive from Lake Manasarovar back to Saga (406km)

Day 11: Drive from Saga to Zhangmu (296km)


Day 12: Drive back to Kathmandu (150km)

After completing the journey around Mount Kailash, I had time to reflect. I saw nature's beauty up close in a remote and vast land. It was an amazing experience for me, as I was not surrounded by modern gadgets, such as phones and ipods, and the busy lifestyle of modern day life, but I was able to connect with my inner-self at a beautiful sacred place, Mount Kailash.

People who complete the journey are given the title 'Kailaimani', and I received a certificate to acknowledge the completion of the yatrai (pilgrimage). Many people in the Tamil community and Hindu Traditionalists recognise those who have gone to Mount Kailash and I am grateful that I have gone there myself. It is an honour to have gone there, to have completed the yatrai, return home safely and earn the title "Kailaimani". I thank Yogi Ram Sunthar for giving me this oportunity.





Hinduism and its forgotten values and wisdom.


# தோப்புக் கரணம் = Super Brain Yoga

ThoppukkaraNam – the customary worship associated with Lord Ganesha is proved scientifically to increase the brain activity.

The gentle pressure applied on the ear lobes in a particular fashion while a person moves his body up and down is associated with prayer for Ganesha for memory power.


The information given below explains it all.

தெய்வத்தின் குரல் ஸ்ரீ
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
மஹா சுவாமிகளின்
தெய்வத்தின் குரல்
நூலிலிருந்து :






“ பிள்ளையார் சந்நிதியில்



இரண்டு கைகளையும் மறித்து நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ள வேண்டும். இப்படியே இரண்டு கைகளையும் மறித்துக் காதுகளைப் பிடித்துக் கொண்டு முட்டிக்கால் தரையில் படுகிற மாதிரி தோப்புக் கரணம் போட வேண்டும். இவை எதற்கு என்றால் யோகசாஸ்த்திரம் என்று ஒன்று இருக்கிறது. அதிலே நம் நாடிகளில் ஏற்படுகிற சலனங்களால் எப்படி மனஸையும் நல்லதாக மாற்றிக் கொள்ளலாம் என்று வழி சொல்லியிருக்கிறது. நம் உடம்பைப் பல தினுசாக வளைத்துச் செய்கிற அப்பியாசங்களால் சுவாசத்தின் கதியில் உண்டாகிக் கொள்கிற மாறுதல்களால் நம் உள்ளம் உயர்வதற்கான வழி அந்த சாஸ்த்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்வது, தோப்புக்கரணம் போடுவது இவற்றால் நம் நாடிகளின் சலனம் மாறும். மனஸில் தெய்வீகமான மாறுதல்கள் உண்டாகும். நம்பிக்கையோடு செய்தால் பலன் தெரியும்.”

**Superbrain Yoga** or ThoppukkaraNam is a simple and effective technique to energize and recharge the brain. It is based on the principles of subtle energy and ear acupuncture.

A US news story Super brain Yoga can now be viewed on **You Tube**



Pilot studies on the effects of Super brain Yoga on school children include children with disabilities such as ADHD/ADD, developmental and cognitive delays, Down syndrome and specific learning disabilities.



Children studied showed significant increase in academic and behavioural performance, greater class participation and improved social skills. In one study, the result of an electroencephalograph showed increased amplitude in the parieto-occipital region of the brain following the Super brain Yoga.

This indicates increased brain electrical activity following the exercise. More studies on the effects of Super brain Yoga are being conducted.

Sit still and close your eyes. Cross your hands and bring them up to your ears – left hand to the right ear, right hand to the left.

Rub and massage your earlobes, holding them between the thumb and forefinger. Now, holding the earlobe between your first and second finger, pull it firmly down and release it. Do this a few times.







If you can, squat and stand up a few times while you do this, creating a gentle pumping action in the body.

In just a couple of minutes, you will start feeling a difference in your state of mind! You will straightaway feel energized and fresh.

There is a reason for this. The ears are powerful acupuncture points with a direct connection to the brain. When the ears are stimulated, the energy flow to the brain is smoother. Since the left brain is connected to the right side of the body and vice-versa, we cross our hands when massaging the ears. Simultaneously, squatting and standing increases the circulation throughout the body. When practiced regularly, this small exercise can work wonders for your memory and awareness.



This is a very interesting technique to refresh yourself in an instant.



# மாணவர் எழுதியவை

**நான்** எனது பெயர் அஜித்தா. எனக்கு ஆறு வயது. எனது அண்ணாவின் பெயர் அஸ்வின் நாங்கள் இருவரும் ஆரம்ப பள்ளியில் தமிழ் படிக்கிறோம் எங்களுடன் பலர் ஆரம்பப் பள்ளியில் தமிழ் படிக்கிறார்கள். நான் லண்டனில் பிறந்தாலும் எனக்கு தமிழ் படிக்க நல்ல விருப்பம். எனக்கு தமிழ் கற்றுத் தரும் ஆசிரியருக்கும் எனது பெற்றோருக்கும் எனது நன்றிகள்.

**- அஜித்தா (1ஆம் வகுப்பு)**

**தமிழ்மொழி** தமிழ் ஒரு தொன்மையான மொழி. அதற்கு 247 எழுத்துகள் உள்ளன. 12 உயிர் எழுத்துகள், 18 மெய் எழுத்துகள், 216 உயிர் மெய் எழுத்துகள், 1 ஆயுத எழுத்து தமிழுக்கு. இரண்டு கொண்டாட்டங்கள் உண்டு. அவை தைப்பொங்கல், ஆடிப்பிறப்பு. செம் மொழிகளில் இன்று வாழும் மொழி தமிழ். தமிழ் பேசும் மக்கள் தமிழர். பழந்தமிழரின் சமயம் சைவசமயம். இதன் முழுமுதற் கடவுள் சிவ-பெருமான். இன்றைய தமிழர் பல சமயங்களை சார்ந்து வாழ்கின்றனர்.

**-தீரன் இரமணன் வயது – 8**

**ஆலய வழிபாடு** முழுமுதற் கடவுள் சிவ-பெருமானை வழிபடும் சமயம் சைவ சமயம். சிவனை வழிபடுபவர்கள் சைவ சமயத்தார்கள். சைவ சமயத்தவர்களுக்கு ஆலய வழிபாடு மிகவும் முக்கியமானது. கோயிலில் கடவுளின் பல வடிவங்கள் வைக்கப்பட்டிருக்கும். இங்கே ஐயர் தினமும் கடவுளுக்கு பூசை செய்வார்கள்.
கோயில் ஒரு புண்ணிய புனிதமான இடம். எனவே கோயிலுக்கு போகும்போது குளித்து சுத்தமான உடை உடுத்துப் போக வேண்டும். கோயிலுக்குள் சென்று ஆண்டவனை பக்தியுடன் கும்பிட வேண்டும். பூசை நடக்கும் போதும், ஏனைய நேரங்களிலும் ஆலயத்தினுள் கதைக்கக்கூடாது.
கோயிலில் பூசை முடிந்தவுடன் ஐயர் விபூதி பிரசாதங்கள் தருவார். அவற்றை மிகவும் பணிவுடன் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆலயத்துக்கு வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமைகளிலும், ஏனைய விரத நாட்களிலும் சென்று வழிபடலாம். வருடப்பிறப்பு, தைப்பொங்கல் போன்ற நாட்களிலும் ஆலயத்திற்கு சென்று வழிபடுதல் சாலச் சிறந்தது. ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று தெரியாமலா சொல்லி வைத்தார்கள் பெரியவர்கள். ஆகவே நாமும் ஆலயத்துக்கு சென்று ஆண்டவனைத் தொழுது இன்னருள் பெறுவோம்.

**- சிவஜனனி**

**எனது அப்பம்மா** என் அப்பம்மா எங்கள் குடும்பத்தில் மூத்தவர். அவருக்கு மூன்று பிள்ளைகளும் ஏழு பேரப்பிள்ளைகளும் உண்டு. நாங்கள் எல்லோரும் அவரை விரும்புகிறோம். அவரும் எங்களில் அன்பும் பாசமும் கெண்டவர். என் அப்பம்மா புத்திசாலி. அவர் எனக்குத் தமிழின் இனிமை, செழுமை, தொன்மை ஆகியவற்றைக் கதை கதையாச் சொல்லுவார். இத்துடன், உலக பூமிசாத்திரம்,(Geography) பொது அறிவு (General knowledge) என்பனவற்றையும் கூறுவார்.
தமிழ்பற்றி நான் அறிந்து கொண்டபடியால், நான் தமிழ் படிப்பதில் விருப்பம் கொண்டேன். அதன் பயனால், நான் இக் கட்டுரையை எழுதுகிறேன். நான் சிறுமியாய் இருக்கும்பொழுது, அவர் எனக்கு திருக்குறள், தேவாரம், நீதிக் கதைகள் நிறையச் சொல்லுவார். இதன் கருத்துக்களை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்லுவார். ஆகையால், நான் இவைகளை என் வாழ்க்கையில் கடைப்பிடிப்பேன்.
அவர் உணவை வீணாக்குவதை விரும்புவது இல்லை. எனது தம்பி சாப்பிட மறுத்தால், அவர் அவனைப் பிடித்து "உலகில் தினமும் 22,000 பிள்ளைகள் பட்டினியால் இறக்கிறார்கள். இது உனக்குத் தெரியுமா?" என்று சொல்லுவார். இதைக் கேட்டதும் எனது தம்பி சாப்பிடுவார்.எனது அப்பம்மா ஒன்றை மிகவும் வற்புறுத்துவார். "உனது அம்மாவை நேசிப்பதுபோல, உன் மொழியையும் நீ நேசிக்க வேண்டும். ஏன் என்றால் அது உன் தாய்மொழி" இது என் அறிவுள்ள, புத்திசாலியான, கருணையுள்ளம் கொண்ட அப்பம்மா. அவரை நான் மிகவும் நேசிக்கின்றேன்.

**-சுகனி சுகந்தன் (12 வயது)**

## இங்கிலாந்து

இங்கிலாந்து ஓர் அழகிய தீவு. இது ஐரோப்பாவின் வடமேற்குப் பகுதியில் இருக்கிறது. இங்கு பல இன மக்கள் வசிக்கிறார்கள்.. இந்நாட்டின் தேசிய மொழி ஆங்கிலம். இந்நாட்டின் அரசியின் பெயர் எலிசபெத் மகாராணி. டேவிட் கெமறன் இந்நாட்டின் பிரதமர் ஆவார். இந்நாட்டின் தலைநகர் இலண்டன் ஆகும். இது ஒரு சனநாயக நாடாகும். இங்கு உள்ள எல்லா மக்களும் சமமாக மதிக்கப்படுகிறார்கள். இந்நாட்டின் சனத்தொகை 60 மில்லியன் ஆகும்.

**-காருணி குலோத்துங்கன் ( வயது ஏழு)**

## எனது வீடு

எனது வீட்டில் அப்பா, அம்மா, நான், தங்கை, என நால்வர் வசிக்கின்றோம். எனது வீட்டில் சுவாமி அறை, படுக்கை அறை, குளியலறை, வரவேற்பறை, சமையலறை, சாப்பாட்டறை என பிரிவுகள் உண்டு.

வரவேற்பறையில் அலங்காரப் பொருட்கள், இருக்கைகள், தொலைக்காட்சி என்பன வைக்கப்பட்டுள்ளன. இந்த மண்டப வாசலின் முன் அம்மா அழகான செடிகளை நட்டு அலங்கரித்துள்ளார். அப்பா எங்களுக்கு தேவையானவற்றை உடனுக்குடன் வாங்கித் தருவார். அம்மா வேலை முடிந்து வந்து பல வகையான உணவுகளைச் செய்து தந்து எங்கள் ஆரோக்கியத்தில் கவனமெடுக்கின்றார். அப்பா, அம்மா இருவரும் எங்கள் கல்வியின் முன்னேற்றத்திற்காக மிகவும் முயல்கின்றார்கள். நாங்களும் நல்ல பிள்ளைகளாய் அவர்கள் சொற்கேட்டு வளர்கின்றோம். ஓய்வு நேரங்களில் நானும் தங்கையும் ஆடிப்பாடி மகிழ்வோம். இன்னும் பரத நாட்டியம், சங்கீதம், வயலின் போன்ற நுண் கலைகளிலும் எம்மை ஊக்குவிக்கின்றார்கள்.

**-அஞ்சலா நிரஞ்சன் (6ஆம் வகுப்பு)**

## நான் படிக்கும் பாடசாலை

நான் படிக்கும் தமிழ்ப் பாடசாலையின் பெயர் நால்வர் தமிழ்க கலை நிலையம். எங்கள் பள்ளியின் தலைமை ஆசிரியா: திரு. ஆனநத்தியாகர். என்னுடைய தமிழ் ஆசிரியரின் பெயரும் அதுவே.

நான் அவருடைய வகுப்பில் ஓ லெவலுக்குப் படித்து, இப்பொழுது அதனுடைய பரீட்சை எடுக்கப் போகிறேன்.

எங்களின் பாடசாலையில் எட்டு வகுப்புகள் உள்ளன. புது வருடத்திற்கு பள்ளியில் இருக்கும் எல்லோரும் சிதம்பரேசர் நடராசர் கோயிலுக்குச் சென்றோம். இக் கோயிலை எங்கள் தமிழ்ப் பாடசாலைதான் நடத்துகிறார்கள்.

நால்வர் தமிழ்க் கல்வி நிலையத்தால் வருடா வருடம் விளையாட்டுப்போட்டி நடைபெறும். எங்களின் பள்ளியில் ஒவ்வொரு வருடமும் ஆண்டுவிழா மிகச் சிறப்பாக நடைபெறும்.

இத்துடன், நடனம், வாய்ப்பாட்டு, வயலின், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சியும் கலைவிழாவாக வெற்றியோடு நடைபெறும்.

**லிஷானி தில்லைராஜா, 13**




கலசம்
KALASAM

கலசம் உங்கள் வீடு தேடி வர வேண்டுமா? இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்

If you would like your KALASAM to be posted, please fill in the form below and send it to us with your payment—payable to SMS UK. Postage and admin for two years: £10.00 (UK/Europe); £20.00 (Rest of the world).


பெயர் : ........................................ Donation: £ ......

முகவரி : ........................................ Postage: £ ......

........................................ Total: £ ......

........................................

SMS Kalasam 2 Salisbury Road ,Manor Park, London E12 6AB lalasam@hotmail.com



## Palani Hill Temple

### THE MAIN DEITY THE MOOLAVAR AND THE MEDICINAL POWERS


### பழனி ஆண்டவரும் நவபாஷணமும்

The statue was made by Muni Bhoga, by mixing Nine minerals called Navapashanam in a specific proportion. The idol thus contains miraculous powers.

He has the look of a person who has renounced all worldly pomp. He has just a loincloth besides the baton. He is a mute messenger of the great precept 'Renounce all to reach Me'

The temple is believed to be built in 5-6th A.D by Cheraman Peruman. Later the constructions are extended by Pandyas and Nayak kings. The other names of Murugan at Palani are Kulanthai velan, Chinna Kumaran, and Dhandayuthapani.

The main Deity in most temples is carved out of stone. But the difference in Palani is that the idol of Dhandayuthapani(murugan) is made out of the 'navapashanam' or nine kinds of medicinal minerals blended together in right proportions creating a layer resembling and feeling like wax.



This idol has endured centuries of abhishekams. A ritual where the idol is anointed with milk, water mixed with sandal powder, and various other natural flavoured liquids. Over 700 abhishekams are done on Karthikai day alone. The endurance of this idol can be amounted as a modern day architectural miracle.

The nine paashanams used in this idol are the main constituents of siddha science, a medicinal scientific technique developed by Siddhas. But speaking in terms of modern science, the constituents or compounds used in the idol would evaporate even under the slightest heat and the probability that forming a structure by fusion of these compounds is nil.Yet we could see the solid proof of this marvel infront of our eyes in this temple- as Arulmigu Baladhandayuthapani Swami in the sanctum sanctorum of Palani

The privilege of constructing this miraculous architectural feat belongs to Sage Bogar, a veteran of a scientific custom called Siddha which has now almost vanished. .

The abhishekam water of the idol is said to absorb the medicinal powers of navapashanams and acts as cure to many diseases




During night the main deity is applied with sandalwood paste -sandhanam. The next day the sandhanam is taken off. It is then distributed to devotees.

There is a great rush to get this santhanam; because it naturally gets the medicinal powers by remaining on the idol the whole night. This is known as the 'Raakala Sandhanam' and is believed to have curative powers. People believe if this sandhanam is taken/eaten continuously for one mandalam, that is forty eight days, it cures of all the diseases in the body and soul.

**பழனி முருகன்- நவபாஷணம்**

பாலதண்டாயுதபாணியின் சிலா மூர்த்தத்தை போகர் எனும் மகா சித்த புருஷர் உருவாக்கினார். அதுதான் தொன்று தொட்டு பழனியிலுள்ள பூஜா விக்ரகம். அச்சிலைக்கு அபிஷேகித்த பஞ்சாமிர்தம், உடற்பிணியைப் போக்குகின்றது.

மேலும் தனிப்பட்ட சுவையும் நறு மணமும் கொண்ட இப்பஞ்சாமிர்தம் பல நாட்கள் வரை கெடுவதில்லை. விருப்பாட்சி மலையில் காய்க்கும் விருபாஷி வாழைப்பழத்தினால் செய்வதால் இது கற்கண்டு போல இனிக்கும். முருகனின் தெய்வீக அருளுடன் நவபாஷணங்களின் மருத்துவ குணமும் ஒன்று சேர்வதால் பல பிணிகளைப் போக்கும் மருந்தாகிறது இப்பிரசாதம் நவபாஷணங்களும் அவற்றின் மருத்துவக் குணங்களும் பின்வருமாறு:



1. லிங்க பாஷணம் - இருதய வலிமை தருகின்றது
2. குதிரை பாஷணம்- நரம்புகளை வலுப் பெறச் செய்கிறது.
3. கார்முகில் பாஷணம் - உடல் சூட்டைத் தணித்து சமமான நிலை தருகிறது.
4. செந்தூர பாஷணம் - சரும வியாதிகளைப் போக்குகிறது.
5. வெள்ளை (ஸ்வேத) பாஷணம் - சந்ததி விருத்திக்கு
6. ரத்த பாஷணம் - கண் கோளாறுகளை நிவர்த்தி செய்கிறது.
7. கௌரி பாஷணம் - உடலை வலிவடையச் செய்கிறது.
8. கம்பி நவச்சார பாஷணம் - உடலிலுள்ள துர்நீரை வியர்வை, சிறுநீர் மூலம் வெளியேற்றுகிறது.
9. சீதை பாஷணம் - மற்ற அனைத்து பாஷணங்களும் உடலில் கிரகிக்க உதவுகின்றது.

# எமது வளர்ச்சியில் உங்கள் பங்கு

தொட்டில் குழந்தையாய் மழலை சொன்ன போது அருகிருந்து கேட்டு மகிழ்ந்தீர்கள். ஆண்டுதோறும் உங்கள் முன் தோன்றி தோரணம்கட்டி செய்யும் பணிகளை நடை போட்டுக் காட்டிய போதும் கை தட்டிக் கரம் கொடுத்துத் தூக்கிவிட்டீர்கள்.

இல்ல பஜனை செய்தோம், நாயன்மார் புகழை நகரங்களுக்குப் போய் நிலை நாட்டினோம், தொண்டு செய்ய ஆளில்லாத அக்காலத்தில் ஆலயங்கள் உருவாகிய போது அங்கு போய் இரவு பகல் உழைத்தோம், மக்களின் நன்மை தீமைகள் தடைபடாமல் நடக்க கடைகளில்லாத கட்டத்தில் குத்து விளக்கும் கும்பமும், தெளிவான ஆலோசனையும் கொடுத்து அருகிருந்து அரவணைத்தோம்.

நாட்டில் மக்கள் வளமும் வளர நாமும் வளர்ந்தோம். பலரை வளர்த்தோம். நல்ல தலைவர்கள், தொண்டர்கள் வளர்ந்தார்கள். பணிகளும் வளர்ந்தன. எங்கள் இளைய பருவத்தின் இனிய இயக்கத்தைக் கண்டு இதய பூர்வமாக வாழ்த்தினீர்கள். இயன்ற வகையிலெல்லாம் எம்முடன் இசைந்து எமது அசைவுகளுக்கு நாடித் துடிப்பாக இருந்தீர்கள்.

நாளைய சந்ததிக்கு நல்லதொரு நால்வர் கலை நிலையம், மூத்தோருக்கு முனைப்பளித்து நால்வர் மூத்தோர் நிலையம், எழுத்துருவில் இறை உணர்வையும் ஞானத் தமிழையும் நாற்திசைக்கும் கொண்டு செல்ல இலண்டனில் முதலாவது சமயச் சஞ்சிகை – கலசம், அந்திமக் கிரியைக்கு அவசியமாகத் தேவை ஒரு சைவக் குருக்கள், எனப்பல பாரிய பணிகள் வெற்றியடையச் செய்ததால் அவை இன்று சங்கத்தை உலகறியச் செய்துவிட்டன.

நமக்கு ஒரு மண்டபம் தேவை என்று வீடு தேடி வந்து விளக்கினோம். "என்றோ செய்திருக்க வேண்டும் நீங்கள் இதை" என்று தட்டிக் கொடுத்து கட்டிடம் ஒன்று வாங்கிட கொட்டிக் கொடுத்தீர்கள். வாங்கியதை மூலதனமாக்கி மூர்த்திகள் நால்வரையும் முறையே வைத்துக் கோயிலாக்கி சமயமும் மொழியும் எல்லா வழியிலும் வளர்த்திட வாழ்வமைந்தது எங்களுக்கு. செய்ய வேண்டிய எல்லாம் செய்ய இடம் போதாதென்று யோகக் கலைக்கென்று அழகான இடமுமமைத்துக் கொடுத்தீர்கள்.

நல்ல வழி சொன்ன நால்வர் இருந்த இடத்தே ஆனந்தமளிக்க நடராஜரும் அவரருள் கொடுக்க அன்னையும் நல்லறிவு தர மூத்த பிள்ளையும் வந்து சேர்ந்து அருளாலயம் அமைந்துவிட்டது. இந்த அருள் நிறைந்த சந்நிதியில் காணும் அமைதி - அற்புதம்! அற்புதம்!! அதுவொரு ஆனந்த அனுபவம். பார்த்தால்தான் அதைப் பருகி நெஞ்சமுருகிட முடியும்.

இத்தனையும், இங்கு பதியப்படாத மற்றும் அத்தனையும் சமைந்திட வழி செய்தவர்கள் நீங்களே. உங்கள் நல்லாதரவும், வாழ்த்துமின்றி எமது எந்த ஆட்சிக் குழுவும் எதையும் சாதித்திருக்க முடியாது. உங்கள் சொத்தாக இருக்கும் இச்சங்கம் என்றும் நிலைத்து நின்று இன்னும் பல பணிகளை வெற்றியுடன் செய்திடத் திடம் பூண்டு நிற்கின்றோம்.

சங்கத்தின் பலதரப்பட்ட வளர்ச்சிகளின் நடுவே எங்கள் ஆலயத்தின் புனருத்தாரணமும் எம்மை எதிர்கொள்ளும் முக்கிய ஒன்றாகும். அங்கு அருள் புரியும் மூர்த்திகளாக உமா மகேஸ்வரர், வள்ளி + தெய்வானை + சுப்பிரமணியர், சிவதுர்க்கை, வைரவர், சண்டிகேஸ்வரர் ஆகியவர்கள் ஐம்பொன் அழகுப் படிமங்களாக வந்து விட்டார்கள். இவர்கள் வந்த பின் வருவேன் என பெருமாளும், பெருமானும் வர இருக்கிறார்கள். ஆமாம்!


ஐம்பொன் ஸ்ரீதேவி + பூதேவி + மகாவிஷ்ணுவும், சிவலிங்கம் + அம்பாள் சிலா மூர்த்திகளும் இன்னும் சில மாதங்களில் வந்துவிடுவார்கள். இவ்வாலயத்தின் கட்டிட நிதிக்காகவும் எமது பணிகள் எல்லாம் தொடரவும் வளரவும் உங்களின் உதவி கட்டாயமாகத் தேவைப்படும் ஒரு கட்டத்தில் நீங்கள் வளர்த்த சங்கம் நிற்கின்றது. இதுவரை எமது பணிகளில் இருந்த உண்மை இன்னும் பல்லாண்டுகள் நீடித்து நிலைத்து நிற்க இவ்வெழுத்துக்கள் உங்களைத் தேடி வந்துள்ளது. தயவு செய்து உதவி செய்யுங்கள். செய்தவற்றிற்கு நன்றி. செய்ய முனையும் உதவிகளுக்கும் நன்றி.

வணக்கம்.

இப்படிக்கு

என்றும் உங்கள் சேவையில் சங்கம் தொடர உதவி கேட்கும்

சதாசிவம் ஆனந்ததியாகர்
(கௌரவ பொதுச் செயலாளர்)




தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

லட்சுமி ஜுவலர்ஸ்

276 High Street North London E12 6SA UK

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை

WESTERN
Jewellers



வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்று கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.

**First Srilankan Jewellery shop in UK**

*Specialise in 22ct Gold, White Gold, Platinum & Diamond Jewellery.*

*Tooting Branch.*
230 Upper Tooting Road
London SW17 7EW
**Tel: 020 8767 3445**

*Wembley Branch.*
5,Plaza Parade, 29-33 Ealling Road,
Wembley, Middlesex HA0 4YA
**Tel: 020 8903 0909**



Season's Best is Summer, Saree's Best is Silk Emporim Sarees

SILK
EMPORIUM

122 Upper Tooting Road
London SW17 7EN
Tel: 02086721900

OPENING HOURS : MONDAY - SATURDAY (10.30 am - 6.30pm) , SUNDAY (11.30am - 6.30pm)